விலை ரூபா 2-00 ★ 16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 | ஆனி 24 | ஷவ்வால் 8 | யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | (8—7—84) | இதழ் 144

## மரண தண்டனை?

(லாகூர்)

இந்திய விமானத்தைக் கடத்திய எட்டுப் பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுமா?

பாகிஸ்தான் லாகூர் நீதிமன்றத்தில் இவர்கள் மீது வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் சட்டப் பிரமாணங்களின்படி விமானக் கடத்தல்காரர்களுக்கு விதிக்கப்படும் தண்டனை மரணதண்டனையாகும். (சூ)

# தமிழர்கள், சிங்களவர்களினல் பயங்கரவாதம் உருவாகவில்லை!

## ஜனதிபதி ஜே. ஆர். கூறுகிருர்

(கொழும்பு)

''பயங்கரவாதம் தற்போது சர்வதேசப் பிரச்னையாக மாறிவிட்டது. இலங்கையில் இத்தகைய பயங்கரவாதம் தமிழர்களினலோ அல்லது சிங்களவர்களினலோ உருவாக்கப்படவில்லை. சர்வதேசப் பயங்கரவாதிகளினலேயே இது உருவாக்கப்பட்டுள்ளது'' என்று ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஜோன். டி. சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தேசிய சுகாதார தாதிமார் தொழில்சங்க வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், ''தற்போது உலக நாடுகள் அனைத்திலும் பெரும் பிரச்னையாகிவிட்ட இந்த சர்வதேச பயங்கரவாதம் இலங்கையில் வடக்கு, தெற்கு பகுதிகளிலும் பரவியுள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குமுக்கிய தடையாக இருக்கும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு சகல இனமக்களும் அரசாங்கத்துக்கு உதவவேண்டும், இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இனமக்களினதும் சொந்த நாடாகும் எனவே இந்த நாட்டை பயங்கரவாதத்திலிருந்துகாப்பாற்ற இந்த மூன்று இனமக்களும் முன்வரவேண்டும்,

(16ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அழகிக்கு வீட்டு நினைவு வந்து விட்டது!

### ✱ அதனலேயே திரும்பி வருகிருர்!!

(கொழும்பு)

உலக அழகில்போட்டியில் கலந்துகொள்வதற்காகச் சென்றுள்ள இலங்கை அழகியான சந்திராநில்மினி இட்டமல் கொட கடைசிநேரத்தில் போட்டியில் கலந்துகொள்ளமல் திரும்பியிருக்கிருர் அல்லவா?

இவரது இந்தத்திடீர் முடிவுக்கு அமெரிக்காவிலுள்ள இடம்பெயர்ந்த தமிழர்கள் ஏற்படுத்திய இடைஞ்சல்கள் தான் காரணமென இலங்கையில் வதந்தி பரவியுள்ளது.

இந்தவதந்தியில் எதுவித

(16ம் பக்கம் பார்க்க)

## டெலிக்கா வான் கடத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஒருலட்சத்து முப்பதினயிரம் ரூபா பெறுமதியான 'டெலிக்கா' வானை இனந்தெரியாத இருநபர்கள் பயமுறுத்திக்கடத்திச் சென்றுள்ளனர்.

பிறவுண் வீதியில் இருக்கும்

(16-ம்பக்கம் பார்க்க)

### இலங்கைத் தமிழர் பிரச்னே:

## கருணநிதி தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டம்!

(சென்னை)

தமிழ்நாட்டில்லுள்ள இலங்கைத் துணைத்தூதுவர் காரியாலயத்துக்கு முன்னல் திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைமையில் 14 கட்சிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தின.

இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக நடத்தப்படும் கொடுமைகளுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்துக்கு திரு. மு. கருணநிதி தலைமை வகித்தார்.

கடந்த மூன்ரும் திகதி நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின்போது துணைத்தூதுவர் காரியாலயத்தை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாக சென்றபோது காரியாலயத்திற்கு அருகாமையில் வைத்து பொலிசார் தடுத்து நிறுத்தினர்கள். சுலோக அட்டைகளைத் தாங்கிச்சென்ற இவர்கள் சுலோகங்களையும் கோஷித்தனர்.

தமிழர்களும் முஸ்லிம்களும் பாலஸ்தீனமக்களின் நிலைக்குத் தள்ளுபடுவதற்குமுன் இலங்கையிலுள்ள இஸ்ரேலிய உளவுப் படையான 'மொசாட்' வாபஸ்பெறப்படவேண்டும் என்று எழுதிய கோஷஅட்டைகளை அவர்கள் தாங்கிச்சென்றனர்.

தி.மு. கழகத்துடன் இந்திய கம்யூனிஸ்ட்கட்சி, ஜனதா கட்சி, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் லோக்தல், காங்கிரஸ் ஜே. தொழிலாளர்கட்சி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உட்பட 14கட்சிசள்இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## "முன்னள் முதலமைச்சர்! அவர் எங்கும் ஓடமாட்டார்!!"

### கருணநிதியை விடுவித்த நீதிபதிகூற்று!!!

[சென்னை]

தி. மு. க. தலைவர் திரு.மு. கருணநிதி நேற்றுக்காலை சென்னையில்கைது செய்யப்பட்டார்.

பால் கமிஷன் அறிக்கை சம்பந்தமாக கருணநிதி மீது தொடரப்பட்டுள்ள வழக்கில் அவர் பல தடவைகள் நீதிமன்றம் செல்லாததினல் அவர் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள வாரண்ட் தொடர்பாகவே அவர் பொலிசாரினல் கைது செய்யப்பட்டார்.

சென்னை கோபாலபுரம் பகுயில் அமைந்துள்ள தமது இல்லத்தில் வைத்தே கருணநிதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட தி. மு. க. தலைவர் பின்னர் எழும்பூர்

(16-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் மூன்று இளைஞர் சடலங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் மூன்று இடங்களிளில் சுடப்பட்டு மரணமான மூன்று இளைஞர்களின் சடலங்கள்நேற்றுஇரவு காணப்பட்டன.

ஐந்துமுச்சந்தி, கன்னதிட்டி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இச் சடலங்கள் கோரமாக சுடப்பட்ட நிலையில் கிடந்தன.

விசாரணைக்குப் பின் வழங்கப்பட்ட ''தண்டனை' களின்எதிரொலியாக இம்மரணங்கள் சம்பவித்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## காரைமறித்து ஏறியவர்கள் நகைகளைக் கொள்ளையிட்டனர்

### ஆறு இளைஞர்களின் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

காரில் சென்றுகொண்டிருந்த தம்பதிகளை ஆறுபேர் கொண்ட இளைஞர் கோஷ்டி பலவந்தமாகக் கடத்தி அவர்களிடமிருந்த சுமார்70 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளையும் பணத்தையும் அபகரித்துக்கெண்டு சென்றுள்ளது.

கரில் சென்றுக்கொண்டிருந்த இத்தம்பதியை ஆறு இளைஞர்கள் வழிமறித்து நிறுத்தி அக்காரிலேயே செம்மணி மயானம் வரை அவர்களைக்கடத்திச் சென்று அவர்களிடமிருந்த தாலிக்கொடி, 3 சோடிக் காப்புகள், ஒரு சச்கிலி, மோதிரம் மற்றும் 300 ரூபாய் ரொக்கம் முதலிய வற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு அவர்களை இறக்கி விட்டு காருடன் சென்றுள்ளனர்.

கடத்தப்பட்டகார் கே.கே. எஸ். வீதியில் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### இலங்கை வங்கிக் கொள்ளை:

## கிளிநொச்சிக் காட்டில் இரும்புப் பெட்டி!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள இலங்லக வங்கிக் கிளையில் கொள்ளைபோன இரும்புப் பெட்டி உடைக்கப்பட்ட நிலையில் நேற்று பகல் பொலிசார் கண்டுபிடித்தனர்.

பதின்னன்கு லட்சம் ரூபாய் பணம் இந்த இரும்புப் பெட்டிக்குள் இருந்தது. இந்தப் பெட்டியின்முன்பக்கம் உடைக்கப்பட்டு வெற்றுப்பெட்டியாக கிளிநொச்சி தேக்கங் காட்டில் இந்த இரும்புப்பெட்டி அனதரவாக இருந்தது.

கிளிநொச்சி சந்திக்கு அருகாமையில் இந்தத் தேக்கங்காடு உள்ளது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Northtown Cross Broilers (சிவப்பு, கறுப்புப்புள்ளி) ரூபா 4/50. R.I.R., Light Sussex, கறுப்பு வான்கோழி நாள் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ராதாகிருஷ்ணஸ், 392, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி. [713]

கொக்குவில், குளப்பிட்டிச் சந்திக்கண்மையில் இரண்டு பரப்பு வெறும் காணியும், கொக்குவில் சேர்ச் ஒழுங்கையில் ஒரு பரப்பு வெறும் காணியும் உடனே விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் தரப்படும். உடன் தொடர்பு; திருமதி அனுஷியா நடேசலிங்கம், சட்டத்தரணி, செம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 719

யாழ். வளாக பின்புற தபால் பெட்டி ஒழுங்கை முகப்புக் காணி 4 பரப்பு பகுதியாகவோ முழுமையாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு: லங்கா ரேடிங் அயன் வேக்ஸ், 71, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 23856. (727)

யாழ். மாநகரத்தில் கண்டி ரோட் மாம்பழச் சந்திக்கருகில் நாவலர் வீதி கனகரத்தினம் வீதிச்சந்தியில் மூன்று பரப்புக்காணியும் பெரிய வீடும் (மின்சாரம், கிணறு வசதிகளுடன்) வெறுமையான நிலையில் உடன் விற்பனைக்குண்டு. முன்பகுதியை மருத்துவநிலையமாகவும் வர்த்தக நிலையமாகவும் உபயோகிக்கலாம். தொடர்பு: மாணிக்கவாசகர், 857, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 730

மிருசுவில், பாம் வீதி (Farm Road) மேற்குப்பகுதியில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்திற்கு அருகில் 2 பாரிய கிணறுகள், தென்னை செவ்விளநீர் பிள்ளைகள், மா, பலா, தோடை உட்பட 4 (நாலு) ஏக்கர் கமம்செய்யத் திறமான தோட்டம் விற்பனைக்குண்டு விபரம்: K. B. சுந்தரம், நா. சாம்பசிவம் அன் கோ. 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 725

நாவற்குழி-கேரதீவு வீதியில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் வீடு கட்டக்கூடிய ஆறரைப்பரப்புக் காணி நன்னீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- ஆர். பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி, வைமன் வீதி, யாழ்ப்பாணம், போன்: 22334. (687)

நுணுவில் சந்தியில் கண்டி ரோட்டிற்கு அருகாமையில் வீடு, நன்னீர்க் கிணறு, மின்சார வசதியுடன் (அண்மையில் கட்டியது) மற்றும் வசதிகளுடன் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. எஸ். சண்முகவடிவேல் 64, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 609

யாழ் கொழும்புத்துறை வீதியில் சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சாமிநாதர் 18/4 மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். 661

அராலி தெற்கு ஊரத்தி நடுப்பகுதியில் நல்ல பள்ள நெல்காணி 20 பரப்பு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கடிதமூலம் வீ. செந்தூர்நாதன், உரும்பராய் தெற்கு. 666

### FOR SALE

12 Sri Lancer Station Wagon with Radio and Air/Con. in good cond tion. Jimmy Rajaratnam, 24, Kandy Road, Jaffna. 740

## விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் ஐயனார் கோவிலுக்கு அருகிலும், பிரதான வீதிக்கு 50 யார் தூரத்திலும், 10 பரப்பு காணி, 15பரப்புதோட்டக்காணியும் (கிணறு உட்பட) விற்பனைக்குண்டு. தொடர்பு: ப. செகராஜசேகரன், குருக்கள் கோவிலடி, நவாலி வடக்கு, மானிப்பாய். 720

திருகோணமலை சிவன் கோவில் பின்புற பிரதானவீதியில் 2 பரப்பு உடன்விற்பனைக்குண்டு. கூடிய விலை கேட்பவருக்கு கொடுக்கப்படும். விபரங்களுக்கு; வீ. யோ. ராஜசிங்கம், 50, இருபாலை ரோட், கோண்டாவில். 724

சாவகச்சேரி நீதிமன்றத்திற்கு முன்னால், றிபேக் கல்லூரிக்கு அருகில், ரயில் நிலையம், ஆஸ்பத்திரி, சுப்பர் மார்க்கட் ஆகியவற்றுக்கு அண்மையில் நான்கு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: தொலைபேசி இல: 83784- கொழும்பு அல்லது ''சரஸ்வதி கார்டன்ஸ்'', சாவகச்சேரி, தொலைபேசி: 273. (743)

அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகாமையில் கனகரத்தினம் வீதியில் 4 பரப்புகாணி விற்பனைக்கு உண்டு. முழுமையாகவும் இரு துண்டுகளாகவும் கொடுக்கலாம். தொடர்பு: Dr. V. உருத்திரேஸ்வரன் 45, புங்கன்குளம் வீதி, அரியாலை. தொலைபேசி: 22666 (718)

மயிலிட்டி வடக்கில், கட்டுவன்-மயிலிட்டி ரோட்டிலிருந்து ¼ மைல் தூரத்தில் இருநூறு பரப்பு பண்படுத்தப்பட்ட தோட்டநிலம் விற்பனைக்கு உண்டு. வி. எஸ். கணேசலிங்கம், சட்டத்தரணி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை- 752

வீட்டுப்பாவனைக்கு உரிய ''அல்பா'' பெரிய கபினட்' ''K. D. K.'' மேசை மின் விசிறி, ''கிளஸ்யோ'' பெரிய சைஸ் குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு. 220, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 768

Austin A 40(பரினமொடல்] 3 சிறி தொடர்இலக்கமுடைய கார் உடன் விற்பனைக்குண்டு. 65, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 769

யாழ்ப்பாணம் கச்சேரி-நல்லூர் ரோட் அருகாமையில் 2 பரப்பு காணி. தொடர்பு: 86 (பு. இ. 286) கச்சேரி நல்லூர் ரோட், 765

கற்பூர வில்லைகள் அடிக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. ஒரு நிமிசத்திற்கு ஐம்பத்தி ஐந்து வில்லைகள் அடிக்கும். அ.கனகசிங்கம், சொனிக்ஸ் வீடியோ சென்ரர், (சந்தைக் கருகாமையில்) மானிப்பாய். 744

அம்மி, ஆட்டுக்கல், கல்உரல் திருகை, கோவில் தளவரிசைகள் அனைத்தும் கருங்கல்லில் கைதேர்ந்த கலைஞரால் கடையப்பட்டது. தயாரித்து விநியோகிப்பவர்கள், சூரியா ஸ்டோர்ஸ், வவுனியா. சுண்ணாகத்தில் கிடைக்குமிடம்; ஈஸ்வரி இரும்புக்கடை, கே.கே எஸ் வீதி சுண்ணாகம் 706

நுணுவில் சந்திக்கருகாமையில் லயன்ஸ் கழகத்துக்கு முன்பாக கண்டி ரோட்டில் 5பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:சு,குகேந்திரன்' மருதனமட ரோட, உரும்பிராய். 745

**PHOTO STAT**
பிரதிகளுக்கு
**கொழும்பு ஸ்ருடியோ**
யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

'செற்று பாம்' ஒரு நாள் பேட்டுக்குஞ்சும் (B300, B380) ரோஸ் புரொயிலர் குஞ்சும், சாவற்குஞ்சும் 17/7/84 இல் விநியோகிக்கப்படும். தேவையானோர் முன்கூட்டியே பதிவு செய்யவும் விபரங்களுக்கு: R.S.K.Industries R.Sகிருஷ்ணமோகன். முருகபதி, உடுவில்.கவுரி போறேஸ் ஸ்டோஸ் யாழ்ப்பாணம்.சிக்கன்கைன்ஸ் யாழ்ப்பாணம். 756

நாவற்குழியில் கண்டி வீதியில் காணிகள் கொள்முதல் செய்து வர்த்தக நிலையங்கள், கைத்தொழில்சாலைகள். வீடுகள் அமைத்து விற்கவும் வாடைக்கு விடவும் விரும்புவோர் விண்ணப்பிக்கவும். வரிவிலக்குண்டு. திருஞானஸ், 141 மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம். 759

மாவிட்டபுரம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் இரண்டு நிலப்பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணியும்: நாலு அறைகள் [illegible] கொண்ட வீடும் விற்பனைக்குண்டு.வி.எஸ் கணேசலிங்கம், சட்டத்தரணி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 751

டாக்டரின் சொந்தப் பாவிப்பிலுள்ள 3 சிறீ மொறிஸ் ஒக்ஸ்போட் கார் சிறந்த நிலையில் உடன் விற்பனைக்குண்டு. மகப்பெறுவும் பிணிதீர்மனையும், சந்தைச்சதுக்கம், சங்கானை. 746

### SALE

ICMA Sugested Answers Professional Part I, May 82. November 82, May 83, November 83, B. P. P. Manual P I Economic Analysis and B P P Manual Level 2 A. C. C. A. Quantitative Analysit Suitable for QT. Contact Administrative Officer, Kopay Public Market, Kopay. 749

## தேவை

குருநகரில் இருக்கும் றூல் வாடிக்கு றூல் கிறேடிங் தெரிந்த பெண் பிள்ளைகள் உடன்தேவை. அனுபவசான்றிதழ்களுடனும் கிராமசேவையாளரின் நற்சான்று பத்திரத்துடனும் விண்ணப்பிக்கவும். முகவரி: எடிசன், மே/பா மேரிரோஸ், 129, 2ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். நேர்முக பரீட்சை 14ம் திகதி காலை 8-00 மணிக்கும் 10-00 மணிக்குமிடையில் நடைபெறும். 758

உயர்குல செவ்வாய்க் குற்றமுள்ள B. A பட்டதாரி ஆசிரியைக்கு பெற்றோர் 35—38 வயதிற்கிடைப்பட்ட மணமகன் தேடுகின்றனர். சீதனம் வீடு, வளவு, காசு கொடுக்கப்படும். மணமகனின் பதவி கவனிக்கப்படும். தொடர்பு; விளம்பர இலக்கம் 750, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 750

மேற்கு ஜெர்மனியில் ஐந்து வருடமாக வாழும் இந்து உயர்குல 32 வயது மணமகனுக்கு வெளிநாடு செல்லக்கூடிய மணமகள் தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம்: 754, ஈழநாடு, யாழ்ப்பாணம். 754

பெண் காரியாலய பயிலுனர் (Female office Trainees), ஆபீஸ் பையன், லேத் விளக்குனர் . (Lathe Instructor) தேவை. ராதாகிருஷ்ணஸ், 392, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 712

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண்/பெண் இருபாலாரும் தேவை. அனுபவமுள்ளவர்கள் நேரில் தொடர்கொள்ளவும். த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், யாழ்ப்பாணம். 771

வீட்டில் வந்து பெண் பிள்ளைக்கு ஆங்கிலம், விஞ்ஞானம் போதிக்க ஆசிரியை தேவை. தொடர்பு: ஆறுமுகநாதன், 56, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 766

## தேவை

நல்ல நிலையிலுள்ள Volks Wagon 1300 தேவை. நிறத்தையும் விலையையும் குறித்து விண்ணப்பித்தல் விருபபத்தக்கது. விளம்பர இல: 681 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 681

### WANTED

Wanted experienced Book-Keeper part-time or full-time. Maintain set of books for two Theatres. Salary negotiable. Apply Santhi Theatre, Jaffna. 732

## சோதிடம்

கைரேகை, சோதிடம், பிறநாட்டுப் பிரயாணம், தொழில் வாய்ப்பு, உயர்கல்வி தேர்வு, காதல், கல்யாணம், தீராத நோய்கள், சிறந்த திருமணப் பொருத்தம் இவற்றிக்கான ஆலோசனை பெற இராசேந்திரன் 'திருவுளம்' அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் ரோட், கொக்குவில், 770

## கல்வி

G. C. E. (A/L) தூய/பிரயோக கணிதம், சிறப்புப் பட்டதாரி ஆசிரியரினால் கிழமை நாட்களில் மாலை நேரத்திற் கற்பிக்கப்படும். சிறு குழுக்கள் ஒழுங்குசெய்யலாம். இடம்: யாழ்ப்பாணம், சுண்டிக்குளி. மாணவர் தொகை இடம் என்பன குறிப்பிட்டுத் தொடர்புகொள்ளவும். விளம்பர இலக்கம் 663, C/o ஈழநாடு. 663

G. C. E. (O. L) கணிதம் 15 வருட அநுபவம்பெற்ற ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்காக குறைந்தகாலத்தில் வீடுகளிற் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10,கச்சேரி ஒழுங்கை, சுண்டிக்குழி. 767

### புங்குடுதீவு – நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கேள்விப்பத்திரம் – படகு விற்பனை

இரண்டு வருடம் சேவையிலுள்ள, மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான படகு கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. விண்ணப்பத்திற்குரூபா 100/-ம் (மீளச் செலுத்தப்படமாட்டாது) வைப்புப் பணமாக ரூபா 2000/-ம் (மீளச் செலுத்தப்படும்) செலுத்தி சங்கத்தில் கேள்விப்பத்திரங்களைப்பெற்று 25-7-84ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் பொது முகாமையாளர் புங்குடுதீவு - நயினாதீவு பல. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு. என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

என்வலப்பில் இடது பக்க மூலையில் ''படகுக்கான கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**விபரங்கள்**

..................

| | | |
|---|---|---|
| படகு நீளம் | 42' | 4½'' |
| படகு அகலம் | 12' | 2¾'' |
| படகு ஆழம் | 06' | |

புதிய யன்மார் மரைன் என்ஜின் - 3 ESDE - 56 to 85 குதிரைச் சக்தி (Horse Power)

படகைப் பார்வையிடுவதற்கும் மேலதிக விபரங்களை அறிவதற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும். ரூபா 2,00,000/-க்கு குறைந்த கேள்வி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பொதுமுகாமையாளர்**
புங்-நயி. பல. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு.

புங்குடுதீவு,
4-7-84
742

### 31ம் நாள்

## அந்தியேட்டி அழைப்பு

செல்வன்

### சுப்பிரமணியம் ஸ்கந்தரூபன்

தோற்றம்:
23-1-1957

மறைவு:
7-6-84



7-6-1984 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புச் செல்வம் ஸ்கந்த ரூபனின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் 8-7-84 ஞாயிற்றுக்கிழமை அன்னரது வீட்டில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்

உயரக்கடவை
அளவெட்டி தெற்கு,
7-7-84

திரு. திருமதி
க. சுப்பிரமணியம்
குடும்பத்தினர்
757

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

# யாழ்ப்பாணத்தில்

# தூய செந்தமிழ் வழங்க

# கந்தபுராண படனமே

# மூலவித்து !

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணத்தில் தூய செந்தமிழ் வழங்குதற்கும் சைவசித்தாந்த உணர்ச்சி மேலோங்குதற்கும், மூலவித்தாய் அமைந்திருந்தது, கந்தபுராண படனம்

○ சின்னஞ்சிறிய கிராமங்களிலுள்ள, சிறுகோயில்கள் உட்பட, எல்லாக் கோயில்களிலும் புராணபடனம் நடந்து வந்தது. விசேட படிப்புக்கள் தவிர, ஏனையவை மாலைநேரத்தில் நான்கு மணி தொடக்கம் நடைபெறும். மகேந்திரகாண்டம், ஒரு நாளில் படித்து முடிப்பது சம்பிரதாயம்; விரைந்து வாசிப்பவரையும், விரைந்து பயன் சொல்லுவோரையும் அழைப்பது வழக்கம். கேட்கும் மக்களில் பெண்களே பெரும்பாலராயிருப்பவர். அவர்களில் பலருக்குக் கந்தபுராண பாடல்கள் விடும் தவறுகளையும் உணரும் சக்தி அப்பெண்கள்பாலிருந்தது.

இத்துணையும் பழைய கால சம்பவம். இக்கால நிலையை விபரிக்க வேண்டுவதில்லை. வருஞ் சந்ததியார் கந்தபுராணம் என்ற பெயரையே அறியாதவர்களாகலாம். இந் நிலையில்,

நமது போக்கை எடுத்துக் காட்டும் முகமாகப்போலும், கந்தபுராணத்தில் உற்பத்திக் காண்டத்தை உரையுடன் வெளியிடத் துணிந்து முன் வந்திருக்கின்றார். மறவன்புலவு திரு மு. கணபதிப்பிள்ளை. பொருட்செலவைப் பொருள் செய்யாது எழுந்த அவர் துணிவு, பெரிதும் பாராட்டற்பாலதாம்

# ம. க. வேற்பிள்ளை உரைகளுக்கு

# சமமாக மதிக்கத்தக்க உரை

கலாநிதி சு. வித்தியானந்தன்
துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்

> பருத்தித்துறை பிரமஸ்ரீ ச. சுப்பிரமணியசாஸ்திரி அவர்கள் எழுதிய கந்தபுராணம் - உற்பத்தி காண்டம் உரை நூல் மூன்றும் பதிப்பாக 12-7-84 வியாழக்கிழமை யாழ். நகரில் வெளியிடப்படவுள்ளது. மறவன்புலவைச்சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியரும் யாழ். ஸ்ரீகாந்தா அச்சக உரிமையாளருமான திரு. மு. கணபதிப்பிள்ளை இந்நூலை அச்சேற்றி வெளியிடுகின்றார்.

தமிழ்ப் புராண இலக்கியப் பரப்பிலே கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்த புராணம் முப்பெரும் பண்பாட்டுக் கூறுகளின் இணைப்பாகத்திகழும் சிறப்புடையது இதன் கதை வடமொழியின் ஸ்காந்த மஹா புராணத்தினின்று பெறப்பட்டது தமிழ்க்காப்பிய அமைப்பிலே இது புலப்படுத்தி நிற்கும் தத்துவம் தமிழருக்கே சிறப்புரிமை பூண்ட சைவசித்தாந்தமாகும். தமிழகத்தின் காஞ்சிபுரத்திலே தோன்றிய இந்நூலை 'புராண படனம்' எனப்படும் பொருள் விரித்துரைக்கும் முறைமையாற் பேணிவரும் சிறப்பு ஈழத்திற்குரியது ஈழத்தின் சைவத் தமிழரின் - சிறப்பாக யாழ்ப்பாணத்துச் சைவத்தமிழரின்- கலாசாரத்தினைக் 'கந்த புராண கலாசாரம்' எனச் சிறப்பித்துப் பேசுமளவிற்கு அது ஈழத்துத் தமிழ்ப்பண்பாட்டில் இணைந்துள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நூலின் சில காண்டங்களுக்குப் பருத்தித்துறை பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரை இயற்றியுள்ளார். அவ்வுரையின் ஒரு பகுதி உற்பத்தி காண்ட உரை இப்பொழுது புதுப்பதிப்பாக வெளிவருகிறது.

பிரம்மஸ்ரீ ச சுப்பிரமணிய சாஸ்திரிகள் பேராசிரியர் க சணபதிப்பிள்ளையின் ஆசிரியரான பருத்தித்துறை முத்துக்குமாரசுவாமிக் குருக்களின் மருகராகவும், மாணுக்கராகவும் திகழ்ந்தவர். தமிழ், வடமொழி, சோதிட நூற்றுறை ஆகியவற்றிலே துறை தோய்ந்த புலமை பெற்றவர். அத்துடன் ஈழத்தின் முருகன் தலங்களில் ஆண்டுதோறும் பல மாதங்கள் தொடர்ந்து படித்துப் பயன் விரித்துரைக்கப்படும் 'புராண படன' மரபை நன்கு அறிந்தவர். இத் தகுதிகளே இவ்வுரை நூலை அவர் யாத்தற்குரிய அடிப்படைகளாயின.

சாஸ்திரிகள் இயற்றிய இவ்வுரை ஈழத்திலே பல தலைமுறைகளாகப் பேணப்பட்டு வரும் புராண படனம்' என்ற வாய்மொழி மரபின் ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி என்பது தெளிவு அவ்வகையில் இதனைப் பொதுவாக அவரது பண்பாடுபேணும் பணிகளில் ஒன்றாகக் கொள்ளலாம் இத் தொடர்பிலே 'உரையாசிரியர்' எனப்படும். ம. க. வேற்பிள்ளையவர்களின் உரை முயற்சிகளோடு உடன் வைத்து மதிப்பிடத்தக்க தகைமை இவ்வுரைக்குரியது

சாஸ்திரிகளின் உரையின் சிறப்பியல்புகளில் ஒன்று அதன் எளிமையாகும். இலக்கண நுட்பங்களையும் புராண வரலாற்றுச் செய்திகளையும் தத்துவப் பொருண்மைகளையும் சராசரி மொழியறிவுடையவர்களும் விளங்கிக் கொள்ளத்தக்கவகையில் சிறு சிறு வாக்கியங்களில் பொருத்திக் காட்டிய இவரது முயற்சி இத் துறைகளில் இவருக்கிருந்த தெளிவைப் புலப்படுத்துவதாகும்.

சாஸ்திரிகளின் உற்பத்தி காண்ட உரை அவரது வாழ்நாளில் இருமுறை பதிப்பிக்கப்பட்டதாகத் தெரிகின்றது அப்பிரதிகள் இப்போது கிடைப்பதில்லை. எனவே புதிய பதிப்பு ஒன்று இன்றைய காலத்தின் தேவையாக இருந்தது. இத்தேவை இருவகைப்பட்டது அவற்றுள் ஒன்று புராண படனமரபை வளர்ப்பது புராணத்திற்குப் பயன் கூறும் திறன் மிகுகோர் அருகிவரும் இந்நாளில் அடுத்து வரும் பரம்பரைக்கு இம்மரபை இனங்காட்ட இத்தகைய புதிய பதிப்புகள் அவசியமாகின்றது.

## குன்றக்குடியடிகள்

## பாராட்டு

''உரை மிகத் தெளிவாக அமைந்துள்ளது. புத்தகம் அழகுற அமைந்துள்ளது தங்களுடைய முயற்சி, செழுந்தமிழ் வழக்கிற்கு அணி செய்யும் முயற்சியாகும்.''

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி குருமகா சந்நிதானம். இந்நூல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

# வேண்டப்படுவது

# வேளாண்மை

உண்டு உடுத்து உயிர்வாழும் உரிமை இன்று மனிதனின் அடிப்படை உரிமைகளில் முதலாவதாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

வாழ்வதுமட்டுமல்ல சிறப்பாகவாழ அவனுக்கு வேண்டிய கல்வி தொழில்போன்ற தேவைகள் இரண்டாவதாகக் கணிக்கப்பட்டுள்ளது

அடிப்படை உரிமைகள் என்னவென்று தெரியாத காலத்தில் இந்து தர்மத்துக்கமைய பாடசாலைகளையும் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, சிறுவர் இல்லம் போன்ற நிறுவனங்களையும் அமைத்துப் பரிபாலித்தவர் 'இந்து போட்' இராசரத்தினம் அவர்கள்! தமது கடைசி காலத்தில் தமது முழுக்கவனத்தையும் 'சைவச்சிறுர் இல்லத்தில்' செலுத்தினுரென்பது எங்கள் நினைவுக்குரியது.

ஒவ்வொரு மனிதனில் இயல்பாக உள்ள தெய்வீகம் விருத்தியடைய வேண்டுமென்பதற்காகவே கல்வியும் சமயமும் அவசியமாகின்றன.

இதற்குரிய பரோபகாரத்துக்கு நாம் அரசை நம்பியிருக்கலாகாது.

பாடுபடுவதும் பாடுபட்டுப் பொருள் சம்பாதிப்பதும் எதற்காக? வேளாண்மை செய்தற் பொருட்டு என்கிறார் வள்ளுவப்பெருந்தகை

வேளாண்மை என்பது கைம்மாறு வேண்டாமல் பிறருக்கு உதவும் உபகாரவாழ்க்கை.

எனவே இன்று திருநெல்வேலி சைவச்சிறுர் இல்லத்துக்கு அவசிய தேவை வேளாண்மை செய்வோர் எனபதை அறிக.

# மிருகங்கள் மீது

# இந்திராவுக்கு

# கொள்ளை அன்பு !



ஒரு முறை மூன்று புலிக்குட்டிகளை நேருவுக்கு அன்பளிப்பாக ஒருவர் வழங்கினுர்

அவைகளைத் தன் தோட்டத்திலேயே வளர்க்க இந்திரா விரும்பினுர்.

குழந்தைகளான ராஜீவ் சஞ்ஜையையும் அவை கவர்ந்து விட்டன. மிருக வளர்ப்பு நிபுணர் ஒருவர் அவை அடைக்கப்பட்ட கூண்டின் தரைக்கு சிமெந்து இடச்சொல்ல சிமெந்தும் உடனடியாக இடப்பட்டு அது உலரமுன்னர் புலிகளும் விடப்பட்டன இதனுல் அவற்றின் கால்கள் புண்ணுகிவிட்டது.

மிருகவைத்தியர் ஒருவர் அழைக்கப்பட்டு சிகிச்சை செய்து அவற்றில் இரண்டு குணமடைந்தன. ஒன்றுக்கு மயக்க மருந்து கொடுக்க வேண்டி ஏற்பட்டது இது இந்திராவுக்கோ நேருவுக்கோ தெரியாது.

மயக்கம் அதன் உடல் நிலையை மோசமாக்கிவிட்டது

''விசயம் தெரிந்ததும் எனக்கு என்ன கோபம் வந்தது தெரியுமா? உடனடியாக வேறொரு வைத்தியரை அழைத்துப் பார்க்கச் சொன்னேன் ஐந்து நாட்கள் அந்தப் புலி கண் விழிக்கவில்லை அந்த ஐந்து நாட்களும் தவருது மருந்து கொடுக்கவேண்டி வந்ததால் நானும் இன்னொரு அதிகாரியும் இரவுமுழுவதும் அதன் அருகிலேயேகண்விழித்திருந்தோம்! அதன் உடல்சற்றுத் தேறியதும்தான் எனக்கும் குழந்தைகளுக்கும் சிரிப்பே வந்தது'' என்கிறார் பிரதமர் இந்திரா. புலிகள் பெரிதாக வளர்ந்ததும் அவற்றை

(15-ம பக்கம் பார்க்க)

## பம்பாய் வெங்காயத்துடன் நீரில் மூழ்கிய சிங்கப்பூர்க் கப்பலின் காப்டன், ஊழியர்களுடன் ஒரு சந்திப்பு:

# தரையில் பிறந்த மீன் குஞ்சுகள்!



காப்டன் சிவநேசன்

ஆழ் கடலில் கப்பல் விடுவதில், வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகள் தனிக்காட்டு 'ராஜா'க்களாகத் திகழ்கிறார்கள்!

இந்திய மன்னர்கள் இவர்களைக் கௌரவித்தார்கள்!

இன்றல்ல, நேற்றல்ல-

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னரே இந்தக் கௌரவத்தைப் பெற்றனர்!

வங்காள விரிகுடாவில்,

அத்திலாந்திச் சமுத்திரத்தில்,

பாய்மரக் கப்பல்களில் அடலேறுகளாகப் பவனி வந்திருக்கிறார்கள்.

'தண்டையல்கள்' என்று கப்பல் காப்டன்கள் அழைக்கப்பட்ட காலத்தில் பயங்கரங்கள் பலவற்றைச்சந்தித்து ஆழ்கடலை வெற்றிகொண்டவர்கள் இந்த வல்வெட்டித் துறைக்கடலோடிகள்.

வல்வெட்டித் துறையிலிருந்து அமெரிக்காவுக்குத் தம்பிடபிள்ளை தண்டையல் தலைமையில் 'அன்னபூரணி' என்ற வல்வெட்டித்துறையில் உருவான இரட்டைப் பாய்மரக் கப்பலில் சென்ற சாதனையும் அவர்களின் கடலோட்டத்துக்குச் சாட்சி கூறுகின்றது! அந்தக் கப்பலை விட்டவர்கள் அத்தனை பேரும் வல்வெட்டித்துறையினர்!

இரண்டாம் மகாயுத்தம் நடந்து கொண்டிருந்தபோது,

ஜப்பான் காரனின் குண்டுக்கும்,

நீர்மூழ்கிக் கப்பலின் பயங்கர மோதலுக்கும், தங்கள் பாய்மரக்கப்பலைப் பயமின்றி ஈடுகொடுத்து தமது உயிரைத் துச்சமென மதித்தவர்கள்.

கடலுக்குத் தம்மை அர்ப்பணித்தவர்கள்—

பலர்! பலர்!

சிதறடிக்கப்பட்ட கப்பலின் ஒரு துண்டைப் பிடித்துக் கொண்டு தப்பிய வல்வெட்டித்துறை சாமிக்கண்டு மேஸ்திரியாரை சில வருடங்களுக்கு முன்னர் சந்தித்துப்பேசிய போது அவர் தெரிவித்த பல தகவல்கள் என்னை நடுங்க வைத்தன!

— சமையற்காரராகக் கப்பலில் சென்ற ஒருவர் தமது ஒருகாலைக் கடலில் தாக்குதலின் போது இழந்து உயிருடனேயே வல்வெட்டித்துறை திரும்பிய 'கதை' என் கண்களில் நீர் வழியச் செய்துவிட்டது!

### இவர்கள் வாரிசுகள்

மாலுமி சாஸ்திரத்தை முற்று முழுதாகக் கற்றுத் தேர்ந்தவர்களின் வழி வந்தவர்கள் இன்று வெளிநாட்டுக் கப்பல்களில் காப்டன்களாகவும், அதிகாரிகளாகவும், மாலுமிகளாகவும் நூற்றுக் கணக்கானோர் பணியாற்றுகின்றனர்

பல துணிகரச் சாகசங்களை ஆழ்கடலின் பேரலைகளோடு நடாத்திய வல்வெட்டித் துறைக் கடலோடிகளின் வாரிசுகள் இவர்கள்!

கடந்த மாதம் 19 ஆம் திகதி கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சிங்கப்பூர்க் கப்பலான 'வெலா-6' கொழும்பிலிருந்து நான்கு மைல் தூரத்தில் நீரில் மூழ்கியதல்லவா? அதுவும் வெங்காயத்தட்டுப்பாடான நேரத்தில் நமக்குபம்பாய்வெங்காயத்தை கொண்டு வந்த கப்பல் என்பதால் அந்தச் செய்தி பிரபலமாகியது!

கப்பலின் காப்டனும், அவருடன் கடமையாற்றிய ஏழு பேரும் கப்பல் முற்றாக நீரில் மூழ்கியபோதிலும் தப்பி உயிரைக் காத்துக்கொண்டனர்!

இவர்கள் எல்லோருமே வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்பதனை அறிந்த போது வல்வெட்டித்துறைக் கப்பலோட்டிகளுக்கு கடலோடுவதிலுள்ள தேர்ந்த கலையை இரை மீட்டுப் பார்த்தேன்!

காப்டனையும் ஊழியர்களையும் சந்திக்கவேண்டுமென்பதற்காக வல்வெட்டித்துறைக்குச் சென்றேன்.

அரபிக் கப்பல் கம்பனியின் ராட்சதக் கப்பலில் மூன்றாவது உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ரஞ்சனதாஸ் விடுமுறைக்கு வந்திருந்தார். அவர் என்னை லங்கா சிமெந்து நிறுவனத்தின் துறைமுகக்காப்டனும், பதினொருவருடகாலம் வங்காளவிரிகுடா என்ற பயங்கரக் கடலில் கப்பலோட்டிய அனுபவசாலியுமான காப்டன் மோகனதாஸிடம் அழைத்துச் சென்றார்.

நீரில் மூழ்கிய சிங்கப்பூர் கப்பலின் காப்டன் எஸ் சிவநேசனையும் அவருடன் அக்கப்பலில் பணியாற்றிய ஏழுபேரையும் ஒன்றாகவே சந்திக்க ஏற்பாடு செய்தார்.

காப்டன் சிவநேசன் திருமணமான இளைஞர். அவரைப்போலவே அவருடன் பணியாற்றியவர்களும் இருந்தார்கள்

பதினைந்து வருடகாலம் கடலோடுவதில் அனுபவம் இந்த எட்டுப்பேருக்கும்.

காப்டன் சிவனேசனுக்கு 'பே ஒப் பெங்கோல்' தண்ணி பட்டபாடு!

### அந்தக்கதை

காப்டன் சிவநேசன் கதையை ஆரம்பிக்கிறார்:-

''இந்தவருடம் மே 9ம் திகதி இந்தச் சிங்கப்பூர் கம்பனியின் கப்பலைப்பொறுப்பெடுத்தேன். ஏழு பேரும் என்னுடன் பணியாற்ற நியமிக்கப்பட்டனர்.

''சென்னைக்கும் கொழும்புக்கும், கொழும்புக்கும் சென்னைக்கும் நமதுகப்பல் ஓடியது.

''ஜூன் 15ம் திகதி-

நாகபட்டினத்தில் பம்பாய் வெங்காயத்தை ஏற்றிக் கொண்டு புறப்பட்டோம்.

''புறப்பட்ட இரண்டுமணி நேரத்தில் திடீரென கடல் கொந்தளிப்பு ஏற்படத் தொடங்கியது.

''புயலின் வேகத்துக்கு ஈடு கொடுக்கமுடியாது என்பதை உணர்ந்தோம்

''நாகபட்டினத்தை நோக்கித் திரும்பிவிட்டோம்

''பயணத்தைத் தொடர்வதற்கு முன்னதாக, காற்றுக்கு ஈடுகொடுக்கக்கூடிய விதத்தில் சாமான்களை இறக்கி மாற்றி அடுக்கச் செய்தோம்.

''ஜூன் 16ம் திகதி—

''மீண்டும் பயணத்தை ஆரம்பித்தோம்.

''முல்லைத்தீவுக்கு வந்துவிட்டோம்.

''அப்பால் செல்லச்செல்ல...

''பதினைந்து மணித்தியாலங்கள்—

''மோசமான காற்று...

''புயல்...

''சமாளித்தோம்.

### கப்பல் சரிந்தது

''ஜூன் 19ம் திகதி—

''கொழும்பு பயிலட் நிலையத்துடன் தொடர்புகொண்டு இன்று இரவு 11மணிக்கு வந்து சேர்ந்து விடலாம் என்பதை அறிவித்தோம்.

''கொழும்புக்கு மூன்று மைல் சமீபமாக வந்ததும் தொடர்பு கொள்ளும்படி சொன்னார்கள்,

''கொழும்புக்கு நான்கு மைல் தொலைவில் வந்த போது—

''கப்பல் ஒரு பக்கம் சரிவதை உணர்ந்தோம்.

''ஒரு பக்கத்திலுள்ள எரிபொருளை மறுபக்கத்தில் விடுவதன் மூலம் சமாளிக்கலாமெனக் கருதினோம்.

''அப்போது ஜன்னலுக்குள்ளால் தண்ணீர் நுழைவதைத் தெரிந்துகொண்டோம்

பயிலட் நிலையத்துக்குத் தகவல் கொடுக்க அழைத்தோம். பதிலில்லை!

'சில விநாடிகள்—

''இரவு 10-30 மணிக்குச் சற்று முன்னரோ, பின்னரோ—

''எட்டுப்பேரும் மேல் தளத்தில் நின்றோம். எங்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டிய கட்டத்துக்கு வந்துவிட்டோம் குடைவானம்' என்ற அவிட்டுப்போன்ற ஒருவித வாணத்தை மேலேவிட்டோம் அது மூன்று நிமிடங்கள்வானத்தில் நின்று தெரியும். இதைக் கண்டாவது வந்து காப்பாற்றுவார்கள் என்று! மூன்று டியூப் வளையங்களை மட்டும் எடுக்கமுடிந்தது. அதனுடன் கடலுக்குள் குதித்துவிட்டோம்.


''ஓரிரு நிமிடங்களிருக்கும்-

''கப்பல் மூழ்கி, மூழ்கி முற்றாக மூழ்கிவிடுவதை நேரில் கண்டோம்,

''நெஞ்சு திக்கென்றது:

''கப்பல் மூழ்கியதும், இரு உயிர் காக்கும் படகுகள் கப்பலிலிருந்து மிதந்தன.

''எல்லாப் பெரிய கப்பல்களிலும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். எட்டுப்பேரும் அந்தப் படகுகளை எப்படியோ பிடித்து, ஏறி அமர்ந்து கொண்டோம்.



மூழ்கிய கப்பல்

''விடியும் வரை அந்த இடத்தில், காற்றுக்கு ஈடு கொடுத்து எந்தப் பக்கமும் செல்லாதபடி இருந்துவிட்டோம்.''

''மனோநிலை அப்போது எப்படி இருந்தது?'' என்று திடீரெனக்கேட்டேன்.

''நாங்கள் முழுக்கடலோடிகள். நாங்கள் தரையில்பிறந்த மீன் குஞ்சுகள். எங்கள் சாவு கடலில்தான் வருமென்றால், அதனைப் பாக்கியமாகக் கருதுகிறோம்'' என்று கூறிவிட்டுத் தொடர்ந்தார்:-

''நல்லகாலம் நாங்கள் நடுக்கடலுக்கு அடித்துச் செல்லப்படவில்லை. ஒரு மைல் தூரம் நமது படகை வலித்துச்சென்றபோது, கரையொன்று தெரிந்தது. கரையை அண்மித்த போது அங்கு ஆயிரக்கணக்கில் ஜனக்கூட்டம் திரண்டு நிற்பது தெரிந்தது.

' உடுத்த உடுப்பைத்தவிர வேறொன்றுமில்லை எங்களிடம்

### ராஜகோபால்

''நாங்கள் வந்த படகு விமானத்திலிருந்து 'பாரசூட்' மூலம் குதித்தவர்கள் போன்று காட்டியது

'எம்மை அப்படித்தான் அவர்கள் நினைத்தார்கள் முதலில்

''விசாரித்தார்கள்,

### சந்தேகத்துடன் பார்த்தனர்

''நாங்கள் தமிழர்கள்என்பதையும், வடபகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அவர்கள் அறிந்தபோது, 'வரவேற்பில்' சில மாறுதல்களை உணர்ந்தோம்.

''சந்தேகத்துடன் எம்மைப் பார்க்கத்தொடங்கினார்கள்

''பனையால் விழுந்தவனை மாடு ஏறிமிதிக்கிற அனுபவம்.

''ஆனாலும், சிலர் நமக்கு எந்த ஆபத்தும் ஏற்படாதவாறு பாதுகாப்புத்தந்தார்கள்

',மொறட்டுவப் பொலிசார் அரைமணி நேரத்தில் வந்து எம்மைப்பொலிஸ் நிலயத்துக்கு அழைத்துச்சென்றனர்.

''லொக்கப்பில்' போட்டார்கள்.

''தனித்தனியாக விசாரிக்கப்பட்டோம்.

''நாங்கள் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவர்களல்லவா! விசாரணை பலமாகத்தான் இருந்தது.

'வர்த்தக கப்பல் துறை அமைச்சர் அமரசிறி பொலிஸ் நிலயத்துக்கு வந்தார்.

''எங்களை லொக்கப்பிலிருந்து விடுவித்து நாங்கள்

(14ம் பக்கம் பார்க்க)


யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?

உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஏற்பாடுகளும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

குறிப்பு:

கனடா செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

Cross Travel Services (Pte) Ltd.

STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.

Phone No : 22040, 22065. TELEX No. 2207 (C. T. S) C E

# எமது சிறுகதை

# கௌரவம்



"நீங்கள் கட்டாயம் வரவேண்டும், உங்களை எதிர்பார்த்து நிற்பன் ஏமாற்றக் கூடாது...''- சுகந்தியின் இந்த வார்த்தைகள் எனது காதில் திரும்பத்திரும்பஎதிரொலிக்க, 'கடைசி முறையாக' கண்ணுடியின் முன் நின்று தலைமயிரையும் உடையையும் சரிப்படுத்திக் கொள்கிறேன்! 'இது தான் கடைசிமுறை' எனக் கூறிக்கொண்டே மீண்டும் ஒரு முறை கண்ணுடியின் முன் ஆஜராகிறேன்! எல்லம் சரியாகத் தான் இருக்கின்றது. மோட்டார் சைக்கிளில் ஏறி அதை இயக்குமுன்பு அதன் கண்ணுடியிலும் முகத்தைப் பார்ததுக்கொள்கிறேன். .... எனது உருவர் ஏதோ கூறவருவதைப் போலிருக்கின்றது.....

''உன் வெளித்தோற்றம் தூய்மையாகத்தான் இருக்கின்றது. உன்தோற்றத்தையும் தூய்மையாக்கிக்கொள்!''

''சற்று தயக்கத்தின்பின் புறப்படுகிறேன்... இன்று ஏன் தானே எனது மோட்டார் சைக்கிள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது?''

''உமது பிறந்த நாளுக்கு எனது வாழ்த்துக்கள்''

ஏன்இந்தப் பரபரப்பு வார்த்தைகளில அவசரம்? ... ஏன் இதயம் பலமாக அடிக்கின்றது?... என்னை ஒருவாறு நிதானப்படுத்திக்கொண்டு முன்னுல் தொங்கும் கண்ணுடியில் முகத்தைப பார்க்கிறேன். சில வியர்வைத்துளிகள்..... முகத்தில் ஏதோ ஒரு இனம் புரியாத தவிப்பு... ஏக்கம்!

கேக் தட்டுடன் ஓர் உருவம் என் முன்னுல் நிற்கின்றது... நிமிர்ந்து பார்க்கிறேன். அந்தப் பார்வையிலும் அந்த ஏக்கம்-அதே தவிப்பு!

''நீங்கள் கட்டாயம் வருவீர்களென்று எனக்குத்தெரியும்'' பதிலுக்கு எனது இதயத்தின் அடியிலிருந்து ஒரு மெல்லிய புன்னகை.

''தம்பி எப்ப வந்தனீர்-சுகந்தி சொன்னவ நீர் பிந்தித்தான் வருவீரென்று ஏன் வேலைக்குப்போக வில்லையே''- சுகந்தியின் தாயாரின் குரல் என்னை நிஜ உலகிற்கு அழைத்து வருகின்றது

அன்று ஏன் தானே என் இதயம் கனப்பதைப்போன்ற உணர்வு... என் உணர்வுகள் எதற்காகவோ துடிக்கின்றன... என் இதயம் அவளுக்காக ஏங்குகிறது... ஆனுல் எங்கள் குடும்பத்தின் பகட்டுக்கௌரவமும் அந்தஸ்தும் அதற்குத் தடைபோடுகின்றன.

''ஏன் தம்பி ஒருமாதிரி இருக்கிறீர், உடம்புக்கு ஏதாச்சும்...'' மீண்டும் அதே குரல் என்னை நிதானப்படுத்த ,'இல்லை அன்ரி, சும்மா தலையிடி தான்'' சமாளித்துக்கொள்கிறேன்.

''சுகந்தி.. தம்பிக்குச் சரியாத் தலைஇடிக்குதாம். ஓடிப்போய்க் கொத்தமல்லி அவிச்சுக்கொண்டுவா..'' தாய் உத்தரவுபோட மகள் குசினியை நோக்கி நடக்கிருள்.

அமுதம் பருகவேண்டிய அவள் கையால் கொத்தமல்லி தண்ணியா? நான்எவ்வளவோ மறுத்தும் எடுத்த தீர்மானத்தில மாற்றமில்லை அந்தக் கொத்தமல்லித் தண்ணீர்கூட அவள் கையால் பருகும்போது இனிக்கத்தான் செய்கிறது

''வசந்தன் கடிதம் போட இல்லையோ...?'' கொத்தமல்லி தண்ணீருக்கு உடன் சுகம் பெற்றவனைப்போல் நிமிர்ந்து கேட்கிறேன்

''இன்றைக்குத்தான் தங்கச்சிக்கு 'பேத்டே கார்ட்'டும் கடிதமும் அனுப்பியிருந்தார். உம்முடைய சுகத்தையும் கேட்டு எழுதியிருந்தார். பாவம் இந்தமுறைதான் சுகந்தியின் பிறந்த நாளுக்கு வசந்தன் இல்லை... ஆசை அருமையா ஒரு தங்கச்சி...''பெருமூச்சுடன் கதை நின்றது.

வசந்தன் என்னுடைய கல்லூரி நண்பன். எமது நட்பு, பாலர் வகுப்பில் ஆரம்பித்திருக்கும் என்று நினைக்கிறேன். படிக்கும் நாட்களிலும் அதன் பின்பும் அவன் வீட்டிற்குப் போய் வருவதால் வீட்டாருடனும் பழக்கம். தகப்பன் இல்லாத குடும்பம். நன்ருய்ப் படித்துக்கொண்டிருந்தவன் பணக்கஷ்டத்தால் படிப்பை இடை நடுவில் நிறுத்தவிட்டு பாலைவனம் சென்றவன். தனது சுயவிருப்பு வெறுப்புக்களை குடும்பத்துக்காக தியாகம் செய்யும் ஒரு நல்ல இதயம் அவனுக்கு. வசந்தன் போகுமுன் கடைசியாக விமான நிலையத்தில் வைத்துக் கூறினுன்.

''ரவி எங்கட குடும்பத்தை பற்றியோ அல்லது என்னைப் பற்றியோ உனக்கு நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. வீட்டில ஒரு ஆம்பிளை எண்டால் நான் தான். இப்பநானும் போறன். என்ருவது என்ர குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவருவன் என்ற நம்பிக்கையில போறன்,... இதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை... நீ எங்கட குடும்பத்தை நான் வருமட்டும் கவனிப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கு. எங்கட குடும்பத்தில நீயும் ஒரு ஆள். எங்கட குடும்பத்திலை இருந்து என்னைக் கேளாமல் நீ எதையாவது தயக்கமின்றி உரிமையாக்கிக் கொள்ளலாம். எங்களுடைய நட்பு என்றுமே அழியாது, அழியக் கூடாது'' ஆழமான கருத்தை சர்வசாதாரணமாக கூறிவிட்டு கலங்கிய கண்களுடன் விடைபெற்றுக்கொண்டான்- நான் ஒன்றும் பேசவில்லை... என்னுல் பேசமுடியவில்லை.

நான் சுகந்தியை நினைத்திருப்பது ஒருவருக்கும் தெரியாதே, ஏன் சுகந்திக்கே தெரிந்திருக்காது... அப்படியிருக்க வசந்தன் எப்படி இந்த வார்த்தையை கூறினுன்... நான் குழம்பியே போனேன். மனதின் அடியில் ஓர் அற்ப ஆசை அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிவதா? அல்லது நீருற்றி வளர்ப்பதா? என குழம்பிக்கொண்டிருந்த வேளையில் வசந்தனின் பேச்சு என்னை மேலும் குழப்பிக் கொண்டிருந்தது, அதேவேளை நான் சுகந்தியை காதலிப்பதால் அவளின் அண்ணனுக்கு துரோகம் செய்கிறேன் என்ற குற்ற உணர்வு மறைந்து ஒருபுதுத்தென்பைத் தரத் தொடங்கியது. ஆம் வசந்தனின் இந்தப் பேச்சே சுகந்தி மீது எனக்கு ஏற்பட்ட காதலைத் தூண்டத்தொடங்கியது.

சுகந்தி மீது ஓர் ஆசை வளரும் அதேவேளையில் அவளின் வீட்டிற்கு அடிக்கடி போய்வருவதற்கு என் அப்பா கூறியது என் மனதை உறுத்தாமலும் இல்லை ''ரவி வசந்தன் உன்ரை நண்பனுயிருக்கலாம்-பரவாயில்லை ஆனுல் நீ அங்க அடிக்கடி போய் வாறதை நான் விரும்பவில்லை. ஊர்பல மாதிரியும் கதைக்கும்-எதையும் நான் ஒருமுறைதான் சொல்லுவேன்.'' அப்பா கூற வந்ததை தெட்டத்தெளிவாக சொல்லிமுடித்தார்.

''ஊரைப் பற்றி நாங்கள் ஏன் சிந்திக்கவேண்டும், எங்களுக்கு நாங்கள் சரியாய் நடந்தால் போதும்தானே அப்பா..'' நான் மனதிற்குள் நினைத்துக்கொண்டேன். வெளியில் கூறவில்லை!

ஏனெனில் நாங்கள் கௌரவத்தால் உயர்ந்தவர்கள் அதனுல் எமது எண்ணங்களை நாம் வெளியில் சொல்வதில்லை.

'சுகந்தி, உன்னை அடைய வேண்டுமென எனக்கு ஓர் விபரீத ஆசை, ஏதோ தெரிந்தோ தெரியாமலோ இப்படியான ஓர் ஆசையை வளர்த்து விட்டேன். அதே நேரம் நெருப்பு சுடும் என்று தொட்டுத்தான் பார்க்க வேண்டும் என்றும் எண்ணுகிறேன்- ஆம் நான் நெருப்போடு விளையாடுகிறேன், ஒரு பெண்ணின் மனதோடு விளையாடுகிறேன் அதே வேளை என்னை நீ காதலிப்பதையும் என்னுல் நன்கு உணர முடிகிறது. உன்னுடைய பார்வையும் சிரிப்புமே அதை சொலலாமல் சொல்கின்றதே சுகந்தி, நான் எல்லாவற்றையும் நன்கு உணர்கிறேன் சுகந்தி நன்கு உணர்கிறேன்.

''நீங்கள் கட்டாயம் வரவேண்டும், எதிர்பார்த்து நிற்பேன்! ஏமாற்றக் கூடாது'' என்று உன்னுடைய பிறந்த நாளுக்கு மட்டுமா நீ நேற்று என்னை அழைத்தாய், இல்லை உன்வாழ்க்கைத் துணையாகவே அழைத்தாய், உன் மனதை நான் நன்கு அறிவேன் சுகந்தி. உன்னை இவ்வளவு அறிந்தும் என்ன தயக்கம் என்று கேட்கிருய்? ஓம் நான் தயங்குகிறேன் உன்னை ஏமாற்ற! உனக்கு வஞ்சகம் செய்ய!

சரி, எமது எண்ணப்படியே நாம் ஒருவரை ஒருவர் மனதாரக் காதலிக்கிறேம் என வைத்துக்கொள்வோம். நாளை என் வீட்டார் அதை அறியும் போது...? நிச்சயமாக வீட்டு வாசற்படிக்கு வெளியில்நின்று தான் நான் நியாயம் பேச வேண்டிவரும். ஏற்கெனவே என்சகோதரியைஅந்தநிலையில் காண்கிறேன். அவளும் காதல் நோயில் சிக்குண்டவள்தான். அந்த நோய்க்கு எங்கள் வீட்டில் மருந்து இல்லை. அன்று அவளின் அழகும் கவர்ச்சியும் அப்பாடா, இன்று அவளின் நிலை, குழந்தையும் கையுமாக பரிதாபமாக காட்சியளிக்கிருள். அவள் நெருப்பைத் தொட்டுப் பார்த்தாள் சுட்டுவிட்டது...அவளின் சுடுகாயத்தைக் காணவே நான் தயங்கும் நிலையில் அந்த காயம் எனக்கு வந்தால் எப்படித் தாங்கிக்கொள்வேன்?

பெற்ருேர் மன்னிப்பார்கள் என்ற துணிவில் சிலர் தவறு இழைப்பதுண்டு. அந்த வழியைத்தான என் சகோதரியும் கையாண்டாள் போலும், அவள் முடிவு?! மன்னிப்பு என்ற சொல் எங்களின் அப்பா என்றஅகராதியிலேயே இல்லையே. போகிற இடங்களில் வேலை பெறுவதற்கு எனக்கு பட்டமா அல்லதுஅனுபவமா இருக்கின்றது? ஒன்றுமில்லை. எங்களுடைய சொந்த ஸ்தாபனத்தில் ஒரு மேசையில் நான் இருக்கிறேன் அந்த மேசையில் ஒரு அழைப்புமணி, சாம்பல்தட்டும் தட்டு. மேசைக் கலண்டர், இரண்டொருபேனை அத்துடன் ஜெனரல் மனேஜர் என்ெருரு பெயர் பலகை அப்பா! அவருக்கு நான்பிள்ளையாப் பிறந்த குற்றத்திற்காக எனக்கு இப்படியான ஒரு அந்தஸ்தை தந்து எமதுபரம்பரை செல்வச் செழிப்பை காப்பாற்றும் அதேவேளையில்என்னையும் கௌரவிக்கிருர். பணம் பத்தும் செய்யும் என்பார்கள். ஆனுல் ஏழைகள், கோழைகள் சமாச்சாரத்தில் அது இருபதாகவும் செய்யும் அந்தப்பணம் என்ற மேடையில் தான் என்னைப் போன்ற பலர் தமது சுய உணர்வுகளையும் அபிலாஷைகளையும்மறைத்து பார்வையாளர்களுக்காக வேஷம்போடுகிருர்கள் என்னைப்பற்றி எண்ணும்போது சில வேளைகளில் எனக்கே அழுகை வருவதுண்டு. நான் அழமாட்டேன் ஏனென்ருல் கௌரவமானவர்கள் அழுகை வந்தாலும் அழமாட்டார்கள்

இந்த காரணத்திற்காகத் தான் சுகந்தி! நான் கோழையாக கைகட்டி நிற்கிறேன், மதில்மேல் பூனையாக இருக்கிறேன் ஒருவேளை நீ நினைக்கலாம இந்தமாய உலகை உதறிவிட்டு ஒரு முன் மாதிரியாகத் திசுழமாட்டேனு என்று; ஆனுல் சுகந்தி வரும் கால உறவிற்காக வந்த கால உறவுகளை உதறித்தள்ளுவது எந்த விதத்தில் நியாயமாயிருக்கும்?...

எனக்கு வந்த உறவுகளும் வேண்டும், வரத்துடிக்கின்ற உறவும் வேண்டும். இந்த மனப்போராட்டத்திற்கு முடிவுதான் என்ன?

சுகந்தியுடன் இணையஎங்கள் கௌரவம் இடம் கொடுக்க மறுக்கின்றது சுகந்தி இல்லாமல் வாழ என் மனது இடம் கொடுக்க மறுக்கின்றது என்னுல் என்ன தான் செய்யமுடியும்?

நேரத்தைப் பார்க்கிறேன் 6 மணியை காட்டுகிறது, தலையிடி என்ற பொய் கூறியதால் சில நிமிடம் என்னுடைய நிலையை மறைக்க முடிந்தது. இல்லாவிட்டால் சுகந்தி ஆயிரம் கதைகள் தொடுத்திருப்பாள் எழும்பி விடைபெற்றுக்கொண்டு வெளியேறிய போது என் இதயம் கனத்தது தொண்டை மட்டும் வந்த அழுகையை சமாளித்துக்கொண்டு விடைபெற்றுக் கொண்டு மோட்டார் சைக்கிளை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறேன்

யாரோ பின்னுல் வரும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறேன். ''சுகந்தி... என்ன? சொல்லுமேன்?'' அவள் ஒன்றும் கூறவில்லை. ஒருகடிதத்தை தந்துவிட்டுப் போகிருள்

...நான் எதிர்பார்த்தது தான், ஆம் காதல் கடிதம், அவள் துணிந்துவிட்டாள். நான் என்ன பதிலை கூறப்போகிறேன்.

வீட்டிற்குச் சென்று பல முறை கடிதத்தை வாசித்துக் கொள்கிறேன். அதில் சில வசனங்கள் எனது நிலைக்கு சவால் விடுவதை போலிருந்தது. அதை நான் நன்கு ரசித்து படித்தேன்

'ரவி எனக்கு இப்படியான ஆசை வந்ததில் தவறில்லை என்று தான் எண்ணுகிறேன். எனது நிலையில் தான் நீங்களும் இருக்கிறீர்கள் என்று எனக்கு நன்கு தெரியும். எங்கள் காதல் நியாயமானது என்று தான் எண்ணுகிறேன்'' அது எனக்கு காதல் கடிதம் போல இருக்கவில்லை. ஏனெனில் என்னில் அவள் எவ்வளவு உரிமையுடன் எழுதியிருக்கிருள் ஒரு முறைக்கு பத்து முறையாக வாசித்துக்கொள்கிறேன். ஆனல் என்னுடைய முடிவு.. நல்லதோ -கெட்டதோ, நியாயமோ, நியாயமற்றதோ எப்பிடியிருப்பினும் இன்றுடன் இந்த கதைக்கு ஒரு முடிவு கூறத் தான் வேண்டும் என்பதை மட்டும் என்னுல் உணர முடிநதது. ஆனுல் நல்லதையோ கெட்டதையோ என்னுல் முடிவெடுக்கமுடியாமல் இருக்கின்றது ஏனென்றால் என்னுடைய முடிவு எங்கள் கௌரவ பரம்பரையின் முடிவாயிருக்கவேண்டுமே.

[14ம் பக்கம் பார்க்க]

## சண்டைகள் வேண்டாம்

சாதிகள் என்று சழக்குகள் பேசிச்
சமூகத்தைப் பிரித்திட வேண்டாம்
ஆதியில் மக்கள் ஆற்றிடுந் தொழிலால்
அமைந்தன அவரவர் சாதி
தீதில தகு நீதியின் பாலாய்த்
திருவொடு நற்பயன் விளைக்கும்
ஏதொரு தொழிலும் ஏற்புடைத்தாகும்
ஏற்றமும் இழிபுமென் இங்கே

அறநெறி நிற்போர் அகத்தழுக் கற்ருேர்
அன்பொடு கருணையுங் கொண்டோர்
சிறுநெறி சேரார் சிறந்த நல்லொழுக்கஞ்
சீரிய பண்புளோர் மேலோர்
மறவினை செய்வோர் மாசுள மனத்தர்
மன்னுயிர்க் கன்பிலர் மாயப்போர்
நறவினைச் சூதை நாடுவோர் கள்வார்
நல்லொழுக்கம் இலா கீழோர்

-புலவர் வே. கனகசபாபதி

# வழிபாட்டு இடங்களில் நாம் செய்யும் தவறுகள்

மங்கலகரமாக வைக்கப்படும் நிறைகுடத்தை எப்படி மதிக்கவேண்டும்?

சுவாமி உலாவரும்போது மங்கல வரவேற்பின் சின்னமாக வைக்கின்ற நிறைகுடத்தை, சுவாமிக்கு முன்பாகவே பலர் ஊற்றுகின்றார்களே, இதுசரியா?

கோவிலுக்குச் செல்லும் பலர் அங்கு கற்பூரம்கொளுத்திய அல்லது விளக்கெரிந்ததால் உண்டான கரியை நெற்றியில் அணிந்து செல்லுகின்றார்களே, இது சரியா?

அணியும் போதோ அல்லது உடல்நலம் அழகு என்பனவற்றுக்குக்காரணமான ஜவ்வாது புனுகு முதலியவற்றை அணியும்போதோ அக்கறுப்பு, நெற்றியில் பிரகாசமாகத் தெரியத்தக்கதாக யாரும் அணிவதில்லை.

நெற்றியில் அணியப்படும் நீற்றழகு குங்குமப் பொட்டழகு முதலியவற்றைப் பாராட்டிப் பாடுவது போன்று நூல்கள் எதிலும் கறுப்புப் பொட்டு புகழப்படாமையிலிருந்து யாக ரக்ஷை ஜவ்வாது புனுகு முதலியவற்றைக்கூட கத்தையும் கருதிப்பார்த்தால் மங்கலச் சின்னமாக வைக்கும் நிறைகுடத்தை உடனடியாக வெறுங்குடமாக்கலாகாது என்பது சுலபமாகப் புரியும்.

மங்கலமாக அமைக்கப்படும் பந்தல், குத்துவிளக்கு, தோரணங்கள், சந்தனக் கும்பா போன்றவற்றைச் சுவாமி அவ்விடத்தை விட்டுப் புறப்படு முன் அகற்றுதல் பெருந்தவறு குத்துவிளக்கை அகற்றுதல் அணைத்தல் ஆகிய செயல்களைச் சுவாமி நிற்கும்போது செய்தல் போன்ற தவறே நிறைகுடத்தை எடுத்துச் சரிப்பதும் ஊற்றுவதும் என்று அறிந்து கொள்ளவேண்டும்

ஆலயத்தில் திருவிழாக் காலங்களில் சுவாமி வலம் வந்து ஆலயத்துள் செல்லும் போது கும்பநீரால் சுவாமியின் திருவடிகளைக் கழுவுவதாகச் செய்யும் நிகழ்ச்சியை வீட்டுப்பந்தல்களிலும் நிகழ்த்த விரும்பிய சிலர் பந்தல் வழிபாடு முடிந்ததும் அந் நிறைகுடத்தை எடுத்து சுவாமிக்கு முன் ஊற்றும் செயலை ஆரம்பித்திருக்க வேண்டும் என்றே கருதவேண்டியுள்ளது.

ஒரு பந்தலுக்குச் சுவாமி வந்ததும் சுவாமியின் திருவடிகளைப் பாவனையால் அலம்பி வரவேற்கவேண்டுமெனக்கருதினல் அதற்காகநிறைகுடத்தை எடுத்துச் சரித்தல் பெரும்தவருகும். மங்கலச் சின்னமாக

## சுவாமி வீதிவலம் வரும் போது நிறைகுடத்து நீரை வார்ப்பது — கர்ப்பூரக்கரியை நெற்றியில் அணிவது — தவறு

இன்னோரன்ன கேள்விகள் பல சந்தர்ப்பங்களில் பலருக்கும் எழுகின்றன. சமயநம்பிக்கையுள்ள பலரின் செயலை இகழக்கூடாது என்பதாலும் சரிஎது தவறுஎது என்பது நன்கு தெரியாத பலர் நியாயம்தீர்ப்புச சொல்ல முற்படுவதாலும் இப்படியான சந்தேகங்கள் முற்றுப்பெருமல் தொடர்ந்து நம்மிடையே நிலைத்துவிடுகின்றன.

பசுவின் சாணத்தால் முறைப்படி உண்டாக்கப்படும் திருநீறு சரியாக நீறுகாமல் கருநிறமாகவோ செந்நிறமாகவோ அமைந்துவிட்டால் அதை அணியக் கூடாது என்றும், அணிந்தால் பலவித கேடுகள் உண்டாகும் என்றும் சமயநூல்கள் வலியுறுத்துகின்றன மந்திர பூர்வமாகச் செய்யப்படும் யாகம், ஹோமம் என்பனவற்றின் பிரசாதமாகத் தருப்பைக் கரியால் உண்டாக்கப்படும் ரக்ஷை ஒன்றுதான் கருமையுடைய தாய் நெற்றியில் அணியப்படுவதாகும். புனிதமான தருப்பையை யாகாக்கினியால்தகிப்பதால் உண்டாகும் ரக்ஷை

துலக்கமாக ஒருவரும் அணிவதில்லை என்பது தெரிகின்றது எனவே விளக்குக்கரியையோ கற்பூரக்கரியையோ அணிவது மரபுமன்று, முறையுமன்று என்பதே உண்மையாகும்.

நிறைகுடத்தை உடனே ஊற்றுதல் சரித்தல் என்பதும் நவீனர் சிலர் உண்டாக்கிய புதுமுறை என்பது மட்டுமன்றி சம்பிரதாயத்துக்கு விரோதமானது என்பதும் சாதாரண சிந்தனையாலேயே தெளிவாகும்.

கலியாணவீடு போன்ற மங்கள நிகழ்ச்சிக்காக அமைக்கப்படும் பந்தல் அலங்காரங்கள் முதலியவற்றையே உடனடியாக அப்புறப்படுத்தலாகாது என்ற கருத்தும், துக்க காரியங்களுக்காக அமைத்த பந்தல் போன்றவற்றை உடனடியாகவே கழற்றும் வழக்கத்தையும் கருதிப்பார்த்தால் ... வைக்கப்படும் நிறைகுடத்தை குறித்த மங்கல காரியம் முடியு முன்னர் சரித்தலோ ஊற்றுதலோ மங்கல காரியத்தையே குழப்பி முடித்தல் போலவே அமையும். பந்தலில் சுவாமிக்கு வழிபாடுகள் நிறைவேற்றிச் சுவாமி அப்பால் சென்றபின் நிறைகுடம், குத்துவிளக்கு முதலியவற்றை வீட்டுக்குள் எடுத்துச்சென்று அத்திருவிழா

(14ம் பக்கம் பார்க்க)

பண்டிதர்
தி. பொன்னம்பலவாணர்

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

இதயத்தைத்தொடும் சம்பவங்கள் இவ்வாரம் நடைபெறலாம். சிலருக்கு வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பமும் ஏற்படலாம் இலட்சியப் பாதையை நோக்கி பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள் கிடைக்கலாம். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

## ரிஷபம்

மகிழ்ச்சிகரமான வாரம். குடும்பத்தில் விருந்தினர் வருகை கலகலப்பை ஏற்படுத்தும், நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள். குடும்ப பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும் சுற்றுலிலும் வேண்டியதைச் சாதிக்கக் கூடிய செல்வாக்குப் பெருகும்.

## மிதுனம்

தூரதேசபயணம் துயரத்தைத் தரலாம் வருமானத்தில் வீழ்ச்சிதென்படும் வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு. தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு நண்பனின் கடிதம் வேதனையைத் தரலாம். மனத்திடம் வேண்டும்.

## கடகம்

குளிர்மையான சம்பவங்கள் இடம்பெறும் வாழ்க்கையில் வசந்தம் வீசும். களஸ்திரவழியாலும் நன்மைகள் வந்து சேரும். புதிய பாதைக்குரிய வழிபிறக்கும். புத்திரர்களால் சுகமுண்டு இதயத்தில்இன்பம் பொங்கும் இல்லத்தில் இனிமை தவழும்

## சிம்மம்

உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்தவாரம். கவர்ச்சிகரமான பொருள்களை வாங்குவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். திருப்திகரமான இடமாற்றமும் ஏற்படலாம். எதிர்பாராத இடத்திலிருந்து ஆபத்து உருவாகும் இயந்திரத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும்.

## கன்னி

உண்மை வழிநின்று உயர்வடைவீர்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கை உம்மீது பதியும். எதிர்பாராத அதிர்ஷ்ட லாபத்திற்கும் இடமுண்டு குடும்பத்திலும் குதூகலம் நிலவும். இறைவழிபாடு மேலோங்கி நிற்கும் இதயத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில உங்களுக்கு ஆதரவு தருவார்

## துலாம்

திருப்திகரமான மாற்றங்களுக்கு இடமுண்டு நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கைகளின் மூலம் பணத்தைத் தேடிக் கொள்வீர்கள் வாய்வுக்கோளாறு உடல் நலத்தைப்பாதிக்கலாம். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும் தானிய நஷ்டத்திற்கிடமுண்டு. வியாபாரிகள் முதலீடுகளை தவிர்த்துக்கொள்ளவும்

## விருச்சிகம்

இனப்பூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும். எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றின் நிலைமையைச் சமாளிக்கலாம். அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும் விருந்தினர் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத்தரலாம். எதிர்பாராத பணம் கைக்குவந்து சேரும் சுப்பிரமணியர் வழிபாடு போற்றத்தக்கது.

## தனுசு

நத்தைவேகத்தில் காரியங்கள் நகர்ந்து கொண்டேயிருக்கும். மனத்தளர்ச்சி ஏற்படுவது தவிர்க்கமுடியாததாயிருக்கும் பொருள் வரவிற்கும் இடமுண்டு. மாணவருக்கு கல்வியால் பெருமை வந்துசேரும் தக்ஷிணாமூர்த்தி வழிபாடு போற்றத்தக்கது.

## மகரம்

மாணவர்களுக்கு கல்வித்துறையில் புதிய ஆர்வம் பிறக்கும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு நல்ல நாள் சிலருக்கு தாய்வழியால் தனமும் சேரும். அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம் கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும். அடக்கமாக விஷ்ணு வழிபாட்டுடன் இருக்கவும்.

## கும்பம்

அமைதிக்கு பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம் பெறும். நெருங்கிய உறவினர் ஒருவருடைய உடல் நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுக்கு இடமுண்டு இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இவ்வாரம இடமுண்டு.

## மீனம்

சூழ்நிலையில் நல்ல மாறுதல் தென்படும் அமைதியான வாழ்க்கையுடன் தெய்வத்தின் அருளுமுண்டு. தொழில் துறையில் பாராட்டுக்கள் கிடைக்கும நினைத்தது நடக்காது. நிதியில் முடக்கமுண்டு பூமிப் பிணக்கு தலைகாட்டும்

திருமலை
வே. ரவீந்திரன்

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD,
MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C, T, S,)

# 7

சிநேகிதர்கள் என்று சொல்லி எனக்கு எவருமில்லை. நானுண்டு என் வேலையுண்டு என்றிருப்பேன். சந்திக்கும் எல்லாருடனும் சிரிப்பேன். கதைப்பேன். தேவைகளை ஏற்பேன். என்னுலான உதவிகளையும் செய்வேன்.

நாங்களெல்லாம் படித்து விட்டு வேலை தேடிக் கொள்ளும் கூட்டங்களாக மாறியபோது ஒரே காலத்தில் படித்துக் கொண்ட கணேஸ், தேவன், சுபாஸ், சிவா' பரமேஸ் வித்தியா, ரமணி, நான் தனிக்கூட்டமாக நண்பர்களாக கூடி விட்டோம்.

பட்டதாரிகளாக வெளியேறிக் கொண்டிருப்போர் முயற்கொம்பான வேலைவாய்ப்பால் படும் அவஸ்தை தெரிந்திருந்தும் எங்களைப் போன்றவர்கள் இன்னும் படித்துக்கொண்டு தான் இருக்கிறுர்கள்.

எந்தவேலையும் கிடையாமையால்தான் அவர்கள் தொடர்ந்து படிக்கிறுர்கள். விருப்பத்தோடு படிப்பவர்களையும் எதிர்காலப் பாதிப்பு அருவருக்க வைக்கிறது. இருந்தும் எங்கள் பெயர்களின் பின் பட்டங்களை எழுதிக் கொள்வதில் பெரும் சந்தோஷம்.

பார்ப்பவர்களுக்கும் எங்கள் மீது அவர்களையறியாத ஒரு மதிப்பு ஏற்படுகிறது.

அரசாங்க வர்த்தமானி முதற்கொண்டு தினசரி வருகின்ற நாளிதழ்கள் வரையில் வெற்றிடங்கள் தேடி மனுப் பண்ணிக்கொள்ளுகின்றேம்.

கூட்டாகத்தான் எங்கள் மனுக்கள் தபால் கந்தோரில் தனித்தனி பதிவு செய்யப்படும். பதிவுத்தபால் செலவைக்கூட கணக்குப் பார்க்க வேண்டியகாலம்.

குறிப்பிட்ட சுற்று வட்டத்துள் நாங்கள் இருப்பதால் ஒருவருக்கொருவர் சொல்லி மனுக்களைத் தவறவிடமாட்டோம்.

நேர்முகப்பரீட்சை என்று வரும்போது கூட்டாகவே கொழும்புக்கு றெயின் ஏறுவோம்.

மனுக்களின் ஒவ்வொரு பிரதியும் என்னுல் கோவை செய்யப்பட்டு அது ஒரு தனியொரு கோவையாக நிறைந்து வழிகிறது. அது என்னிடம் ஒரு வரலாற்றையே சொல்லிக் கொண்டு இருக்கிறது:

எங்களுக்குள் தேவன் ஒரு வகைப் பேர்வழி. அவன் எங்களை விலத்திக்கொண்டு தான் முன்னுக்கு வரவேண்டும் என்பதில் ஒருவகைப் போட்டி போடுவான். அதனுல் தன்னை தனிமைப்படுத்திக்கொள்வான்.

ஒவ்வொரு மனுவையும் எங்களுடன் கூட்டாக நின்று போட்டுவிட்டு யார்யாரையோ இரகசியமாகக் கண்டுகொள்வான். அடிக்கடி இரகசியமாக றெயின் ஏறி கொழும்பு போவான்.

அவன் முயற்சி வீண்போகவில்லை. அவன் இப்போது ஒரு கூட்டுஸ்தாபனத்தில் சேல்ஸ் மனேஜராக கடமை புரிகின்ருன்.

அந்த நேர்முகப்பரீட்சைக்கு நாங்களும் சென்றிருந்தோம் தேர்வு பெற்ற இரண்டு தமிழருள் இவனும் ஒருவன்.

அவனது ''புல்லிங்''கைக் கண்டு நாங்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டோம்.

இன்றைய உலகைப் புரிந்து கொண்டவன் அவன் ஒருவன் தான். கெட்டிக்காறன். தப்பிக் கொண்டான். அவனுக்கு இந்த உலகம் என்றைக்கும் கைகொடுத்துக் கொண்டே இருக்கும்-

அவனை அறியாத பெருமிதமோ தெரியவில்லை. எங்களில் எவருக்குமே சொல்லிக் கொள்ளாமல் வேலைக்குப் போய்விட்டான்.

அவனைத் தெரிந்திருந்தமையால் அது பற்றி கவலைப்படவுமில்லை.

அவன் பிரிவு எங்களை எதுவும் செய்யவுமில்லை.

நண்பர்கள் நாங்கள் எங்கள் அவலத்தை சந்திகளில் கூட கூடிநின்று அலசுவோம். அந்தச் சந்தி எங்களைப் பார்த்து சிரித்ததில்லை. மாருக இரக்கப் பட்டிருக்கும்.

வாழ்க்கை முதற்கொண்டு அரசியல் ஈருக அலசல் திசை மாறிப் போவதுமுண்டு. பொழுது போகவேண்டும் என்பதற்கான முயற்சியாகவும் இது இருக்கலாம.

அரசியல் விமர்சனம் உடலை சூடேற்றி உறைக்க வைக்கும். ஆனுல் நாங்கள் எதையும் இறுக்கிக்கதைக்கும் வலுவிழந்தவர்கள். தட்டிக் கேட்கும் திறனில்லாதவர்கள்.

எங்கள் குடும்பப் பின்னணி தான் எங்களையெல்லாம் இந்தளவு கோழைகளாக்கி விட்டுள்ளது.

எங்கள் உணர்வுகளை, எங்கள் சிந்தனைகளையெல்லாம் மழுங்கடித்துக்கொண்டு தெருவென்றும். சந்தி என்றும் ஊர் நாய்களாய் அலைந்து திரிகிறேம்.

எங்களுள் ஒருத்தியாகிய ரமணி கல்யாணம் செய்துவிட்டாள். அவளது புருசன் கூட்டுறவு சங்கக்கிளை ஒன்றின் மனேஜர். நாங்கள் அவளை வாழ்த்துவதைத் தவிர வைதுரைக்க முடியாது.

அவளின் தந்தை ஒருவகையில் கெட்டிக்காரன் என்று தான் சொல்ல வேண்டும் சாதாரண குடும்ப நிலைமையிலுள்ள அவன் ஒரு பெண்ணைப் பெற்றுவிட்ட பாவத்தால் சீதனம் என்று எத்தனையைத் தேடமுடியும்.

படித்தபெண் ஒரு தொழிலாகிவிட்டால் அந்த தொழிலை ''மச்'' பண்ணக்கூடிய தொழிலுடைய மாப்பிள்ளையைத் தான் தேடவேண்டும்.

அவளும் ஒரு உழைப்பாளி. அவளும் ஆணுடன் சரிநிகர் சமானமாக தொழில் பார்த்தாலும் பெண் என்பதற்காக சீதனம் கொடுக்காமல் கடவுச் சீட்டு வாங்கமுடியாது.

ஏனென்றுல் பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறவர்கள் இவர்கள் தானும்.

எங்கள் ஆண் வர்க்கம் பெண்ணடிமையைநாகரிகமாக மறுமதிப்பீடு செய்து பார்க்கிறது.

பூமணி இப்போது ஒரு கட்டுக்குள் அடங்கி விட்டதால் இனி அவள் வேலைதேடி காத்திருக்கமாட்டாள்.

குடும்பமொன்று அமைந்து விட்டால் தானுண்டு புருசனுண்டு. அவன் பணிவிடை பார்க்க நேரம் போதாது இதற்குள் பிள்ளைகள் வந்து விட்டால் அதுகளை கழுவித் துடைக்கத்தான் நேரம் சரி.

அவள் ஒரு எந்திரமாகவே இயங்கிக் கொண்டிருப்பாள் வாழ்க்கை எது என்று சிந்திப்பதற்கே அவளுக்கு நேரம் இருக்காது.

பாவம்...பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டு இருக்கும் போது தன் ஆசைக்கனவுகளையெல்லாம் எவ்வளவு தூரம் வளர்த்திருப்பாள்.

படித்து முடிந்ததும் நல்லதொரு தொழில் கிடைக்கும்.




## தொடர் நவீனம்

கை நிறைய உழைப்புக்கிடைக்கும். தகுதியிலே உயர்ந்து விட்டால் வாழ்க்கையிலும் உயர்ந்துவிடலாம்.

அவளது ஆசைகள் எல்லாம் இன்று நிராசைகளாகி ஒருபந்தத்துள் கட்டுப்பட்டு விட்டது.

தன் இளமைக் கனவுகளையெல்லாம் அவள் நினைத்துப் பார்க்கும் போது எவ்வளவு வேதனைப்படுவாள். மனம் குமுறிக் கொப்பளிப்பாள்.

மழுங்கடிக்கப்பட்ட அவளது ஆசைகள். அபிலாசைகளுக்கெல்லாம் எவையும் ஈடாகிவிடப்போவதில்லை.

நான் இப்போதும் எனது கிளாக் தொழிலையே தொடர்ந்து பார்த்துவருவதனுல் இதன் தாக்கம் எனக்குப் பெரிதாகவில்லை.

இன்னமும் சிறுதொழில் கிட்டாதவனைப் பார்த்து என்னைத் திருத்திப்படுத்திக்கொள்வேன். தகுதியான வேலை கிடைக்கவில்லையே என்பது எப்போதும் மனதை உறுத்திக் கொள்ளும்.

பிரிய மனமில்லாத ஒரு நண்பனைப் பிரிந்துவிட்டோம். அவன் கடிதம் கண்டதும் நாங்கள் கொண்ட சந்தோசம் சொல்லி மாளாது.

தனக்கு நல்ல சம்பளம் கிடைப்பதாகவும், தான் ஒரு நிறுவனத்தின் இரவுக்காவலாளியாக கடமையாற்றுவதாகவும் எழுதியிருந்தான்.

அவன் வீட்டாருக்கும் அவன் சுகங்களைச் சொல்லி சந்தோசப்படுத்திஞேம்.

ஒவ்வொன்ருக பிரிந்துபறந்த நண்பர்கள் எல்லோரும் எனக்கு தவருது கடிதம் போட்டுக்கொண்டே இருக்கிருர்கள்.

என்ன உதவி தேவை... என்ன வாங்கி அனுப்புகிறது என்று கூட கேட்டு எழுதுகிருர்கள்.

சுபாஸ் தான் சுவிச்சர்லாந்தில் அகதியாக இருப்பதாகவும் தனக்கு விசாவும் வேலையும் கெதியில் தருவார்கள் எனவும் எழுதியிருந்தான்.

வேலை கிட்டும்... கிட்டும் என்ற எதிர்பார்ப்பை இனியும் காத்திருக்க நண்பர்கள் தயாரில்லை. புத்திசாலித்தனமாக தப்பிக்கொள்ள அவர்களும் உழைத்துக் கொள்கிருர்கள்.

சுபாஸ் தான் எப்படியும் வெளிநாடு போய்விடவேண்டுமென்று துடித்துக்கொண்டு இருக்கிருன். அவனைப்போலவே சிவாவும்.

தாய் தகப்பனுக்கு ஒரு பிளளையாய் இருநதும் அவர்களுக்கு சொல்லிக் கொள்ளாமல வெளியால் ஓடிவிட வேண்டுமென்று அருள்.

அவனின் இந்த முடிவு எனக்கு கோபத்தையே மூட்டியது. இருப்பதற்கு சொந்தக் காணியே இல்லாது கோயில் வளவொன்றில் குடியிருக்கிருர்கள்.

சங்கடமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் அவனுககு தான் இந்தப் பாக்கியம் முதலில் கிடைத்தது யாரோ பாவத்துக்கு இரங்கி இருக்கவேண்டும்.

ஒரு ஏஜெண்ட் மூலம் சவூதி அராபியாவுக்கு சென்றுவிட்டான். எங்கள் எல்லாருக்கும் தன் பயணத்தை சொல்லிக் கொண்டான்.

பரமேஸ் தான் சிங்கப்பூரில் இரும்பைக்சாய்ச்சி வடிப்பதாகவும், தணலோடு தணலாக வேகுவதாகவும் தன் பரிதாபத்தை எழுதினுன். ஒப்பந்தம் முடியாமையால் அதுவரை தான் வேகவேண்டியிருக்கிறது என்கிறுன்.

தன் சுயநிலையை நண்பன் என்ற வகையில் எனக்கு அப்பட்டமாக எழுதியிருந்தான். அவன் வீட்டாரை சந்திக்கும் போது ஆறுதலாக கதைப்பதைத்தவிர தொழிலைக்கேட்பதில்லை.

அவனுக்காக என்மனம் அழுதது.

பட்டகாலிலேதான் படவேண்டுமா?

தான் இப்போது அகதிகள் முகாமில் ஜேர்மனியில் இருப்

(12ம் பக்கம் பார்க்க)

## எதற்காகச் சீதனம்?

நாங்கள்  
சீதனமில்லாமல்  
திருமணம்  
செய்யத்தான்  
விரும்புகிறேம்  
ஆனுல்  
அவர்கள்  
எங்களின் உழைப்புக்கேற்ப  
வாழ்க்கை நடத்த  
முடியுமென்ருல்...  
சீதனமில்லாமல்...  
கலியாணம் கட்டினுல்  
நாளுக்கொரு சாறியும்  
நேரத்திற் கொரு  
ஆபரணமும்  
வாரத்திற் கொரு  
சினிமாவும்  
அந்தோ...  
எம் உழைப்புப்போதாது  
அதனுல்தான்...  
ஒரளவுக்கேனும்...  
சீதனத்தை...  
எதிர்பார்க்கிறேம்...  
மேற் கூறிய...  
எதுவுமில்லா  
ஏந்திழையாள்...  
வந்தால்—  
சீதனமே  
எமக்கு வேண்டாம்...  
சிங்காரியள் போதும்...

—என்.கே. துரைசிங்கம்


நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

✶ தாமதம் ✶ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச் சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world at Unbeatable Rates

TFC த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680

# இந்தோனீஷியாவும் இந்து கலாசாரமும்

**பாரதமும் இராமாயணமும் இந்தியாவின் கலாசாரத்தை விளக்கவந்த அரும் பெரும் செல்வங்கள். இந்த இதிகாசங்களின் நிழல் இந்தோனீஷிய மக்கள் வாழ்வில் பதிந்துள்ளது.**

இந்தோனீஷியாவில் நான் வசித்த காலத்தில் மலேசியப் பிரதமர் துன் அப்துல் ரசாக் உத்தியோக பூர்வமாக அவ்விடம் வந்திருந்தார். விமான நிலையத்தில் அந்நாட்டு தலைவர் சுஹார்ட்டோவும் மனைவியாரும் அப்துல் ரசாக்கையும் மனைவியாரையும் வரவேற்றார்கள். தலைவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது தலைவிகள் தங்களுககுள் உரையாடினர் சுஹார்ட்டோ மனைவியார், வந்திருந்த மலேசியத் தலைவியிடம் 'உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்' என்று வினவினார். அதற்கு மலேசியத் தலைவி ''ஐந்து பேர் இருக்கிறார்கள் எலலோரும் ஆண் பிள்ளைகளே'' யென்றார். அதற்கு சுஹார்ட்டோ மனைவியார் ''அப்படியா பஞ்சபாண்டவரைப்போல விருக்கிறதே யென்றார். அன்றாட வாழ்க்கையில் இந்தோனீசியா மக்கள் இதுபோல மகாபாரதத்திலிருந்தும் இராமாயணத்திலிருந்தும் உவமைகள் கூறுவர். எவ்வளவிற்கு இந்தியாவிலும் இலங்கையிலும் இந்து கலாசாரம் இருக்கிறதோ அதே அளவிற்கு இந்தோனீஷியாவிலும் இருக்கிறது.

ஐந்து ஆண்டுகள் குடும்பத்துடன் இந்தோனீஷியாவில் வாழ்ந்தேன். ஜகர்த்தா சென்று அடைந்த நாள் மறக்க முடியாதது பொழுது பட்டதும் ஒன்றன்பின் ஒன்றாய் உணவு விற்கும் வண்டிகள் சாலையில் சென்றுகொண்டிருந்தன. வண்டியிலிருக்கும் மரத்தில் கையிலிருக்கும் மரத்துண்டால் இரண்டு மூன்று தடவை வண்டிக்காறன் அடிப்பான். அந்த அடியின் சத்தத்திலிருந்து என்ன உணவு விற்கிற வண்டி சாலையில்போகிறதென்று கூறலாம். பிட்டு, அப்பம், சூள் (Soup), சாதம், நூடில்ஸ் (noodles), றொட்டி போன்ற பல உணவுகள் விற்கப்படும். மரத்தால் அடிக்கும் பொழுது வரும் சத்தம் ஒரு வித சங்கீதம் போலவிருக்கும். கேட்க இனிமையாயிருக்கும் அந்நாடு சென்று பல வாரங்களாய் பின்னேரம் எப்பொழுது வரும் இந்தச்சங்கீதத்தை கேட்க என்று நாம் காத்திருப்போம். நடுச்சாமம் வரைக்கும் இச்சத்தம் கேட்கும். பல வீடுகளில் இரவில் உணவு சமைப்பதில்லை சாலையில் போகும் வண்டிகளிலே வாங்கி உண்பார்கள். உணவு உடனே தயாரித்து கொடுப்பதால் நல்ல சூட்டோடை சாப்பிடலாம். இம்மக்களின் வாழ்க்கையில் இதுவும் ஒரு அம்சம்.

## பெயர்களும் காரணமும்

மக்களின் பெயர்களைக்கேட்டால் அனேகமானவை சமஸ்கிருதத்திலிருந்து வந்ததாக தெரியவருகிறது இஸ்லாமிய சமயத்தை சேர்ந்தவர்களாயிருந்தும் ஜாவா மக்கள் அரபு பெயர்கள் வைக்கவில்லை. அரபு பெயர்கள் ஒருசிலருக்கு உண்டு இவர்கள் அரபு நாடுகளிலிருந்து வந்தவர்களின் பரம்பரை என்றுகூறுகிறார்கள். முதல் ஜனாதிபதி சுகர்ணோவின் பெயர் எபபடி வந்ததென்று பார்ப்போம். இவர் பிறந்த பொழுது காலநேரத்தைப் பார்தது சோதிடர் இவர் ஒரு வீரனாய்வருவார் என்று தந்தையாருக்கு கூறினார். தந்தையாருக்கு உடனே மகாபாரத வீரன் கர்ணனின் ஞாபகம் வந்தது. இதனால் கர்ணன் என்ற பெயர் சூட்டினார்கள். ஜாவாவில் சில பெர்களுக்கு முன் 'சு'வை (எங்கள் திரு. சிறி போன்றது சேர்த்துக் கொள்வார்கள் சுகர்ணன் என்ற பெயர் பகசாவில் இந்தோனீஷியர் தங்கள் மொழியை பகசா (bahasa) என்றுகூறுவர் ) சுகர்ணோ வாயிற்று. என்னுடைய ஒரு இந்தோனீஷிய நண்பனுக்குபெயர் நுகிறோகோ எப்படி இப்பெயர் வந்ததென்று கேட்க அவர் கூறினார் தனது தாய்தந்தையருக்கு பல ஆண்டுகளாக பிள்ளையில்லை. பத்து ஆண்டுகளுக்கு பிறகு தான் பிறந்ததும் கடவுள் அனுக்கிரகத்தால் பிறந்ததென்று அனுக்கிரகம் பெயரை வைக்க யோசித்தார்கள் சமஸ்கிருத சில சொற்களில் முதல் வரும் 'அ'வை ஜாவில் அகற்றி விடுவார்கள். இதனால் இப்பெயர் நுக்கிரகம். இதை பகசாவில் நுகிறோகோ என்பார்கள். குந்தி யென்று ஒரு பெண்மணியின் பெயரை ஜாகர்த்தாவில் தான் முதல் சந்தித்தேன். இவர் ஒரு இஸ்லாமிய பெண. இந்தோனீஷியன் விமான தாபனத்தின் பெயர் கருடா. இந்தோனீஷியாவின் ஒரு படைப்பிரிவின் பெயர் கணேஷ்பிரிவு. இந்த தளபதியின் வாசலில் ஒரு கணேஷ சிலை உண்டு. இப்படி சொல்லிக்கொண்டு போனால் ஒரு நூலையே எழுதி விடலாம்.

## இந்து கலாசாரம்

இஸ்லாமிய சமயத்தை தழுவியிருந்தாலும் அவர்கள் ஆதியில் இந்த அடிப்படை இந்து கலாசாரத்தை மாற்ற வில்லை போகோர் (Bogor) என்ற பட்டினத்தில் பேராதனைபோல ஒரு பூங்கா உண்டு பூங்காவில் வாயிலில் இரு பெரியபிள்ளையார்கள் காவல் காக்கிறார்கள் ஜகர்த்தா நகரத்தை விஸ்தரித்த பொழுது புதுப்பகுதிக்கு செல்லும் சந்தியில் பெரிய அனுமானின் சிலையை சுகர்ணோ நிறுத்தினார். சுகர்ணோ சிறு வயதில் ஒரு குருவிக்கூட்டை கல்லால் உடைத்ததை பார்த்த தந்தையார் மகனை ஏசிவிட்டு 'தத்துவம் அசி' (thou art that) என்ற வேதமொழியை கூறினார். அதாவது எல்லா உயிரிலும் ஒரே பிரமன் தான் இருக்கிறதென்றும் குருவியின் உயிரிலும், கலெறிந்தவரின் உயிரிலும் அதே பிரமன் தான் குடியிருக்கிறதென்று விபரித்துக் கூறினார். சுகர்ணோவின் தந்தையார் இஸ்லாமிய சமயத்தை சேர்ந்தவராயிருந்தும் வேதாந்தத்தில் மூழ்கியிருந்தார். ஜாவாவில் ஓடும் கடுகதி புகையிரதத்தின் பெயர் பீம (Bhima) பெலனுக்கு அனுமான், பீமன், கடோற்கஜனை கூறுவார்கள். ஒருமணி நேரத்திற்கு பாரதயுத்த ஆரம்பத்தில் எப்படி கடோற்கஜன் இறந்தானென்று நாட்டியத்தில் (ballet) காட்டுவார்கள் திருவிழாக்களுக்கும் கலியாணங்களுக்கும் கோவில் வாசல் வீட்டு வாசலில் ''தீர்க்க ஆயுள்'' என்று கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கும். சுதந்திரம் அடைந்ததும் ஞாபகார்த்தமாக ஒரு சிலை நிறுவினார்கள் (National monument). இதை என்னத்தை எண்ணி சுகர்ணோ கட்டுவித்தார் என்பதை ஆராய்ந்த ஒரு அமெரிக்க நிபுணர் உலகத்தில் இது தான் ஆகப்பெரிய லிங்கமென்று கூறினார். சாதாரணமாக கோவில்களிலிருககும் லிங்க வடிவிலிருந்தாலும் இதன் உயரம் முந்நூறு அடி இருக்கும். இதைச்சுற்றி பல மதில்கள் கட்டியிருப்பதால் பார்த்தவுடன் இது லிங்கமென்று கூறவியலாது ஜகர்த்தாவின் நூதனசாலையில் இரண்டாயிரத்திற்கு கூடின இந்து தெய்வங்களின் சிலை உண்டு. பிரமன், விஷ்ணு, சிவன், பிள்ளையார், முருகன், பராசக்தி, அகஸ்தியர் சிலைகளுண்டு.

## இராமாயண நடனம்

கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கு இந்தோனேஷியா வென்றால் இராமாயண நடனம் (ballet) ஞாபகத்திற்கு வரும். இராமாயணக்கதையை கல்லில் பிரம்பணன் என்று கூறும் கிராமத்திலுள்ள கோவிலை சுற்றி செதுக்கியிருக்கிறது இந்த கிராமம் மத்திய ஜாவாவில்ருக்கிறது இங்கே பல கோவில்கள் இருப்பதால் இதை ஆங்கிலத்தில் (temple complex) என்று கூறுகிறார்கள். இந்த இடத்தில் ஒரு பெரிய வெளியில் பெரிய கோவிலுக்குமுன் ஒவ்வொரு வருடமும் மழை குறைந்த நாலு மாசங்களில் (அதாவது ஆனி ஆடி. ஆவணி, புரட்டாதி) பௌர்ணமிக்கு முன்னும் பின்னுமாக நாலு இரவில் முழு இராமாயணக்கதையை நடனத்தில் காண்பிப்பபார்கள். மறைந்த தலைவர் சுகர்ணோ கலையில் மிகவும் ஆர்வம் உளளவர். இயற்கையாயிருந்த கற்பாறையில் 250 அடிநீளம் 100 அடி அகலமான மேடை ஒன்றை தயாரித்துமூவாயிரம்மக்கள்பார்க்கக் கூடிய ஒரு அற்புத திறந்த வெளி அரங்கத்தை உலகிற்கே கொடுத்தார். அந்த நாட்களில் உண்மையாக அயோத்தியிலிருக்கிறோமோ என்ற எண்ணம்வரும், இராவணனின் தலைநகரை அனுமான் தீயிடுவது ஒரு உணர்ச்சி கொடுக்கும் காட்சி மேடைக்கு இருநூறு யார் தூரத்தில் பல விடங்களில் வைக்கோலை கொளுத்தி விடுவார்கள். இதனால் நாலா பக்கங்களிலும் எரிந்து கொண்டு போகிறதென்று எங்களுக்கு ஒரு எண்ணம் உண்டு பண்ணும். மேடை அவ்வளவு பெர்யது இராட்சதரும் வானரர்களின் சண்டையில் சுமார் இருநூறுபேர்கள் நடனமாட இடமுண்டு கும்பகர்ணனின் மறைவு மிகவும் உணர்ச்சிகரமானது. கும்பகர்ணன் ஒவ்வொன்றாக இரு கைகளையும் இரு கால்களையும் இழந்து இறுதியில் மரணமாக இராமர், இலக்குமணன், சுக்கிரீவன், விபீஷணன் அருகில் வந்து தங்கள் வில்லுகளை கீழே வைத்துவிட்டு புலம்பும் காட்சி மனதையும் உருக்கி விடும் அமெரிக்காவிலிருந்து பலர் இராமாயண நடனத்திற்கு பிரம்பணனுக்கு வருடா வருடம் வருவார்கள் ஜொக் ஜாகர்த்தா மத்திய ஜாவாவின் தலைநகரம். இப்பட்டினத்திலிருந்த பிரம்பணன் பத்து மைல் தூரத்திலிருக்கிறது. ஜொக் ஜகார்த்தா பழைய அரச குடும்பத்து இளம் பெண் பல்கலைக்கழகத்தில் சட்டம்படித்துக்கொண்டிருந்த மாணவி சீதை வேடம் பூண்டு நடனமாடினார். ஒவ்வொரு நாளும் நடனம் முடிய தந்தையர் எங்களிடம் வந்து எப்படி மகளின் நடனமென்று வினவினார். இராமயணத்திற்கு தாய்நாடாகிய இந்தியாவோடு சம்பந்தப்பட்ட எங்களைப் போன்ற ஆட்களுடன் தான் இப்படிக் கேட்பது வழக்கமென்று கூறினார் நாங்கள் நடனம் அபூர்வம் என்றோம். அற்புதமான இராமாயண நடனப் பாலி (Bali) யிலும் நடைபெறுகிறது. பாலியைப்பற்றி தனிக் கட்டுரை எழுத இடமுண்டு.

## கலைச் சிறப்பு

நடனம் மாத்திரமில்லை ஓவியக்கலையிலும் சிலைகள் செய்வதிலும் இந்நாட்டு மக்கள் சிறந்தவர்கள். கதவு, சன்னல் எங்கள் நாட்டில் மொட்டையாகவிருக்கும். ஆனால் இந்தோனேஷியாவில் ஒவ்வொரு வீட்டிலும் கதவு சன்னல்களில் மகாபாரதம், இராமாயணத்திலிருந்து ஏதாவது சம்பவத்தைப்பற்றி மரத்தில் அல்லது இரும்பில் பொறித்திருக்கும் இந்நாட்டு பதீக் (Patik) துணிகள் மிகவும் பெயர்போனவை. இதிலும் இவர்களின் கற்பனா சக்தியைப் பார்க்கலாம்.

இம்மக்களின் எளிமையான வாழ்க்கை மெச்சக்கூடியது ஒரு சாதாரண குடும்பத்தில் ஒவ்வொருவருடன் இரண்டு அல்லது மூன்றுசோடி உடுப்பிருக்கும். ஆனால் மிகவும் சிறப்பாக உடுத்து தெருவில் காணப்படுவார்கள். ஏனென்றால் எல்லோரும் தங்கள் தங்கள் துணியை வீட்டிலே தோய்த்துக் காயவிட்டு ஸ்திரிகை செய்வார்கள். இதனால் இவர்கள் மிகவும் துப்புரவாக பொது விடங்களில் காணப்படுவார்கள்.

ஒருமுறைஎனது மோட்டார் வண்டி சாரதி அரைமணி நேரம் தாமதித்து வந்தான். ஏனென்றுகேட்க தன்னுடைய தோய்த்த உடுப்பு காய நேரமாய் போய்விட்டதென்றான். தன்னிடம் ஆக இரண்டு சோடி இருப்பதால் ஒரு சோடியை அணிந்து கொண்டு மற்றச்சோடியை ஒவ்வொரு இரவும் தோய்த்தால் காலையில் அணியலாமென்றும் கூறினான். உணவும் மிக எளியது. சோற்றுடன் ஒரு கறியும், ஒரு பொரியலும் கடைசியில் ஒரு வாழைப்பழமும் இவர்கள் சாதாரண உணவு. கறியில் எல்லா காய்கறிகளும, இறைச்சி மீன் சிறுதுண்டுகளையும் சேர்த்து எங்களுடைய அவியல் கறிபோல் சமைப்பார்கள் கிராம மக்கள் மிகவும் ஒற்றுமையாயிருப்பார்கள். ஒருவர் வீடுகட்டிக் கொண்டுபோகும் பொழுது செங்கல் முடிந்துவிட்டால் வேறுயாரிடமும் இருந்தால் கேட்டுக்கேள்வியில்லாமல் உபயோகிப்பார்கள். இது இவர்களின் வாழ்க்கைமுறை. கிராமச்சபையாயிருந்தாலும் பாராளு மன்றமாயிருந்தாலும் அதிகப்படியான வாக்கெடுத்து ஒரு கருமமும் செய்வதில்லை. ஒருவிடயத்தைப் பற்றிப்பேசிப்பேசி இதற்கு மாறானவர்களையும் மனததிருப்பி கடைசியில் ஏகமனதாக ஒரு முடிவெடுப்பார்கள் இப்படிச்செய்வதால் ஒருவருக்கும் மனக்கசப்பில்லை மற்றது தொடங்கிற விடயமும் எல்லோரும் அங்கீகரிக்கக்கூடிய முறையில்

(9ம் பக்கம் பார்க்க)

நா. மாணிக்க இடைக்காடர்

வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை (வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை.)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி),
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

# ஈழத்துக்குப் புகழீட்டிய

# மறைசை அந்தாதி

## தமிழ்தந்த தாதாக்கள்

மறைசை என்பது திருமறைக்காடு. அதைவேதாரணியம் எனவும் வழங்குவர் திருமறைக்காடர் என்பது மறைக்காட்டில் எழுந்தருளியுள்ள மணாளனாய இறைவனின் திருநாமம்.

யாழ்ப்பாணத்து மக்கள் திருமறைக்காட்டோடு மிக நெருங்கிய தொடர்புள்ளவர்கள். திருமறைக்காட்டில் கணக்கப்பிள்ளையாய் இருந்த கேடிலியப்பபிள்ளை என்பாருக்கு யாழ்ப்பாணத் தொடர்பு இருந்தது என்று நடேசபிள்ளை ஒரு சமயம் ஆராய்ந்ததும் உண்டு இன்றும் திருமறைக்காட்டுத் தேசிகர் பலர் எம்மிடையே வாழ்ந்து வித்தியாரம்பம், சிவதீட்சை முதலிய கருமாக்களை நல்ல முறையில் செய்கிறார்கள். ஒரு தலைமுறைக் காலத்துக்கு முன்னர் எம்மத்தியில் வாழ்ந்த வேதாணியத்தார்கள் கந்தபுராணபடனஞ் செய்வதிலும், திருமுறையோதலிலும் தனிப் பெருஞ் சிறப்புப் பெற்றிருந்தார்கள் மறைக்காட்டுத் தேசிகர்கள் ஆகமங்கள் வழி வந்த பத்ததிகளில் பெரும் பாண்டித்தியம் பெற்றுப் பூசாகாரியங்களில், நியம அனுட்டானங்களில் வல்லவராய் வழிகாட்டிகளாய் வாழ்ந்தார்கள் ஆகமாந்திகளாய அவர்களைச் சைவக்குருமார்கள் என நம்மவர் மதித்தார்கள், போற்றினார்கள்.

இவ்வாறாக நம்மவர் ஆண்டுக்கொரு முறையேனும் திருமறைக்காடு சென்று சுவாமி தரிசனஞ் செய்துவந்தார்கள். அங்கே யாழ்ப்பாணத்தாரின் வீடுகள் நிலைறந்த வீதியும் உண்டு. யாழ்ப்பாணத்தார் திருக்கோயிற் காரியங்களில் செல்வாக்குள்ளவர்களாயும் இருந்தார்கள் வரணியூரினரான தில்லைநாதத் தம்பிரான் தஞ்சாவூர் மன்னனிடம் பெற்ற பெரிய வரிசைகளுள் வேதாரணியத்துச் செல்வாக்கும் ஒன்று.

ஆறுமுகநாவலரவர்கள் மருகரும் மாணுக்கருமாகிய வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, ஒரு சமயம் திருமறைக்காட்டில் தங்கிவாழ்ந்த போது பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அங்கே சென்று அவரை அணுகி அங்கிருந்து நற்றிணைப்பதிப்புக்கான உதவிகள் பலவற்றைக்கேட்டுப் பழகிக் கொண்டார் என்பது ஈழத்துப்புலமைக்குப் புகழாயிருந்தது அதை உ. வே. சாமிநாதையரும் ஒத்துக்கொண்டுள்ளார் என்பது எமக்கெல்லாம் பெருமிதம்.

சின்னத்தம்பிப்புலவர் சிதம்பரம், சீகாழி முதலிய திருத்தலங்களை வணங்கிக்கொண்டு திருமறைக் காட்டுக்குச்சென்றார் அங்கே சுவாமி பெயரால் ஓர் அந்தாதி பாடுமாறு அவருக்குத் திருவருள் பாலிக்கப் பெற்றது "நந்தாவனந்திகழ் நல்லைச்சின்னத்தம்பி நாவலன் சீர் அந்தாதி மாலையை வேதாடவீசற்கணிந்தனனே" என்று வரதராசகவி சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

சின்னத்தம்பிப்புலவர் தமது பதினைந்தாம் ஆண்டுப்பராயத்தில் மறைசையந் தாதியைப் பாடினார் என்ப மறைசையந்தாதிபயபக்தியோடு படித்தற்குரியபாராயண நூல்போலவும் உள்ளது இலக்கிய இலக்கண நயங்கள் சிறந்து விளங்கும் அளவில் இயற்கையழகு நயங்களும் உள்ளன.

மறைசையந்தாதி பெற்ற பெரு மதிப்புக்காரணமாக உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியார் தனித்தனி உரையெழுதியுள்ளார்கள் அடிக்குறிப்போடு வெளிவந்த பழைய பதிப்பும் இதன் பெருமையைக் குறிக்கும்.

> திருமறைக்காடு என்னும் வேதாரணியத்திற்கு யாழ்ப்பாணத்தவர் அடிக்கடி சென்று வழிபட்டனர். வரணியூரைச் சேர்ந்த தில்லைநாத தம்பிரான் தஞ்சாவூர் மன்னனிடம் பெற்ற பெரிய வரிசைகளுள் வேதாரணியத்துச் செல்வாக்கும் ஒன்று.

திருமறைக்காட்டுந் தலப் பெருமையை எடுத்த எடுப்பிலே பாடும்புலவர் "அந்தமும் ஆதியும் இல்லா அத்தர் தம்மேல் செந்தமிழ் நூற்பொருளந்தாதிபாட" என்பர். மிகவடக்கேயுள்ள இமயமலைக் கொழுந்தாகிய இறைவிதந்த சுந்தர விநாயகனைத் துணைவருமாறு பாடுவர்.

மறைக்காடரின் திருவடிப் பெருமையைக் கூறி அது தமக்கு அருள் புரிவது எப்போதெனக் கேட்பர். இயமனை உதைத்தருளியது மன்றிலாடியது, பரவை யார் மனைக்குச் சென்றது எல்லாம் திருவடியற்புதம் என்பர். திருவடியை நன்கு துதிப்பர்.

திருமறைக்காடரை ஒருதரம் துதித்தால் வலிய இரும்பு போன்ற வல்வினையை அறுக்கும் அரம்போல அது உதவும் என்பர். ஒருதரம் பேசுதி என மனத்துக்கு உபதேசிப்பர் சிவபெருமான் முத்தமிழ் வளர்த்த முதற்சங்கத்துத்தலைவர் என்பதை "கூடல் வளர்ந்திடு மூவுரைச் சங்கர்", என்பர்.

நாயகி பாவனையில் மறைக்காட்டு மணாளரிடம் கிளியைத் தூதுவிடுவர். வேதவனத்தையுடையவருக்குத் தூதுபோன கிளிசொல்ல வேண்டியது மன்மத பாணங்களால் வாடிய பெண்ணுக்கு ஓரிரவு பதினைந்து யுகம் போலிருக்கிறது என்பதாம் இது பேராசிரியர் ஐஸ்ஸீன் பிற்காலத்தில் கண்ட கண்டுபிடிப்பு.

தத்தனை வேலையணுகிய திருமால் முத்து வேலையணைய சிவனை அறியவில்லை என்பர். அந்தத் திருமாலின் தேவியாகிய இலக்குமியின் தாலியைக் காப்பாற்றுவதற்காக சிவபெருமான் ஆலகாலவிடத்தை உண்டருளியவர் என்பர். மூவர் தமிழுக்கு உருகும் அரன் சந்திரனையும், கங்கையையும் முடித்த சடையினன், மூர்த்தி, தில்லைப்பொன்னம்பலவன், பினாகி, கங்காளன், புராந்தகன், பசுபதிநாதன் என்றெல்லாம் போற்றி; அவரே எமது பெரிய துணை என்பர்.

ஈழத்தெழுந்த 27 அந்தாதிகளுள் 17 அந்தாதிகள் ஒருபுறயாக, 8 அந்தாதிகள் யமக வந்தாதி இனத்தவையாகும். இவற்றுள் சொண்டும் சொண்டும் ஒட்டாமலே படிக்கக் கூடிய பாடல்கள் உள்ளன. இன்னும் ஈழத்து அந்தாதிகளுள் பத்துவகையான செய்யுள்கள் பயின்று வந்தவையும் உள்ளன, புராண காப்பியப் போக்குடைய மறைசையந்தாதியில் திரிபு என்னும் அணி தலைதூக்கி எதுகைதோறும் பொருள் வேறு திரிதரும்.

★ க. சி. குலரத்தினம்

# இந்தோனீஷியாவும்....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிதாவது மாறுபட்டிருக்கும் (Modified).

சுகர்னோவும்

கனகசுந்தரமும்

இந்தோனீஷியா நாட்டுக்கு இரண்டாயிரம் தீவுகள் உண்டு இதில் முந்நூறு தீவுகளில் மக்கள் வசிக்கிறார்கள். இப்படியிருந்தும் ஒரு நாடென்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டு. இருபது ஆண்டுகளுக்கு முன் அமரர் கனகசுந்தரம் இலங்கை தூதுவராக ஜகார்த்தாவில் கடமையாற்றினார். அக்காலத்தில் நான் மலேசியாவில் வசித்தேன். மலேசியா கனகசுந்தரம் வந்திருந்த பொழுது ஒரு சம்பவத்தை கூறினார். கனகசுந்தரம் மலேசியாவில் பிறந்து இளமையில் அந்நாட்டில் வளர்ந்ததால் மலாய்மொழி நன்கு தெரியும். இந்தோனீஷியா மொழியும் மலாய் மொழியும் ஓரளவில் ஒரே மொழியென்று கூறலாம், இதனால் கனகசுந்தரம் இந்தோனீஷியா மொழியில் நன்கு உரையாடுவார். இதன்காரணமாகவும் வேறு காரணங்களாலும் அக்காலத்து ஜனாதிபதி சுகர்னோவுக்கு கனகசுந்தரத்தில் மிகவும் விருப்பம். அடிக்கடி கனகசுந்தரம் ஜனாதிபதியின் ஸ்தானவுக்கு (ஜனாதிபதி மாளிகை) செல்வார். ஒரு முறை கனகசுந்தரமும் சுகர்னோவும் உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு உயர் அதிகாரி ஜனாதிபதியுடன் இரகசியமாக பேச வேண்டுமென்றார். இதற்கு சுகர்னோ கனகசுந்தரம் எங்களில் ஒருவராக கருதுகிறோம் ஆகையால் இவர் முன்னிலையில் உரையாடுவது தவறில்லையென்றார் அப்பொழுது அந்த அதிகாரி ஏதோ உயரிய பதவிக்கு ஒருவரை நியமிக்க விரும்புகிறோம். இவர் இந்தபதவிக்குமிகவும் பொருத்தமானவர். ஆனால்இவர் கிருஸ்தவர் என்றார் சுகர்னோ இவர் இந்தோனீஷியர் தானே என்று வினவினார். ஆம் என்று அதிகாரி கூறியதும் சுகர்னோ அவ்வளவுதான் உனக்கு தேவை. வேறொன்றும் தேவையில்லை உடனே இவரை நியமிக்கலாமென்று உத்தரவிட்டார். இந்த மனப்பான்மையே இந்தோனீஷியா மக்களை ஒற்றுமையாய் வைத்திருக்கிறது ஒரு சமயம் நான் வடக்கு சுலவசிக்கு போயிருந்தேன். இத்தீவு பிலிப்பீன்சுக்கு மிகவும் கிட்டேயுள்ளது மெனடோ என்ற தலைநகரில் பல ஜாவா பிறப்பிடமாகக் கொண்ட அதிகாரிகள் கடமையாற்றினார்கள் இதைகவனித்து நான் ஒரு மெனடோ வாசியை இவ்வளவு ஜாவா உத்தியோகத்தர் இருப்பதால் உங்களுக்கு ஏதாவது மனக்கஷ்டமுண்டாவென்று கேட்டேன். அவர் அப்படி ஒன்றும் கிடையாது இவர்களும்இந்தோனீஷியர் நாங்களும் இந்தோனீஷியர் என்றார். இது ஒரு மெச்சக்கூடிய அடிப்படைக் கொள்கை.

புதிய தலைவரும்

பழைய தலைவரும்

எப்படி உயர்ந்த அதிகாரியாயிருந்தாலும் இந்தோனீஷியாவில் மற்றவர்களுடன் சகோதர மனப்பான்மையுடன் வாழ்வார் இதற்கு ஒரு நல்ல உதாரணம் கூறுகிறேன். சுகர்னோவைவீட்டுக்காவலில் புதிய தலைவர் சுஹார்ட்டோ வைத்திருந்தார். இடையிடையே சுஹார்ட்டோ சுகர்னோவிடம் சென்று எப்படி அண்ணை இருக்கிறீர்கள் என்று கேட்பார். சுகர்னோவுக்கு நாலு மனைவிமார் இவர்களில் ஒருவர் வீட்டுக்காவலில் சுகர்னோவுடன் வாழ்ந்தார். மற்றவர்கள் காவலில்லாமல் பிறவீடுகளில் வசித்தார்கள் ஒருமுறை சுஹார்ட்டோ வினவிய பொழுது சுகர்னோ தனது ஜப்பானிய மனைவியை பார்க்க ஆசையாயிருக்கிறதென்று கூறினார். நேரமோ இரவு பத்துமணியிருக்கும் வேறு ஒரு ஒழுங்குகளும் உடனே செய்ய முடியாததால் சுஹார்ட்டோ ஒருஜீப் வண்டியில் தானே வண்டியை செலுத்திக்கொண்டு சுகர்னோவை அவர் ஜப்பானிய மனைவி வீட்டுக்கு கொண்டு போனார் சுகர்னோ திரும்பி வரும்வரையும் ஜீப வண்டியில் தனியே சுஹார்ட்டோ காத்திருந்தார். இது சரித்திரத்தில் காணமுடியாத நிகழ்ச்சி. இருபதாம் நூற்றாண்டில் நடக்கக்கூடியகாரியம்இல்லை. ஆனால் இந்தோனீஷியாவில்பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்தது. இந்த சம்பவத்தை எனது நண்பன் ஒருவர் ஜகார்த்தாவில் கூறினார். வேறு சிலருடன் விசாரித்த பொழுது உண்மையென்றார்கள். இங்கே புதுத்தலைவர் பழைய தலைவரை வீட்டுக்காவலில் வைத்திருக்கிறார், ஆனால் இடையிடையே தானே சென்று அவருக்குதேவையானவற்றை செய்கிறார். அண்ணை என்று கூப்பிடுகிறார். அரசியலில் வித்தியாசமிருந்தும் ஒரு தமயனுக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை கொடுக்கிறார் புதுத்தலைவர்.

எந்த ஒரு நாட்டைப் பார்க்கும் பொழுதும் நல்ல அம்சங்களையும் கூடாத அம்சங்களையும் நாம் காண்போம். இந்தோனீஷியாவில் நல்ல அம்சங்கள் பல உள்ளன. ஒருவரோடொருவர் சகோதரன் போல வாழ்வதும், எளிய வாழ்வும், கலை ஆர்வமும் இந்நாட்டின் சிறந்த அம்சங்கள். எண்ணிக்கையின் பெலனால் ஒரு கருமமும் செய்யாமல் எண்ணிக்கை குறைந்தவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களையும் இணங்க வைத்து கருமத்தை செயலாற்றல் என்னுமொரு நல்ல அம்சம். மற்றது ஒருபுதுசமயத்தை தழுவிய பொழுதும் தங்கள் அடிப்படை கலாச்சாரத்தையும் வைத்துப் பேணுதலே இவர்களிற் சிறந்த அம்சம் என்று நான் கருதுகிறேன் சனத்தொகையில் உலகில் ஐந்தாவது நாடு இந்தோனீஷியா ஆகையால் இந்நாட்டின் தத்துவங்களுக்கு உலக அரங்கில் ஒரு முக்கிய இடமுண்டு.

# இந்த நூற்றுண்டில்

# செவ்வாய்க் கிரகத்திற்கு

# செல்ல முடியும்

இவ்வுலகிலுள்ள முக்கிய நாடுகள் தமது முயற்சிகளை ஒருங்கிணைத்தால் இந்த நூற்றுண்டிலேயே செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்ல முடியும் என்று அவர் கூறினார். பூமியைச் சுற்றியுள்ள சுழல் பாதையிலிருந்து செவ்வாய் கிரகத்தை நோக்கி ஒரு விண்கலம் ஏவப்பட்டால் இது சாத்தியமாகும். எனினும் அதற்கு முன்பு பல சிக்கலான பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். ஒரு பெரிய விண்கலத்தில் விண்வெளி வீரர்கள் நெடுங்காலம் தங்கியிருக்கும் வகையில் செவ்வாய்க்கிரகப் பயணம் நடைபெறவேண்டும் அவர்களுக்கு ஏராளமான உணவும், தண்ணீரும், ஒக்சிஜனும் தேவைபபடும். செவ்வாய்க்கிரகத்திற்குச் செல்ல சுமார் ஒன்றரை ஆண்டு ஆகும் விண்வெளி வீரர்களின் உணவாக விளங்கக்கூடிய தாவரங்களை விண்கலத்தில் பயிரிடுதல் என்பது ஒரு பிரச்னையாகும். நீண்ட காலப் பயணம் என்பதால் மருந்து என்னும் பிரச்னையும் மிக முக்கியமானதாகும். சோவியத் விண்வெளி வீரர்கள் இதுவரை சுமார் ஏழு மாதங்கள் விண்வெளியில் பயணம் செய்துள்ளனர். செவ்வாய்க்கிரகத்திற்குப் பறப்பதற்கு முன்னர் விண்வெளியில் மனிதன் நீண்டகாலம் இருப்பதற்கான பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும். செவ்வாய்க்கிரகத்திற்குச் சென்றால் மட்டும் போதாது; அங்கிருந்து பத்திரமாகவும் ஆரோக்கியமாகவும் பூமிக்குத் திரும்ப வேண்டும்.

இவ்வாறு சோவியத்-இந்திய விண்வெளிப் பயணக்குழு உறுப்பினரான ஜி. ஸ்திரகலேவ், ஏ. பி. என்' நிருபரிடம் கூறினார்.

---

ஒருவர்: என்ன அண்ணே இவ்வளவு பெரிய முட்டை?

மற்றவர்; கூட்டுறவுக் கோழிப் பண்ணையில் எல்லாக் கோழிகளும் சேர்ந்து கூட்டுறவு முறையிலே ஒரே முட்டையாக இட்டிருக்கு

— நசுதா



# அணுகுண்டு வெடித்தபோது பிறந்தவர் 'ஒலிம்பிக்' தீபத்தை ஏற்றினர்!

விளையாட்டு

- அனந்த்

**1964ம்** ஆண்டு ஜப்பானின் டோக்கியோ நகரில் 18-வது ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகின. இதுவே ஆசிய மண்ணில் நடத்தப்பட்ட முதலாவது ஒலிம்பிக் போட்டியாகும்.

ஜப்பானியச் சக்கரவர்த்தி ஹிரோ ஹிட்டோ இப் 18வது ஒலிம்பிக்கை ஆரம்பித்துவைத்தார்.

ஹிரோஷிமா நகரில் அணுகுண்டு போடப்பட்ட அன்று பிறந்த 19வயதேயான யோஷி ரேரிச்சாய் என்ற வீரர் ஒலிம்பிக் தீபத்தை உயரத்தூக்கி விளையாட்டரங்கின் உச்சி விளிம்பிலே வானத்தின் பின்னணியில் நின்றபொழுது மைதானமே நிசப்தமாக விளங்கியது.

## கலைஞர் கே. எஸ். பாலச்சந்திரன் எழுதும் ஒலிம்பிக் போட்டிகள் — 10

ஜப்பானில் நடைபெற்ற இப் போட்டிகளில் செய்யப்பட்டிருந்த ஒழுங்குகளைப் பார்த்த யாவருமே வியப்படைந்தார்கள்.

### சிறப்பான ஏற்பாடுகள்

''வெவ்வேறான சாப்பாட்டு அறைகளிலே .1 வெவ்வேறான சமயல் வகைகள் வீரர்களுக்கு வழங்கப்பட்டன.

நீச்சல் குளத்தின் அமைப்பு ஒரு பிரம்மாண்டமான புத்த தகோபாவின் தோற்றத்தையொத்திருந்தது!

உலகத்திலேயே மிகப்பெரிதானதும், உயரமானதுமான, அந்தரத்தில் தொங்கவிடப்பட்டது போன்ற கூரையைக் கொண்டிருந்தது இந்த நீச்சல் தடாகம்.

ஒவ்வொரு போட்டிகள் முடிவடைந்தவுடனேயே ஒவ்வொரு வீரர்களும் ஓடிமுடித்த நேரம்-மிகநுணுக்கமாக கணக்கிட்டு அவர்களின் பெயர்களுடன், அச்சிட்டு உடனே வழங்கும் கம்பியூட்டர்கள் பொருத்தப்பட்டிருந்தன எனவே எந்தப்போட்டி முடிவுகளைப்பற்றியுமே எவருக்கும் சந்தேகம் எழ இடமிருக்கவில்லை.

போட்டிகள் ஆரம்பித்தன. சாதனைகள் தொடர்ந்து முறியடிக்கப்பட்டன 80 உலக சாதனைகளும், ஒலிம்பிக் சாதனைகளும் தாசர்க்கப்பட்டன.

பீட்டர் ஸ்னெல் என்ற நியூசிலாந்து வீரர் 1960 ஒலிம்பிக்கில் 80 மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் பெற்ற வீரர் இம்முறை 800 மீட்டருடன் 1500 மீட்டர் ஓட்டத்திலும் தங்கப்பதக்கங்களைப் பெற்ருர்.

1960ம் ஒலிம்பிக்கில் மரதன் ஓட்டத்தில் தங்கப்பதக்கத்தைப்பெற்ற அபேபே பிகிலா என்ற எத்தியோப்பிய வீரர் இம்முறையும் வெற்றிபெற்ருர் இரண்டாவதாக வந்த பிரிட்டனைச் சேர்ந்த பேசில் ஹீட்லியைவிட, 5 நிமிடங்கள் முந்தி ஓடிமுடித்தும் எந்தவித களைப்பும் இல்லாதவராக மைதானத்தில் நுழைந்து-போட்டி முடிந்தவுடன் உடற்பயிற்சிகளையும் அரங்கிலேயே செய்தார். மற்றவர்கள் களைத்துச் சோர்ந்துவர இவர் இப்படிச்செய்தது, எல்லோருக்கும் வியப்பாக இருந்தது.

### இந்தியா மீண்டும் வெற்றி

அடுத்து ஹொக்கியில், மீண்டும் இந்தியா சாம்பியனுகியது குறிப்பிடத்தக்கது. 32 வருடங்களாக தான்வைத்திருந்த சாம்பியன் பட்டத்தை 1960 ஒலிம்பிக்கில் பாகிஸ்தானிடம் இழந்த இந்தியா இம்முறை 1-0 கோல்களால் அதே பாகிஸ்தானைத் தோற்கடித்து பழிதீர்த்துக் கொண்டது.

இவ் 'ஒலிம்பிக்' போட்டிகளின் இறுதியில் அமெரிக்கா 36 தங்கப்பதக்கங்களைப்பெற்ற போதிலும் மொத்தமாக 90 பதக்கங்கள் மட்டுமே அதற்குக்கிடைத்தன. ஆனல் சோவியத்யூனியனே 30 தங்கப்பதக்கங்கள் உட்பட 96 பதக்கங்களை மொத்தமாகப் பெற்றிருந்தது ஜெர்மனி, 50 பதக்கங்களுடன் மூன்ரும் இடத்தைப்பெற்றது.

### 19வது ஒலிம்பிக்

1968ம் ஆண்டு ஒக்டோபர் 12ந் திகதியன்று மெக்சிக்கோவின் புதிய விளையாட்டரங்கில் மெக்சிக்கோ ஜனதிபதி டயஸ் ஓர்டேஸ் அவர்களும் சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தலைவர் அவரி பிறண்டேஜ் அவர்களும் 19வது ஒலிம்பிக்கோட்டிகளை ஆரம்பித்து வைத்தார்கள்.

119 நாடுகளைச் சேர்ந்த 6059 வீரர்களும் வீராங்கனைகளும் பங்குபற்றிய இவ்வொலிம்பிக் போட்டிகளில் மெய்வல்லுநர் போட்டிகளில் 26 புதிய ஒலிம்பிக்சாதனைகளும், 15 புதிய உலக சாதனைகளும் நிறுவப்பட்டன.

ஜிம் ஹைன்ஸ் என்ற அமெரிக்கவீரர், 100மீட்டர் ஓட்டத்தை, 9 9 செக்கன்களில் ஓடி. 10செக்கன் சாதனையை முறியடித்த. முதல் வீரரானர். ரொமி சிமித் என்ற அமெரிக்க வீரர், 200மீட்டர் ஓட்டத்தில், 19 8 செக்கன்களில் ஓடி புதிய உலக சாதனையை நிறுவினர். லீ ஈவான்ஸ் என்பவர் 400மீட்டரில், 43.8 செக்கன்களில் ஓடி உலக சாதனையை நிறுவ, பொப் சிகறென் என்பவர் இவரும் அமெரிக்கர்தான்-தடியூன்றிப் பாய்தலில், மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி வீரர்களைத்தோற்கடித்து, தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

### பொஸ்பரி பாய்ச்சல் அறிமுகம்

உயரப்பாய்தலில் டிக்பொஸ்பரி என்ற அமெரிக்க வீரர் முதுகுப்பக்கத்தால் தடையைக்கடக்கும் ஒரு புதிய உயரப்பாய்ச்சல் முறையினுல் பார்வையாளர்களை திகைக்கவைத்தார். இவர் 2.24 மீட்டர் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும் தனதாக்கிக்கொண்டார். உயரப்பாய்தலில் இப்போது அனேகமான வீரர்கள், டிக் பொஸ்பரி, மெக்சிக்கோ ஒலிம்பிக்கில் அறிமுகப்படுத்திய 'பொஸ்பரி' முறையைத்தான் கையாளுகிறுர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

பொப்பியமன் என்ற அமெரிக்கவீரர், தனது முதல் பாய்ச்சலிலேயே 29 அடி $2\frac{1}{2}$ அங்குலம் பாய்ந்து, உலக சாதனையை மிகுந்த வித்தியாசத்தால் முறியடித்து, அதாவது கிட்டத்தட்ட 2 அடி தூரத்தால் முறியடித்து பார்வையாளர்களை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டார் மற்றவர்கள் 27 அடி தூரத்தைக்கூட கடக்கமுடியாமல் திண்டாடினுர்கள்.

1964ம் ஆண்டு ஒலிம்பிக்கில் இதே நிகழ்ச்சியில் தங்கப்பதக்கத்தைப்பெற்ற பிரிட்டனைச் சேர்ந்தவரான லின் டேவிஸ் என்பவர் இதுபற்றி இவ்வாறு சொன்னர்: 'பொப்பியமன், இப்படி பாய்ந்தவுடன் நான் திகைத்துப்போய் விட்டேன். அதற்குப்பிறகு நான்போட்டியாளனுக இல்லாமல் பார்வையாளனுக மாறிவிட்டேன்''

### இன ஒடுக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நீக்ரோ வீரர்கள் கறுப்புக் கையுறை அணிந்து நின்றனர்

இம்முறையும் ஒலிம்பிக்கில் அரசியல் சம்பந்தப்படத்தான் செய்தது அமெரிக்காவில் இன ஒதுக்கல் நடப்பதாகக் கூறும் நீக்ரோ இயக்கமொன்றுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், 200மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற ரொமிசிமித் என்ற அமெரிக்க நீக்ரோவீரரும், வெண்கலப்பதக்கத்தைப் பெற்ற ஜோன் கார்லோஸ் என்ற மற்றுமொரு அமெரிக்க நீக்ரோ வீரரும், வெற்றிப் பீடத்தில் நிற்கும் பொழுது கைகளில் கறுப்புநிற கையுறைகள் அணிந்து அவற்றை உயர்த்திக்காட்டி, எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். இவர்களது இச் செய்கையினுல் ஆத்திரமுற்ற அமெரிக்க ஒலிம்பிக்குழு நிர்வாகிகள், இவர்களை ஒலிம்பிக்குழுவிலிருந்துநீக்கியதோடு ஒலிம்பிக் கிராமத்தைவிட்டு உடனடியாக வெளியேறுமாறும் உத்தரவிட்டனர்.

(தொடரும்)

---

# எங்கே சென்ருய் வெங்காயம்?

வடபகுதிச் சீமை எலாம்
வற்ருத வெங்காயம்
கடல் கடந்து அழிந்தாயோ
கறியொன்றும் சுவையிலையே

செக்கச் சிவந்த நிறம்
செம்பாட்டார் பூமி எங்கும்
தக்க பெரு வருமானம்
தங்க நிகர் வெங்காயம்

பரந்த வயல் ஏக்கர்களில்
பச்சை நிறக் கம்பளங்கள்
சிறந்த சின்ன வெங்காயம்
சீதனத்தின் உயிர் நாடி

குலை குலையாய்க் கட்டியல்லோ
மலைமலையாய்க் குவித்து வைத்தோம்
விலையதிகம் கொழும்பி லென்ருல்
சுளைசுளையாய் பணம் காய்க்கும்

வேதாளக் காயென்றும்
வெங்காயப் பூ வென்றும்
பாதாளக் கிடங்குகளில்
பாழாகப் போயினவோ

மட்டுவில் சி. சின்னத்தம்பி

---

# இலக்கிய உலகு

ஈ.கே.ஆர்

### மீண்டும் இலக்கியவட்டம்

**யாழ்.** இலக்கிய வட்டம் மீண்டும் சுறுசுறுப்பாக இயங்குமென்ற நம்பிக்கை நமக்குப் பிறந்திருக்கிறது! இலக்கியமே மூச்சாக வாழ்ந்த இரசிகமணி போன்றவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு கடந்த ஏழாண்டுகளாக எந்த இயக்கமும் இல்லாமல் மூச்சு அடங்கி இருந்து விட்டது! ஆரம்ப காலத்தில், சசிபாரதி, வீரகேசரி செல்லத்துரை, மதுரகவி இ. நாகராசன், யாழ்வாணன் போன்றவர்களுடன் இக்கூட்ட நிகழ்ச்சியில் பங்குபற்றியதுண்டு. யாழ் மாநகர சபை கேட்போர் கூடத்தில், யாழ்வாணன் ஏற்பாட்டில் மிகக் கலகலப்பாக நடக்கும். சு இராஜநாயகன், கந்தவனம், வரதர், ஏ. ரி. பொ., கே. வி. நடராஜன், காரை. செ. சுந்தரம்பிள்ளை, செங்கைஆழியான், செம்பியன்செல்வன், கல்வயல் வே. குமாரசாமி போன்ற பல பிரபல எழுத்தாளர்கள் வருவார்கள். பயனுள்ள பல நல்ல விஷயங்களை இந்தச் சந்திப்புக்கள் சாதித்திருக்கின்றன. என்ன காரணமோ தெரியவில்லை. ஏழாண்டுகளுக்கு யாழ். இலக்கிய வட்டம் மௌனம் சாதித்துவிட்டது. இப்போது அந்த மௌனம் கலைந்திருக்கிறது! யாழ். இலக்கிய வட்டம் 1964ம் ஆண்டு ஆரம்பமானபோது முழு மூச்சோடு இயங்கிய பத்திரிகையாளரும், எழுத்தாளருமான சசிபாரதி தலைவராகியுள்ளார். யாழ்வாணனும், கல்வயலும் இணைச் செயலாளராகியுள்ளனர். செங்கை ஆழியான் தனாதிகாரி

நிதானமாகச் சிந்தித்துச் செயலாற்றுவதில் வல்லவரான சசிபாரதி தலைவராகியுள்ளது வட்டம் சுறுசுறுப்பாக இயங்கப்போவதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. வாழ்த்துக்கள்!

### வீரகத்தியின் தமிழ் இனிக்கிறது!

**த**மிழின் இனிமையைப் பண்டிதர் வீரகத்தியிடம் நான் வெகுவாக ரசித்ததுண்டு, வாணி கலைக்கழகமென்ற நிறுவனத்தை அமைத்து, பண்டிதர் வகுப்புகளை அவர் நெல்லியடியில் நடாத்திய காலத்தில், அவரிடம் முறையாகத் தமிழ் பயின்றவர்கள் வடபகுதியின் மூலைமுடுக்கெல்லாம் தமிழின் புகழ் பாடுகிறுர்கள்! தமிழறிஞர் வீரகத்தியின் அறிவின் ஆற்றலுக்கு இது ஒரு 'சாம்பிள்!' நெல்லியடி மத்தியகல்லூரியில் தமிழ் இலக்கியத்தை நயத்தோடு விளங்கவைப்பதே அவர் தனித்துவம்! ஆசிரியத்துறையிலிருந்து ஓய்வுபெற்ற வீரகத்தி, இப்போது தஞ்சைப் பல்கலைக்கழகத்தில், ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். அப்பல்கலைக்கழகத்தின் கௌரவத்தைப் பெறவுள்ள வீரகத்தி நல்ல நூல்களைத் தந்துள்ளார்; அருமையான கவிஞர்; சிறந்த பேச்சாளர்!

### பார்வதிநாதசிவத்தின் மற்றொரு காவியம்

**நா**டறிந்த நம் நாட்டுப் புலவர் பார்வதிநாதசிவத்தின்

[12ம் பக்கம் பார்க்க]

# யாழ்ப்பாணம் நோக்கிப் படை புறப்பட்டது

## தொடர் நவீன சித்திரம்




**1658** ஆம் ஆண்டு, மாசி மாதம், 21ஆம் திகதி

மன்னார்க் கோட்டையின் உயர்கொத்தளத்தில் வன்கோயன் நின்றிருந்தான். கோட்டையின் வடபாகத்தில் அளவாகத் துண்டிக்கப்பட்ட சதுரக்கற்கள் மலையாகக் குவிந்து கிடந்தன. திருக்கேதீஸ்வரக் கோயிலைப் போர்த்துக்கீசர் தகர்த்து அக்கற்களை எடுத்து வந்து மன்னார்க் கோட்டையைக் கட்டினர். அக்கற்களில் எஞ்சியவை குவிந்துகிடந்தன. கோட்டையின் கிழக்குப்பாகத்தில் புதைகுழிகள் தெரிந்தன. நேற்றைய யுத்தத்தில் மரணமடைந்த வீரர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டு, சிலுவைகள் நாட்டப்பட்டிருந்தன.

இக்கோட்டையின் போர்த்துக்கீசக் கமாண்டர் அன்ரோனியோ டி அமிருல் நேற்றைய யுத்தத்தில் படுகாயமடைந்து மரணமானான். அவனை இராணுவ மரியாதையுடன் அடக்கம்செய்யுமாறு வன்கோயன் கட்டளையிட்டிருந்தான் சற்று முன்னர் தான் அமிருலின் இறுதியடக்கம் நிறைவேறியது

வன்கோயனின் முகத்தில் வெற்றிக் களிப்புக் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றிவிடவேண்டும். மன்னார் வெற்றியுடன் அவன் திருப்திப்படவில்லை வீரர்களுக்கு சற்று ஓய்வு தேவை.

அவனும் சில நாட்கள் இக்கோட்டையில் தங்கியிருக்க விரும்பினான் அந்த இரு இளம் விதவைகளுடன் கழித்த ஓரிரவு போதுமானதல்ல. கணவர்களின் இரத்தச் சுவடு அழியுமுன்னரே அவர்கள் கண்ணீருடன் கட்டிலில் தங்களை இழந்தார்கள்.

மன்னார்க் கோட்டையின் கமாண்டராக ஹெருட்றிக்கோவும், கப்ரினாக அலன்சோ மாசியான்சும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் பல வீரர்களும் இங்கு இருக்கப்போகிறார்கள். அந்த இரு இளம் விதவைகளையும் அவர்கள் இருவருக்கும் கலியாணம் செய்து வைத்துவிட்டு யாழ்ப்பாணம் செல்லவேண்டும் என வன்கோயன் எண்ணமிட்டான்.

உயர் அதிகாரிகளின் ஒழுக்கம் முக்கியம். வீரர்கள் தேவையாயின் சுதேசிப் பெண்களை நாடமுடியும். அது கட்டுப்படுத்தப்பட்ட காரியம் அல்ல. ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து வந்திருக்கும் டச்சு வீரர்கள், அதிகாரிகள் ஆகியோர் அதுஒல்லாந்தநாட்டின் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்காகத் தம்இளமையில் பெரும்பகுதியை விதேசி மண்ணில் கழிக்கிறார்கள். அவர்கள் இங்கு சந்நியாசிகளாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது முறையல்ல என வன்கோயன் எண்ணமிட்டான். கொழும்பிலிருந்து மன்னாரை நோக்கி அவன் புறப்படுவதற்கு முன், பெரும் திருமண விழாவில் அவன் கலந்துகொண்டான். கொழும்பில் தங்கியிருக்கும் டச்சு வீரர்களும் அதிகாரிகளும் சுதேசிப்பெண்கள் நூற்றைம்பது பேரை திருமணம் செய்து கொண்டார்கள். அவர்கள் மணந்து கொண்ட பெண்கள் அனைவரும் சிங்களப்பெண்களாவர் வன்கோயனே அவர்களின் திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்தான். அவர்கள் கவர்ச்சியாகவே இருந்தார்கள். மலபார் பெண்களைப்போன்று கம்பாயத்தில் அவர்கள் அழகாகத் தெரிந்தார்கள். இந்த மண்ணில் புதியதொரு பரம்பரையின் உருவாக்கத்திற்கு வித்திடப்பட்டுள்ளது. இது காலகதியில் டச்சுக்கம்பனியின் விருத்திக்கு நன்மையாகவே அமையும் என்பதை வன்கோயன் அறிவான்.

கோட்டையின் உயர் கொத்தளத்தில் நின்றிருந்த வன்கோயனின் கண்கள் வடக்குப் பக்கமாக நெடுந்தூரம் ஊடுருவிப்பார்த்தன. காடுகளுக்கும் காட்டுக்கிராமங்களுக்கும் அப்பால் பசுமையாகக் கிடக்கும் ''உப்றைப்பட்டினம்'' அவன் மனக்கண்களில் தெரிந்தது மன்னாரைப்போன்று யாழ்ப்பாணத்தை இலகுவில் கைப்பற்றிவிட முடியாது என்பதை அவன் அறிவான். யாழ்ப்பாணப்பட்டினத்திலும் ஊர்காவற்றுறையிலும் இரு பாதுகாப்பான கோட்டைகளைப் போர்த்துக்கீசர் அமைத்திருக்கின்றனர். கடலில் அவர்களின் ஆதிக்கம் மிக வலிமையானதென்பதை அவன் தெரிந்து வைத்திருக்கிறான்.

ஊர்காவற்றுறைக் கடல் கோட்டையைக் கைப்பற்றினால் தான் யாழ்ப்பாணக் கடலேரிக்குள் பிரவேசிப்பது சாத்தியமாகும் கடலேரிக்குள் பிரவேசித்தால்தான் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றுவது சாத்தியமாகும். யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றி டச்சுக்கம்பனிக்குள் அடக்கிவிட்டால், இலங்கையின் யானை வர்த்தகம், கறுவா வர்த்தகம், பாக்கு வர்த்தகம், வாசனைத்திரவியங்கள், என்பன யாவும் அவர்கள் வசமாகிவிடும்.

யாழ்ப்பாணத்தின் மீது படையெடுக்கும் அளவிற்கு தற்போது படைப்பலம் மன்னாரில் இருக்கிறது வீரர்கள் ஓய்வெடுக்கிறார்கள். அது மட்டுமன்று. வன்கோயனின் மனக்குறளி சற்றுப்பொறு என்று கட்டளையிட்டது.

பத்து நாட்கள் அவன் பொறுத்திருந்தான்.

ஒரு நாள் அதிகாலை. அவன் கொத்தளத்தில் நின்றபடி யாழ்ப்பாணப்பக்கமாக அடங்கா ஆவலுடன் பார்த்துக்கொண்டு நின்றபோது. வட காட்டின் எல்லையிலிருந்து இரண்டு மனிதர்கள் வெட்டை வெளியில் ஏறுவதைக் கண்டான். கம்பீரமான உருவங்கள் அவர்கள் சாதாரண சுதேசிகளல்லர்.

அவர்கள் இருவரும் வன்கோயனுக்கு அறிமுகமானவர்களல்லர். ஆனால் எங்களுக்கு நன்கு தெரிந்தவர்கள், ஒருவன் கச்சாய் வன்னிமை திசைவீரசிங்கன். மற்றவன் பணிக்கன் நாராயணன். இருவரும் வெகுதூரம் நடந்துவந்ததால் களைத்திருந்தார்கள் அவர்கள் இருவரும் சற்றுநேரம் தயங்கி நின்றுவிட்டு, கோட்டையை நோக்கி நடந்து வந்தார்கள்.

சற்றுநேரம் செல்ல, கப்ரின் அலன்சோ வேகமாக வன்கோயன் நின்றிருந்த கொத்தளத்திற்கு ஓடிவந்தான்,

''யப்னாப்பட்டினத்திலிருந்து இருவர் வந்திருக்கிறார்கள். தங்களைக்காணவேண்டுமாம்.'' வன்கோயனின் முகத்தில் வியப்பும் மலர்ச்சியும் ஆட்கொண்டன,

''யார் அவர்கள்...?''

''ஒருவன் தென்மராட்சி முதலியாராம்... மற்றவன் அவன் உதவியாளன்...''

''உடன் அவர்களை அழைத்து வா...'' வன்கோயன் வேகமாகக் கொத்தளத்திலிருந்து கீழிறங்கி வந்தான். அவன் எதிர்பார்த்துக் காத்திருந்த சம்பவம் இதுவோ?

**6**

அவர்கள் இருவரும் வன்கோயனின் முன் அழைத்து வரப்பட்டனர். வன்கோயன் அவர்களை ஆழமாகப்பார்த்தான். அப்பார்வையில் அலட்சியம் தெரிந்ததைத் திசைவீரசிங்கன் கண்டான். கப்ரின் அலன்சோ மொழிபெயர்ப்பாளன் ஒருவனைத் தருவித்தான்.

''வந்த காரியம் என்ன?...'' என்று கொமுசாறி வன்கோயன் கேட்டான்

திசைவீரசிங்கன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். தனக்கு நிகழ்ந்த அவமதிப்பை அவனால் வன்கோயனுக்கு எடுத்துச் சொல்ல முடியவில்லை. அதைமட்டும் மறைத்தான்,

''யாழ்ப்பாண மக்கள் இன்றைய ஆட்சியில் நம்பிக்கை இழந்து விட்டார்கள் போர்த்துக்கீசரின் கொடுமைகளை மக்களால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கி விட்டார்கள். வீதிகளில் மக்கள் நிம்மதியாக திரியமுடியவில்லை. திடீர் திடீரென வீதியில் மக்கள் பரிசோதனைக்குள்ளாகின்றனர். சிலர் இராசவாசலுக்கு விசாரணைக்காக அழைத்துச்செல்லப்படுகின்றனர். மக்களுக்குத் தேவையான தானியம் கிடைக்கவில்லை. பஞ்சம், பிணி, வறுமை, பயம் மக்களை வாட்டுகிறது. ஆட்சி மாற்றம் ஒன்று தேவை. துரை அவர்களே இதுதான் சரியான சந்தர்ப்பம்... நீங்கள் மட்டும் உங்கள் படையுடன் வந்தால் யாழ்ப்பாணம் இலகுவில் உங்கள் வசமாகும்..''

திசைவீரசிங்கனை வன்கோயன் ஆழமாக மீண்டும் பார்த்தான் அவன் பூனை விழிகளில் ஆழத்தில் புதைந்துகிடந்த உணர்ச்சிப்பெருக்கைத் திசைவீரசிங்கனால் புரிந்துகொள்ள முடியவில்லை. வன்கோயன் சற்றுநேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்தான். அவன் மனதில் திட்டங்கள் உருவாகின

''பலமான இரண்டு கோட்டைகள் யப்னாப்பட்டினத்தில் இருக்கின்றன?''

''ஆம் துரை அவர்களே...''

''ஒன்று கடல்கோட்டை... மற்றது யப்னாப்பட்டினத்தின் கடலேரிக்குள் அமைந்திருக்கும் கோட்டை...''

''ஆமாம்''

''அவை மிக்க பலமானவை... கடல் வழியாக யப்னாப்பட்டினத்திற்குள் பிரவேசிப்பதாயின் கடல்கோட்டையை வென்றாக வேண்டும். அதன் பின்னர்தான் யப்னாபட்டினக் கோட்டையைக் கைப்பற்ற முடியும்..''

''அப்படியல்ல துரை அவர்களே... கடல்வழியாக உங்கள் யுத்தக்கப்பல்களை அனுப்பி கடல்கோட்டையைத் தாக்குகின்ற அதே வேளை, தரைவழியாக உங்கள் படையில் ஒருபகுதியினர் சென்று யாழ்ப்பாணக் கோட்டையைத் தாக்கி வெற்றி கொள்ளமுடியும்..''

வன்கோயன் இருக்கையை விட்டு எழுந்தான் அவன் முகத்தில் வியப்பும் மகிழ்வும் தெரிந்தன வந்திருப்பவன் சாதாரணமானவனல்லன் என்பதையும் புரிந்துகொண்டான்.

''அப்படித் தரைமார்க்கமாகச் செல்கின்றவழி உனக்குத் தெரியுமா? பாதுகாப்பானதா?'' என்று கேட்டான்.

''தெரியும், துரை அவர்களே இங்கிருந்து வடதிசையில் அறுபது கல் தொலைவு சென்றால், யாழ்ப்பாணக் கடலேரி குறுக்கிடும் பூநகரியை அடைந்து கடலேரியைக்கடந்து கச்சாயில் இறங்கலாம். அப்படியே மேற்குத் திசையில் பதினாறு கல் சென்றால்யாழ்ப்பாணக்கோட்டை நாம் நகர்வதை எவரும் அறியமுடியாது. போர்த்துக்கீசர் கடல் யுத்தத்தை எதிர்பார்த்து கடற்கோட்டையைப் பலப்படுத்தியிருக்கின்றனர். தரைமார்க்கமாக இப்படியொரு படைவரும் என அவர்கள் எதிர்பார்க்க முடியாது நான்கு கொத்தளங்களையும் பதினாறு அடித்தடிப்புமுள்ள ஒரு கோட்டையைத் தகர்ப்பது பெரிய காரியமா, துரை அவர்களே?...''

''யப்னாக்கோட்டை நான்கு கொத்தளங்களையா கொண்டிருக்கின்றது?''

''ஆமாம்... பீரங்கிகள் கூடக் கடல்பக்கமாகத் தான் பொருத்தப் பட்டிருக்கின்றன அதுமட்டுமல்ல துரை அவர்களே, யாழ்ப்பாணக்கோட்டையிலிருந்த பீரங்கிகளில் பல கடற்கோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன.

''நல்லது முதலியார்...'' என்று வன்கோயன் முதன் முறையாக மரியாதையுடன் அழைத்தான். ஹொலண்ட் றம்மையும் பரிமாறச் செய்தான்.

குடிவகையின் மணம் திசைவீரசிங்கனை ஒருகணம் ஆட்கொண்டது. தன்னை கட்டுப்படுத்திக்கொண்டான் இந்தக் குரங்குதான் தன்னை இந் நிலைக்குக் கொண்டு வந்தது என்ற எண்ணம் எழுந்தது அவன் ஆண்மை, கம்பீரம். பட்டம் பதவி அனைத்தையும் அழித்தது இதுதான் இதைத் தொடக்கூடாது. அவனை அவமானப்படுத்திய அந்தப் பறங்கிகளை யாழ்ப்பாணத்திலிருந்து துரத்தும் வரை அவன் மதுவைத் தொடான்.

''நான் மதுஅருந்துவதில்லை, துரை அவர்களே...''

வன்கோயன் பெரிதாகச் சிரித்தான்.

''பொய் சொல்லாதே, முதலியார் உமது கண்களைக் கொண்டு நீர் மது குடிப்பவர் என்பதைஉணர்ந்திருக்கிறேன். குடியும்...''

''இல்லை ... மன்னிக்கவேண்டும் துரை அவர்களே போர்த்துகீசப் பறங்கிகளை இம்மண்ணிலிருந்து கலைக்கும் வரை மதுவைத்தொடேன்... மாதுவை நாடேன்...''

அவனை வியப்புடன் வன்கோயன் பார்த்தான். திசைவீரசிங்கனின் உணர்ச்சிமய

[12ம் பக்கம் பார்க்க]

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்,

போன்: 23199 தந்தி: 'வைரம்'

T. C. C. குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்
ரெருசோ மாபிள் நிலம்
அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதிஅற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக் கொடுக்கப்படும்
த ரெருசோ கொன்றுக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்

தலைமை அலுவலகம் :-
69, சங்கிலியன் வீதி,
நல்லூரர், யாழ்ப்பாணம்.

64, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)

# கடல்கோட்டை

(11ம் பக்கத் தொடர்ச்சி)

மான வார்த்தைகளின் மெய்மையை அவன் புரிந்து கொண்டான்.

"முதலியார், நீர் கூறியவாறு படை நடத்துவோம்..."

அடுத்துக் காரியங்கள் வேகமாக நடந்தன.

1658 பங்குனி முதல்நாள். தரை மார்க்கமாக ஒல்லாந்தப் படை புறப்பட்டது. தரைப்படைக்கு மேயர் வன்டிலான் என்பான் தலைமை வகித்தான் தரைப்படை பதினாறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது ஒவ்வொரு பிரிவிலும் ஐம்பத்துமூன்று வீரர்கள் இருந்தனர் இவ்விரண்டு வண்டிகள் இருந்தன. ஒரு வண்டியில் உணவுப் பொருட்களும் மற்றையதில் பீரங்கி ஒவ்வொன்றும் வெடி மருந்துகளும் ஏற்றப்பட்டன ஒவ்வொருவண்டிக்கும் வண்டியை இழுக்கும் இரண்டு காளைகளோடு மேலதிகமாக ஒவ்வொரு காளை கூட அழைத்து வரப்பட்டது, ஒவ்வொரு படைப்பிரிவும் அரை மணி நேர இடைவெளியில் அனுப்பப்பட்டன. வடபுறமாக்க் காட்டுப் பாதையில் அப்படையின் முதற்பிரிவை பணிக்கன் நாராயணன் அழைத்துச்சென்றான்.

கடைசிப்பிரிவு தரித்து நின்றது. அப்பிரிவில் கொமுசாறி வன்கோயனும், திரைவீரசிங்கனும் செல்லவிருந்தனர். பணிக்கன் நாராயணனுக்குத திசைவீரசிங்கன் தெளிவான கட்டளையிட்டிருந்தான படை தங்கவேண்டிய இடங்களை வரையறுத்தும் கொடுத்திருந்தான்

கப்பல் தலைவன் ரூப் அழைக்கப்பட்டான். மன்னார்க் கோட்டைக்காவலிற்கு சிறிய யுத்தக் கப்பல்களில் எட்டு நிறுத்தப்பட்டன. அதற்குரிய வீரர்களும் நிறுத்தப்பட்டனர் தலைமைக் கப்பலான நார்டெனும் ஏனைய பத்துக்கப்பலகளும் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படத் தயாராகின.

கப்பல் தலைவன் ரூப் தயங்கி நின்றான். அவன் தயக்கத்தை வன்கோயன் கண்டான்

"என்ன? ஏன் தயக்கம் ரூப்?..."

"கப்பல்களில் வந்த வீரர்களில் 848 பேர் தரை மார்க்கமாக யப்னுப்பட்டினம் நோக்கிப் புறப்பட்டுவிட்டனர் 700 பேரே கப்பல்களில் உள்ளோம்..." என்றான் கப்பல் தலைவன்.

"வீரர்கள் காணாது எனப் பயப்படுகிறாயா, ரூப்?..." என்று பலமாகக் கேட்டான் வன்கோயன்.

"இல்லை. கொமுசாறி... காற்றுப்பலமாக வீசுகிறது சோளகம் என்கிறார்கள்..."

"கடலுக்குப் பயப்படுகிறாயா ரூப்?"

"இல்லை... இல்லை..." என்று கப்பல் தலைவன் ரூப் வேகமாகக் குறுக்கிட்டான். "கப்பல்களில் பாரம் குறைந்து விட்டது. கடுங்காற்றிற்குக் கப்பல்களில் பாரம் காணாது கொமுசாறி. நூற்றுக்கணக்கான வீரர்களும் பொருட்களும் இறக்கப்பட்டு விட்டனர்."

வன்கோயன் பலமாகச்சிரித்தான். கப்பல் தலைவன் ரூப்பின் தயக்கத்துக்குரிய காரணம் தெரிந்ததும் பலமாகச் சிரித்தான்

"இவ்வளவு தானா, ரூப். இந்தக் கோட்டைக்கு வடக்கே மலைபோல கோட்டைகட்டக் கூடிய கற்கள் குவிந்து கிடக்கின்றன. போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்ட இந்துக்கோயில் ஒன்றின் கற்களாக இருக்க வேண்டும் அவற்றில்பார்த்துக் கப்பல்களில் ஏற்று கப்பல்கள் காற்றிற்கு அசையாது விரைந்து செல்லவும் யப்னுப்பட்டினத்தில் புதிய கோட்டைகளை நிர்மாணிக்கவும் அவை உதவும்..."

மன்னார்க்கோட்டையின் வடபாகத்தில் திருக்கேதீஸ்வரக் கோயில் கற்கள் குவிந்து கிடந்தன யாவும் நீள்சதுரங்களாகப் பொழிந்த கற்கள். சில கற்கள். சில கற்றூண்கள், அக்கற்றூண்களில் தமிழரின் பெருமைகளைப் பறைசாற்றும் கல்வெட்டுகளும் இருந்தன.

அத்தகைய கல்வெட்டு ஒன்றை ஏனைய கற்களோடு வீரர்கள் பலர் தூக்கிக் கப்பல் ஒன்றில் ஏற்றினர். அக்கல்வெட்டிலிருந்த எழுத்துக்களைக் கப்பல் தலைவன் ரூப் வியப்புடன் பார்த்தான். அவனுக்குத் தமிழ் தெரிந்திருந்தால் சிலவேளை வாசித்திருப்பான்,

..."ஸ்வஸ்திஸ்ரீ; ஈழ
முழுவதுங் கொண்டு
ஈழத்தரைசரையும் பெண்டிர்
பண்டாரமும் பிடிச்சுக்
கொடு போன அதிகாரத்
தண்டநாயகனா
ஜயங்கொண்ட சோழ
மூவேந்த வேளார்
மாதோட்டமான இராச
இராச புர."

என்று அக்கல்வெட்டில் இருந்தது.

இக்கல்வெட்டை கெமன்கில் என்ற டச்சுக்கோட்டையில் இன்னும் 313 ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுப்பேராசிரியர் கா. இந்திரபாலா கண்டெடுத்து ஆராயப்போகிறார் என்ற விடயம் அன்று எவருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை.

(தொடரும்)

# இலக்கிய உலகு


(10ம் பக்கத் தொடர்ச்சி)

'இரண்டு வரம் வேண்டும்' என்ற காவியம் அச்சாகிக் கொண்டிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் புலவர் பட்டம் பெற்ற இவரது இரண்டு கவிதை நூல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. 'காதலும் கருணையும்' 'இருவேறு உலகம்' ஆகிய இரண்டில் பின்னதுக்கு சாகித்தியப்பரிசு கிடைத்தது. பாரதி தாசனுடன் நெருங்கிப்பழகும்வாய்ப்பு தமக்குக்கிடைத்ததைப்பெரும் பாக்கியமாகக் கருதுகிறார் புலவர்.

## புதுமை

## வரதர்

எழுத்தாளர் வரதருக்கு அறுபது வயது பூர்த்தியாகியுள்ளது! எதிலும் புதுமையை விரும்பும் அவரது எழுத்துக்களிலும் புதுமையைத்தரிசிக்கலாம். மறுமலர்ச்சி ஆனந்தன், புதினம், வெள்ளிபோன்ற பத்திரிகைகளை யாழ்ப்பாணத்தில் நடத்தியவர் ஒரு பத்திரிகையை எப்படி நடத்தவேண்டுமென்ற 'ரகசியங்கள்' அவரிடம் நிறைய இருக்கின்றன. 'புதினம்', 'வரதரின் பல குறிப்பு' போன்ற அவரின் வேலைகளில் நெருங்கிய தொடர்பு இருந்ததால், அவரின் செயல்திறனை நேரில் காணும் சந்தர்ப்பம் கிடைத்திருககிறது அவரிடம் திறமை இருந்தாலும், அதனை மதித்துக் களம் அமைத்துக்கொடுக்க அவர் தயங்கியதில்லை! அவர் சிந்தனையும், செயலும் இளமையானவை. இதனால் அவர் இளமையாகவே இருக்கிறார். இளமையாக இருந்து இன்னும் பல்லாண்டு செயல்பட வாழ்த்துவோம்!



## கோடுகளும்

## கோலங்களும்

செல்வக்குமாரின் 'கோடுகளும் கோலங்களும்' நமக்குக் கிடைத்துள்ள சமீபத்திய புதுக் கவிதைத் தொகுதி

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி வணிகமன்றத்தின் வெளியீடாக வந்துள்ளது. நமது பத்திரிகைகளிலும், லண்டன் முரசிலும் எழுதிய கவிதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

திணைக்களத்தில்
அவருக்கிருந்த
செல்வாக்கின்
காரணத்தாலே
புலமைப்பரிசு பெற்று
வெளிநாடு சென்றவர்
தாய் நாட்டிலிருக்கும்
மனைவியின் நினைவாக
அங்கும் ஒரு துணைவியைத்
தேடிக்கொண்டார்.

— புலமைப் பரிசு என்ற தலைப்பில் இந்நூலில் இவர் எழுதியுள்ள இந்தப்புதுக் கவிதைஇவர் கூரியசிந்தனையை வெளிப்படுத்துகிறது

கவிதைகளைப் பற்றிப்பத்திரிகையாளரும், எழுத்தாளருமான, 'லண்டன் முரசு' எஸ். ஜெகதீசன் எழுதுகிறார்:

"இத்தொகுப்பில் அடங்கியுள்ள சகல கவிதைகளிலும் வசனத் தால் கனல் கக்கி, இதயத்துக்குச் சூடுகாட்டி, சிந்தையைக் கொந்தளிக்க வைத்துள்ளதை அவதானிக்க முடிகிறது அன்ரன் செல்வகுமாரின் தலையில் நிறைய இருப்பதால், 'ஒன்று பேயில்லாத' அவர்களது தலைகளை உருட்டி சமுதாய சீர்திருத்தத்திற்கு நல்லபாடம்போதிக்கின்றது!"

புலவர் பார்வதிநாதசிவம் அணிந்துரையில் இந்தக்கவிஞரின் ஆற்றலைப் பாராட்டியுள்ளார்.

## ரஜனி

## 2வது இதழ்

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'ரஜனி' மாத சஞ்சிகையின் ஜூலை மாத இதழ் பிரபல எழுத்தாளர் ந. பாலேஸ்வரியின் 'பிராயச்சித்தம்' நாவலைத் தாங்கி வெளிவந்திருக்கிறது.

முன்னர் குறிப்பிட்டிருந்தது போல 'ரஜனி'யின் ஜூலை இதழ் முதல் வாரத்திலேயே வெளிவந்திருப்பது வெளியீட்டாளர்களின் சாதனையே

முதல் இதழை விட சற்று வித்தியாசமாக வெளிவந்திருக்கும் ரஜனியில் பேராசிரியர் 'வித்தி' பற்றி கல்வயல் குமாரசாமியின் சிறிய கட்டுரை ஒன்றும் கிடுகுவேலி' பற்றிய க. எஸ் சிவகுமாரனின் விமர்சனமும் இடம் பெற்றுளளது.

அடுத்த ரஜனி இதழ் பிரபல எழுத்தாளர் கே டானியலின் நாவலைத்தாங்கி வருகிறது டானியல் கதையென்றால் அப்படித்தான் இருக்குமெனற முடிவுக்கு வந்து விடாதீர்கள்! காதுக்குள் சொல்கிறேன். இது ஒரு காதல் பற்றியகதை.

# விலைவாசி

நீ உயர உயரப்
போவதனால் தான்
உயரப் பூக்கும்
"பௌர்ணமிகள்"
எனக்கு இனிப் தில்லை!

'பணம்' என்றால்
பிணமும் வாய்திறக்குமாம்
அது ஒரு காலம்
இன்று -
பிணம் கூட
பணத்தை மதிப்பதில்லை
நீதான்
பணப் பெறுமதியைப்
பாதியாக்கி
பண வீக்கத்துக்குப்
பல்லாக்குத் தூக்குகிறாயே!!

ஏழைகளின்
"இலட்சியமலர்"களை
இளமையிலேயே
கருக்கி விடும் நீ
நடுத்தர வர்க்கத்தின்
நம்பிக்கை நட்சத்திரங்களைக்
கூட
நடுவழியிலேயே
பறித்து விடுகிறாய்!

— தபோநிதி
சண்முகநாதன்

# அவலங்கள்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பதாசவும் தொழில்கிடைக்கும் என்ற நம்பிக்கை தனக்கில்லையென்று, உங்கு திரும்பிவந்து என்னத்தை செய்வது என்பதால் தான் முகாமிலேயே சிறிது காலத்துக்கு தங்கி களவாக ஏதும் உழைக்க முடிந்தால் உழைக்க முயற்சிப்பதாகவும் கணேசு கடிதம் எழுதியிருந்தான்.

நண்பர்கள் ஒவ்வொருவரும் படுகின்ற துயரங்களை என்னுள் நினைத்துப் பார்க்கின்றேன

...சீ...எவ்வளவு கேவலமான வாழ்க்கை முறையில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நாங்கள் படித்தும் முட்டாள்களாக அலைவதை எண்ணும்போது மனம் மிகவும் வேதனைப்படுகின்றது.

எங்களையெல்லாம் இந்தளவுக்கு உயர்த்திவிட்ட இந்த கல்விநெறி தான் அரசியல் வாதிகளிடம் சிக்கிவிட்ட அவலத்தை எங்களுக்குச் சொல்லி எங்களை திருப்திப்படுத்த துடிக்குது.

வியர்வை நழுங்கக் கூடாது என்பதற்காக படித்தபடிப்பைக் கொண்டு வேலைதேடிய எங்கள் சேட்டுக்கள் வியர்வையில் கொப்பளித்து கழுத்துக்கொலர்களை இழந்து நிற்கிறது

இந்தக்கால வடு என்றைக்கும் எல்லாரையும் உறுத்திக் கொள்ளத்தான் செய்யும்.

(தொடரும்)

நம்பிக்கை! நாணயம்!! பாதுகாப்பு!!!
இவை உங்கள் முதலீட்டிற்கு உத்தரவாதம்
நிலையான வைப்பிற்கு யாழ். நகரில் அதிஉயர் வட்டி 30% வழங்கும் ஒரே நிறுவனம்
SHABRA
துரிதமாகவும், துலக்கமாகவும் பிரதிகள் செய்யவும், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் உடனுக்குடன் தட்டச்சு செய்யவும் நாடவேண்டிய இடம் "ஷப்ரு"
61, நியூ புலர்ஸ் வீதி, கொழும்பு - 4- தொ. பேசி. இல: 589310
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ. பேசி. இல: 22073

# பிரபு பெரிய பரிகாரியார் ஆறுமுகம்பிள்ளை

கலாநிதி வே. இராமகிருஷ்ணன்

இலங்கையில் சித்தவைத்தியத்தைப் பேணி வளர்த்த ஒருசில குடும்பங்களில் சுழிபுரம் பிரபு தண்டிகை குலசேகர முதலியார் குடும்பம், ஆவரங்கால் தாமோதரம்பிள்ளை குடும்பம், சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் குடும்பம், வட்டுக்கோட்டை இராஜவைத்தியர் அ. க. குமாரசுவாமி குடும்பம், மாதகல் குலத்துங்க முதலியார் குடும்பத்தைச் சேர்ந்த சில்லாலை இன்னாசித்தம்பி குடும்பம், சில்லாலை அந்தனாசியார் குடும்பம், சுதுமலை அம்பலவாணர் குடும்பம், சுதுமலை அண்ணாமலை குடும்பம், யாழ்ப்பாணம் கஸ்தூரி முத்துக்குமார் குடும்பம், யாழ்ப்பாணம் அரசபிள்ளை நடராசா குடும்பம், 'வைத்தியன்' ஆசிரியர் கனகசபை குடும்பம், பருத்தித்துறை வல்லிபுரம் குடும்பம், ஒட்டகப்புலம் சமர்த்தர் குடும்பம், ஈறல் பெரியகுளம் முறிவுவைத்தியர் குடும்பம், மன்னார் ஜோன்மார்க் குடும்பம், மூதூர் அன்ரனி குடும்பம் முதன்மையானவை.

சுழிபுரம் பிரபு தண்டிகை குலசேகர முதலியார் குடும்பத்தைச் சேர்ந்த பிரபு வைரமுத்தாபிள்ளை ஆறுமுகம்பிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமக்கு ஒப்பாரும்மிக்காருமின்றி வைத்திய மேதையாக விளங்கினர். வைத்தியர்களும் மக்களும் இவரைப் 'பெரிய பரிகாரியார்' என்று அழைத்தனர். இன்றும் அவர்குடும்பத்தினர் 'பெரிய பரிகாரியார் குடும்பம்' என்றே அழைக்கப்படுகின்றனர். இன்று சித்தவைத்தியத்துறை பல்கலைக்கழக அந்தஸ்துப் பெற்றுள்ளதைக் கௌரவிக்குமுகமாகப் பெரிய பரிகாரியார் (1822-1917) நினைவாக 20-12-1980ல் பெரிய பரிகாரியார் ஞாபகார்த்த சித்தவைத்திய சங்கம் வெளியிட்ட 'சுழிபுரம் மாண்புமிகு பிரபு தண்டிகை குலசேகரம் முதலியார் சித்த வைத்திய பரம்பரை' என்ற நூலிலிருந்து பெரியபரிகாரியார் பற்றிய இக்கட்டுரையைப் பிரசுரிக்கின்றோம். (ஆ-ர்)

ஈழமண்டலத்தின் இலங்காபுரியில் வடபாலமைந்த கோழியபுரத்தில் தண்டிகை குலசேகர முதலியார் குடும்பம் என வழங்கப்பட்ட பிரபுக்கள் குடும்பத்தில் பத்தொன்பதாவது வைத்திய தலைமுறையில் வைரமுத்தாபிள்ளை ஆறுமுகம்பிள்ளை 1822-ம் ஆண்டு அவதரித்தார். இவர் சிறுவயதிலேயே உற்சாகம், ஆராய்ச்சி, தைரியம், துணிவு, சைவபக்தி உள்ளவராகக் காணப்பட்டார். தந்தையாரிடமும் பேரனார் வைத்தியமேதை சுப்பிரமணியம்பிள்ளையிடமும் வைத்தியக்கலையை இவர் ஐயந்திரிபறக் கற்றுத்தேறினார். அந்நிய ஆட்சியினராலும், மேனாட்டுவைத்தியர்களாலும், தமிழருடைய வைத்தியம் அழித்தொழிக்கப்பட்டபோது அதைக்காக்கவும் பேணிவளர்க்கவும் அயராதுழைத்து, பல வைத்தியர்களைத் தோற்றுவித்தும், ஏனைய வைத்தியர்களுக்கு ஆதரவளித்தும், பல சம்பவங்களில் வைத்தியத்தின் ஆற்றலை நிலைநாட்டியும், தமிழர்களினதும் வைத்தியத்தினதும் தன்மானத்தைக் காத்து சித்தவைத்தியத்தின் சிறப்பை உலகறியச்செய்த பெருந்தகை. சைவப்பணியில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்ட இவர் சிறந்த பக்திமான் இவர் பறாளை ஈசுர விநாயகர் ஆலயத்தின்பரிபாலனத்தை 1859ம் ஆண்டு தன் தந்தையாரிடமிருந்து பெற்றுக்கொண்டார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே முழுவதையும் புதுப்பித்துக்காட்டுவித்து கும்பாபிசேகமும் செய்தார். மருதடி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழாவின்போது வருடந்தோறும் காவடி எடுத்து மகிழ்ந்தார் இக்காவடித் திருப்பணியின்போது யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான நாதஸ்வர வித்துவான்களும் இலவாசமாகக் சேவைசெய்தார்களாம்.

வைத்தியம், சோதிடம், மாந்திரீகம், தமிழ், சைவம் ஆகியவற்றிற்கு ஆறுமுகம்பிள்ளை ஆற்றிய பணி அளப்பரியது எவலாம் தனக்குப் பின்னும் இவற்றை அழிந்துபோகாமல் காப்பாற்ற விரும்பிய இவர் சில பண்டிதர்களை அமர்த்தி இத்துறைகளில் தான் செய்த ஆராய்ச்சிகளை பன்னிரண்டு ஏடுகளாக எழுதியும், தகுதியுள்ளோர்க்கு அவற்றை வழங்கியும் அருளினர் என்றால் மிகையாகாது இவ்வேடுகள் ''பெரிய பரிகாரியார் வைத்தியம்'' என்று அழைக்கப்படுகின்றன. இவ்வாறு புதுவைத்திய ஏடுகளை எழுதியதனால் தமிழ் இலக்கியத்திற்கும் சேவைசெய்தவர் ஆகினர். அக்காலத்தில் பல ஆங்கில வைத்திய நிபுணர்களால் தீர்க்கமுடியாத நோய்களை அவர்கள் முன்னிலையிலேயே தமிழ் மருந்துகளால் அவற்றைக் குணமாக்கியதன் மூலம் சித்த வைத்தியத்தின் ஆற்றலையும் பெருமையையும் உலகறியச்செய்த சம்பவங்களும் பல உண்டு. இவ்வாறு இவர் மாந்திரீகத்தின் திறமையை நிலைநாட்டிய பல சம்பவங்களும் பலருக்கும் தெரிந்ததே. இவர் தன் காலத்தில் 'மணி, மந்திர அவுடதம்'



என்ற வைத்தியத்திலும் சோதிடத்திலும், மாந்திரீகத்திலும் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கினர் என்பதை வரலாறு தெரிவிக்கின்றது. தம்பிப்பிள்ளை, வைரமுத்து, சுப்பிரமணியபிள்ளை, சின்னப்பு, குணரத்தினம் தாமோதரம்பிள்ளை ஆகியோருக்கு வைத்தியம் கற்பித்து பெரும் நிபுணர்களாக்கினர் பெரியார்.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் குறிப்பாக சொ்ப ரோகங்களில் அவருடைய சாதனைகள் பிரபல்யம் வாய்ந்தவை. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மானிப்பாயிலுள்ள ஒரு பெரும் செல்வந்தரின் மனைவி பிரசவவேதனையில் அவதிப்பட்டார் ஆங்கில வைத்திய நிபுணர்களால் பிரசவத்தை நடத்துவிக்கமுடியவில்லை. சுதேச வைத்தியர்களாலும் பிள்ளையைப் பிறப்பிக்கமுடியவில்லை. பிள்ளை குறுக்காக இருக்கிறது என்றும் சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது சத்திர சிகிச்சை செய்துகொள்ள விரும்பாத கணவனுக்கு பெரிய பரிகாரியாரியின் ஞாபகம் வந்தது. உடனே பெரியவரிடம் சென்று நிலைமையை விளக்கி அழைத்துவந்தார். அவர் வந்து ஒரு நாளிகைக்குள் ஆண் மகவு பிறந்தது. ஆற்றலை மெச்சிய தனவந்தர் ஒரு புது குதிரை வண்டியை அன்பளிப்புச்செய்தார். பெரிய பரிகாரியார் மிகவும் ஆறுதலாகவே கரும மாற்றும் வழக்கமுடையவர். ஆனால் கர்ப்பிணிகளுக்கும், விஷம் தீண்டியவர்களுக்கும் உடன் சென்று சிகிச்சையளிப்பார்

1872ம் ஆண்டு நடந்த சம்பவம் பெரிய பரிகாரியாரின் திறமையை எடுத்துக் காட்டுவதாகவும் தமிழருக்கும் சித்த வைத்தியர்களுக்கும் பெருமை அளிப்பதாகவும் அமைந்தது.

குழந்தை பிறந்தபின்னர் தாயின் சர்ப்பப்பை தலைகீழாக புரண்டுவிட்டது. இக்கட்டான நிலையில பெண்ணின் கணவர் டாக்டர் கிறீன் என்பவரின் உதவியை நாடினர் கருப்பையினைத் திருப்பத் தம்மால் இயன்ற முயற்சிகள் செய்தும் வெற்றிபெறவில்லை. டாக்டர் கிறீன் அங்கு இருக்கும்போதே கடைசிக்கட்டமாக பெரிய பரிகாரியார் வரவழைக்கப்பட்டார். அவர் வந்ததும் யாரும் எதிர்பாராவண்ணம் போத்

(14ம் பக்கம் பார்க்க)

---

## புதிய புத்தகம் — து. வைத்திலிங்கன்

ஒரு எழுத்தாளனுக்கு தான் எழுதும் வார்த்தைகள் ஒரு சில உள்ளங்களையாவது ஆழத்தொடவேண்டும் என்ற உணர்வு இருக்கவேண்டும் அந்த உணர்வு நிச்சயம் செங்கையாழியானிடம் நிறையவே உண்டு ஒரு காரியாதிகாரியாக (இப்பொழுது உதவி அரசாங்க அதிபர்) பணியாற்றிய ஒருவரால் நிச்சயம் அந்த உணர்வைப் பெறமுடியும் தான் எங்கு இருக்கின்றாரோ அந்த இடத்தின் குறைகளை முறையாகக்கண்டு அந்தக் குறைகளை தீர்க்க முயலும் மாக்க முயலும் ஹாஜியார் அபுதாபி சங்கக்கடை மனேஜர் ஹமீட் சயிக்கின் போன்ற கயவர்களை நன்றாகவே இனம் காட்டியுள்ளார் நெருப்பாக வாழ்ந்த யொகாரு கடைசியில் பிழைவிட்ட தனது மகனைக்காட்டிக் கொடுக்காமல் தானே பழியைச் சுமந்து குடிசையிலிருந்து வெளியே வரும்போது நமது இதயம் வரிக்கிறது. கதையைவாசித்து முடிந்தாலும் யொகாரு - என் ஆசை யொகாரு குரல் ஒரு சோகத்தடன் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

செங்கை ஆழியானின்

### அக்கினிக்குஞ்சு

யாழ். இலக்கிய வட்ட வெளியீடு

'நாடி' பிடிக்கும் சாமர்த்தியம் அவரது எழுத்தில் பரிணமித்தல் வழககம். அவரது 'அக்கினிக்குஞ்சுகள்' நூலில் இந்த 'நாடி' பிடித்துப்பார்க்கும் பணியை மிக நேர்த்தியாகச் செய்துள்ளார். அக்கனிக்குஞ்சில் இரண்டு குறுநாவல்களுள்ளன 'யொகாரு' என்னும குறுநாவலில் கிழக்கிலங்கைப் பகுதியில் வாழும் ஓர் அபலைப் பெண்ணைச் சித்திரித்திருக்கின்றார். இந்த இருபதாம் நூற்றாண்டிலும். ஜனநாயக உணர்வுகள், சமூக விழிப்புணர்வுகள் பெருகி சமூகத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள வேளையிலும் கிராமப் பகுதிகளில் சுரண்டல்' விசுவரூபம் எடுத்திருப்பதை யாரும் உணரலாம். ஒருஏழைப்பெண்ணை, அவளது வறுமையையும் - ஆற்றாமையும் தங்களுக்கு வச

அவரது மற்றக் கதையான அக்கினிக் குஞ்சுகள் - நெருக்கடி நிறைந்த காலகட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. கதையை வாசிக்கத் தொடங்கியதும் முடிவு வரை ஒரு பரபரப்பு மனதில் ஏற்பட்டு விடுகிறது. தமிழ் சமுதாயத்தை ஆட்டிப் படைக்கும் பிரச்னையை நன்றாக உள்நோக்கிப் பார்க்கும் ஆசிரியர் நாணயத்தின் இரு பக்கங்களையும் பார்த்துள்ளார்.

பிரச்னைகள் தீர்ப்பதற்கு ஆயுதம்ஏந்துதல்பரிகரணமாக அமையுமா?

அல்லது சாத்வீகமான அணுகுமுறைதான் உகந்ததா?

இரு கேள்விகளுக்கும் வாசகர்களேயே விடையைத்தேடிக் கண்டு பிடிக்கட்டும் என்று எண்ணமே அவரது எழுத்துக்களில் நிழலாடுகிறது.

இன்றைய தமிழ் இளைஞன் - அவனது எண்ண ஓட்டங்கள் சந்தர்ப்ப வசங்களால் அவன் ஆபத்தில் மாட்டிக்கொள்வது படித்து விட்டு பயனில்லாமல் ஏக்கத்துடன் திரிவது போன்ற வெகு யதார்த்தத்தைக்காண முயன்றுள்ள செங்கையாழியான் பதிலையும் விண்டு வைக்கின்றார்.

பாதிக்கப்பட்டதமிழ் இளம் சந்ததியின் ஏக பிரதிநிதியாக செல்வன் காணப்படுகிறார். தமிழ் சமுதாயத்தை வாட்டும் ஏன் முழுச்சமுதாயமே தலை குனியத்தக்க அளவுக்கு சீதனக் கொடுமையும், சாதிக் கொடுமையும் ஒழியாமல் பூதாகரமாக இன்றும் நிலை பெற்று இருப்பதை வன்மையாகச் சாடுகிறார் ஆசிரியர் படித்தவர்கள் வெட்கித்தலை குனியுமளவுக்கு இன்னும் தமிழ் சமுதயாத்தில் இவ் வியாதிகள் மாறாமல் இருப்பதை இக்கதை நன்கு வெளிப் படுத்துகிறது

பிரதி ஒன்றின் விலை ரூ 6-90 மட்டுமே.

---

## நடப்பு

ஈழ - காண

''வல்வெட்டித்துறை மக்கள் சரித்திர காலம் முதல் கப்பலோட்டிக் கடல் வாணிபம் செய்தவர்கள்.''

இதுவரலாறுகண்ட உண்மை. இதை எவருமே மறுப்பதற்கில்லை.

இந்த வரலாற்று உண்மையை பத்திரிகையாளர்களிடம் அண்மையில் மீண்டும் ஒரு முறை தெளிவுபடுத்தினார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி.

பல்கலைக்கழக மாணவர்கள் அசம்பாவிதம் குறித்து பத்திரிகையாளர் மகாநாட்டுக்காக அண்மையில் பத்திரிகை ஆசிரியர்களும் செய்தி ஆசிரியர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அழைத்த விஷயம் முடிந்ததும் வெங்காயக்கதை வந்தபோது, மொறட்டுவவுக்கு அண்மையில் கடலில் மூழ்கிய கப்பல் பற்றிக்கூறிய பத்திரிகையாளர் ஒருவர், அந்தக் கப்பலின் மாலுமிகள் 'வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள்' என்றொரு விசனக் குறிப்பொன்றையும் தெரிவித்தார்.

அப்போதே அமைச்சர் லலித் சிரித்தவாறே மேற்கண்டவாறு கூறினார்

'வெலா 6' என்ற அந்த சிங்கப்பூர் சப்பலின் மாலுமிகள் எட்டுப்பேருமே வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள்

★ ★

அந்த நாட்களில் நாடு முழுவதும் வெங்காயம் கிலோ ரூபா 50 முதல் 100 வரை விற்பனையாகிக் கொண்டிருந்த வேளையில் லுணுவ அங்குலான, மொறட்டுவபகுதிகளில் பம்பாய் வெங்காயம் கிலோ 5 ருபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது

இது சாதாரண வெங்காயம் அல்ல உப்பு ருசி கலந்த வெங்காயம்

சிங்கப்பூர் கப்பலிலிருந்து இந்து சமுத்திரத்தில் மிதந்து ஒதுங்கிய வெங்காயத்தையே அப்பகுதி மக்கள் சேகரித்து அந்த விலையில் விற்றார்கள். அதே வெங்காயம் கொழும்புக்கு வந்து 30 ரூபாவாகி விலை போனது

★ ★

அரசியலில் ஈடுபடுவதற்காக எனது அரசாங்க உத்தியோகத்தைத் துறந்து ஒரு மாத சம்பளத்தையும் திறைசேரிக்கு அனுப்பிவிட்டு நேரடியாக புளத்சிங்கள தொகுதிக்குச்சென்று அன்றைய நிதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்காவை என்னால் முடிந்தவரை கண்டித்து உரையாற்றினேன்.

அரசாங்க அதிபர்களாகிய நீங்களும் அரசியலில் ஈடுபடுவதற்காக உங்கள் பதவிகளை தூக்கி எறிந்து விடாதீர்கள். ஆனால் என்னைப்போல் நிதி அமைச்சராக வரமுடியுமென்றால் பதவியை ராஜினாமாச் செய்யுங்கள்:

எமது நிதி அமைச்சர் றொனி அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே பலத்த சிரிப்புக்கு மத்தியில் வேடிக்கையாக இவ்வாறு கூறினர்.

---

நீதிபதி: உனக்கு மரண தண்டனை விதிக்கிறேன். கடைசியாக ஏதாவது கேட்க விரும்புகிறாயா?

கைதி: நான் சாகும் காட்சியை ரூபவாகினியில் ஒளிபரப்புவதுடன் தமிழிலும் அந்தக் காட்சி பற்றிய அறிவிப்பை வழங்கவும் ஏற்பாடு செய்யுங்கள் ஐயா.

—ஜனனி புஷ்பநாதன்

# ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன்

பண்டு தொட்டு வழங்கி வரும் சைவவழிபாட்டு மரபுகள் உருமாற்றம் பெறுமல் புதுமையும், பழமையும் இணைந்து ''முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப் பெற்றியதாய்'' க் காலத்தை வென்று நிற்கும் சமய வழிபாட்டு மரபுகளில் தனக்கேயுரிய தனிப்பண்புகளுடனும் பழமைச்சிறப்புக்களுடனும் தெய்வீசப்பெருமையுடனும் திகழ்வது ஒட்டுசுட்டான தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயமாகும்.

இவ்வாலயம் ஏறத்தாழ கி. பி. 12ம். 13ம் நூற்ருண்டில்தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மூன்று சித்தர்கள் வன்னிப்பிரதேசத்துக்கு வந்தனர். இவர்கள் மூவரும் தற்போது ஒட்டுசுட்டான் என அழைக்கப்படும் இடத்தில் பிரிந்து சென்றனர். முதலாவது சித்தர் இவ்வூருக்கு தென்மேற்கேஇரண்டு மைல் தொலைவிலுள்ள வாவட்டி மலையில் தியானத்தில் இருந்து சமாதி அடைந்தார் இரண்டாவது சித்தர் ஒட்டுசுட்டானுக்கு தெற்கே இரண்டுமைல் தொலைவிலுள்ள காதலியார் சமளங்குளத்தில் சமாதியடைந்தார். மூன்ருவது சித்தர் ஒட்டுசுட்டானிலே ஒரு கொன்றை மரத்தின் கீழ் நிஷ்டையில் இருந்து சமாதி அடைந்தார். இவர் பூசித்த சிவலிங்கமும் இவருடனே சமாதி அடைந்திருக்க வேண்டும் இவ்விடத்திலேயே பிற்காலத்தில் சிவலிங்கம் தோன்றியது. யாழ்ப்பாணம் இடைக்காட்டைச் சேர்ந்தவீரபத்திரர் என்னும் சைவ வேளாளரும்

அவருடைய இரண்டு பிள்ளைகளும் வன்னிக்குச் சென்று குடியேறினர். வீரபத்திரர் குரக்கன் பயிரிட்டார், குரக்கனை வெட்டியெடுத்த பின்னர் குரக்கன் ஒட்டுக்களுக்கு நெருப்புவைத்தார். கொன்றை மரத்தினடியில் ஒட்டுக்கள் எரியாமல் இருப்பதைக் கண்டார். ஒட்டுக்களை நீக்கவேண்டும் என்று எண்ணி மண்வெட்டியால் வெட்டியபோது இரத்தம் கசிவதைக் கண்டார் இந்நிகழ்ச்சியின் மர்மத்தை அறியாத வீரபத்திரர் அப்பகுதியை ஆண்ட வன்னியனிடம் கூறினுர். வன்னியன் அவ்விடத்தில் கோயிலமைத்து வழிபாடு செய்யுமாறு கூறினுன்.

**சு. சந்திரசேகரம்**

கொன்றையடிப் பிள்ளையார் என்னும் சிறு ஆலயம் அமைக்கப்பட்டது சில நாட்களின் பின் அவ்விடத்திலே சிவலிங்கம் சுயமாகத் தோன்றியதை மக்கள் கண்டார்கள். தானுக தோன்றிய லிங்கம் ஆகையால் தான்தோன்றியீஸ்வரர் எனப் பெயரிடப்பட்டது. ஒட்டுக்களை சுட்டதினுலே பிரபல்யமான இந்த இடம் ஒட்டுசுட்டான் எனப்பெயர் பெற்றது.

ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரர் கோவிலை குளக்கோட்டான்கட்டியதாகக் கூறுவர். ஒட்டுசுட்டானுக்கு அண்மையிலுள்ள முத்துஐயன் கட்டு குளத்தையும் குளக்கோட்டான் அமைத்ததாகக் கர்ணபரம்பரைக் கதையுண்டு

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சின்னத்துரை அவர்கள் பகிரங்க வேலைப் பகுதி மேற்பார்வையாளராக கடமையாற்றினுர் இவர் ஆலயத்தின் அருகில் தெப்பக்குளம் ஒன்று இல்லை என எண்ணி இக்காலத்தில் பல இலட்சரூபா செலவில் கட்டி முடித்தார். தனது சொந்தக் காணியை விற்றுத் திருப்பணி செய்தார் என இப்பகுதி மக்கள் நன்றிப் பெருக்குடன் கூறிக்கொள்கின்றனர். இக்கேணி இந்தியாவில் சிதம்பரத்தில் உள்ள கோவிலின் கேணி அமைப்பைக் கொண்டது

தான்தோன்றீஸ்வரர்க்கு தினமும் மூன்று காலப் பூசை நடைபெறுகிறது விசேட தினங்களில் விசேடபூசைகள் நடைபெறும். ஆனிமாத அமாவாசையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 நாட்கள் திருவிழா நடைபெற்று பௌர்ணமியன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். வேட்டைத்திருவிழா'தேர் தீர்த்தத் திருவிழாக்களில் வன்னி மக்களும் யாழ்ப்பாண மக்களும் கலந்துகொண்டு இறைவன் திருவருளைப் பெறுவர். தான் தோன்றிஈஸ்வரர் மீது கொக்குவில் குகதாசர் ச.சபாரத்தினம் முதலியார் பாடிய 1883 ஆசிரிய விருத்தமும் ஓர் ஊஞ்சற் பதிகமும் வேட்டைத் திருவிழாவின்போது படிக்கப்படும். பழம்பாசி ஆறுமுகம் பாடிய பக்திப்பாடல் சிலவும். கொடிகாமம் முருகேசு உபாத்தியாயர் பாடிய ஈசுவரர் பாமாலையும் உள.

## சிறுகதை

[5ம் பக்கத் தொடர்ச்சி]

இரவு ஓர் பெரும் சுமைமையாக கழிகிறது. முகத்தை கண்ணுடியில் பார்க்கிறேன். சிவந்தருக்கின்றது நன்கு அழுதுவிட்டேன் போலும். கிறீமை பூசி மறைத்துக் கொள்கிறேன். கண்ணுடியில் எனது உருவமே எனைப் பார்த்து ஏளனமாய்ச் சிரிக்குமாப் போல் உள்ளது. அது என்னை மட்டும் பார்த்துச் சிரிக்கவில்லை எங்கள் பரம்பரையை பார்த்துச் சிரிக்கின்றது போலும், எடுத்த முடிவோடு சுகந்தியிடம் விரைகிறேன்.

' சுகந்தி... உமக்கே இப்படியான ஒரு எண்ணம் வந்தது? இந்த முடிவை என்னுல நினைத்துக் கூடப்பார்க்க முடியாமலிருக்கிறது. நான் இங்க உம்முடையஅண்ணன்ரை நண்பன் என்ற முறையிலே தான் வந்து போறன். உம்மை நான் விரும்புறன். ஆனுல் காதலிக்க முடியாது. ஏனென்ருல் ஒருவனும் தன்ரை சகோதரியை காதலிக்கிறதில்லை. நான் என்னுடைய முடிவைச் சொல்லி விட்டன். உம்முடைய முடிவு இதுவாகத் தான் இருக்குமென்ருல பயமில்லாமல் சொல்லிப்போடும். அதற்கு பிறகு இந்தவாசல்படி மிதிக்க மாட்டன்.

ஒரு ஆணுக்கும்பெண்ணுக்குமிடையிலான அன்பு பிணைப்பு காதலாய்த் தான் இருக்க வேண்டுமா? அது ஏன் சகோதர பாசமாயிருக்க கூடாது'' ஒருவாறு சொல்லி முடித்து விட்டேன். அது வரை கலங்காமலிருந்ததுஎன் அதிர்ஷ்டம் நிமிர்ந்துசுகந்தியை பார்க்கிறேன், அவள் முகத்தில் நான் எதிர்பார்த்த ஏமாற்றம் இல்லை, அதிர்ச்சி இல்லை அழுகை இல்லை!! அவள் முகத்தில் தெளிவு, ஆம் நான் கூறியதை அவள் நம்பி விட்டாள போலும். அந்த விதத்தில் நான் என்னை சமாதானப்படுத்திக் கொள்கிறேன் 'நான் தான் பிழைவிட்டிட்டன் நீங்கள் இங்கை வர வேண்டும். என்னை மன்னியுங்கோ. நான் தந்த கடிதத்தை இன்றையோடமறந்திடுங்கோ' அவள தழுதழுத்த குரலில் கூறிமுடிக்கிருள்

'சத்தியமா சுகந்தி, நான் இந்த சம்பவத்தை அடியோட மறக்கிறன்'. நான் அவளிடம் விடை பெறவில்லை. ஏனென்ருல் என் கண்கள் கலங்குகின்றன தொண்டை அடைக்கின்றது.. மெதுவாகச் செல்கிறேன், மோட்டார் சைக்கிள் கண்ணுடியில் அவளைப் பார்க்கிறேன். தலை குனிந்து நிற்கிருள், தன் செயலுக்கு மனம் வருந்துகிருள் போலும்!

மோட்டார் சைக்கிள் விரைகிறது. அது வரை அடக்கி வைத்திருந்த அழுகை வெளியாகிறது நான் அழுகிறேன் அழுகிறேன் என்ருல் அழத்தான் முடிந்தது, அதுவும் தனிமையில் என்னை ஒருவரும் பார்க்கவில்லை. அதனுல் துணிந்து அழுகிறேன்.. சாலைகளின் மரஞ்செடிகளும் கட்டிடங்களும் எனக்காகவும் எம்மைப்போன்ற பலருக்காவும் நிமிர்ந்து நின்று அஞ்சலி செலுத்துவதைப் போல் காட்சியளிக்கிறது.

— யாவும் கற்பனை

## வழிபாட்டு

(6 ம்பக்கத் தொடர்ச்சி)

நிறைவுற்ற பின்னரே நிறை குடத்தைக் கலைத்தல் வேண்டும்.

இவ்வாறே அபிஷேகம்செய்யப்பட்ட தீர்த்தம். கோவில் விளக்கிலுள்ள எண்ணை முதலியவற்றை மருந்தென உடலில் தேய்த்துக் கொள்வதும் தவருகும். இவை கோவில் திரவியத்தை அபகரித்தல் புனிதப் பொருளை அவமதித்தல் ஆகிய பாவங்களுள் அடங்கும்

## பிரபு பெரிய பரிகாரியார் ஆறுமுகம்பிள்ளை

13-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் ஒன்றைத் திறந்து நோயாளியின் மூக்கில் வைத்து உறிஞ்சும்படி கூறினுர். அவளும் மிக ஆழமாக உறிஞ்சியிழுத்தாள். உடனேயே கருப்பை தன்னிடத்திற்கு வந்துவிட்டது. நோயாளி குணமடைந்து விட்டார். டாக்டரினுல் முடியாத ஒன்றை சித்தவைத்தியர் செய்தது பெரிய அதிசயமாகவே இருந்தது. டாக்டர் கிறீன் பெரிய பரிகாரியின் சிறந்த வைத்தியமுறையைக கண்டு அவற்றை அறிய விருமபினுர். அடுத்து பல மாதங்கள் டாக்டர் கிறீன பெரியவரின் வீட்டை நாடியதில் வியப்பேதுமில்லை அன்று அவர் உபயோகித்த மருந்தினைப்பற்றியறிய எவ்வளவோ முயற்சி செய்தார் எனினும் பெரியவர் அதை வெளியிடவிருமபவில்லை. யாழ்ப்பாண மக்களிடையே 25 வருட மருத்துவப்பணி புரிந்த டாக்டர் கிறீன் இந்த சம்பவம் நடந்த அடுத்த வருடம் 873ல் இலங்கையைவிட்டு அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்ருர்

சர்வதேச சட்டமேதையும். தமிழ்த் தலைவருமான திரு ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தாயார் நோயுற்று படுக்கையாகிவிட்டார் பலவிதமான வைத்தியங்கள் செய்தும் எழுந்திருக்கமுடியாதநிலை. இந்நிலையில் பெரிய பரிகாரியார் வரவழைக்கப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டது நோய் தீர்ந்து பின் பலவருடங்கள் சுகதேகியாக சீவித்திருந்தார். இதன் காரணமாகவே இக்குடும்பத்தாரும் பின்னுளில் ஜி. ஜி. நட்புக்கொண்டாடினுர் என்ருல் மிகையாகாது.

(அடுத்தவாரம் முற்றும்)

# உண்மையின்பரிசு




சிலுவையில் அறையப்பட்ட யேசுவின் அந்தப்படத்தின் முன் சின்னஞ்சிறிசுகள் நின்று ' யேசுவே, எங்கள் பிதாவே, எங்களைப்பாவமான சாபத்தினின்றும் என்றும் காத்தருளும் கர்த்தரே'' என்று பிரார்த்தனை செய்யும் போது ' சிறுவர்களே! உங்களை யேசு ஆசீர்வதிப்பார்'' என்று கூறி, சிறுவர்களுக்கு இனிப்புப்பண்டங்களை வழங்கும் சுவாமியார் வழக்கம் போல ஒவ்வொரு சிறுமியையும் தனித்தனியாக அழைத்து அந்தவாரம் நடந்து முடிந்த பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் அவர்கள் பெற்ற புள்ளிகளைக் கேட்டறிந்தார். சாந்தினி. கலா ரூபி, சுசந்தி- இப்படி ஒவ்வொருவரும் தாம் உண்மையாகப் பெற்ற புள்ளிகளைவிடச் சற்றுக்கூடுதலான புள்ளிகளைச் சுவாமிக்குச் சொல்லி அவரிடமிருந்து பாராட்டுதல்களைப் பெற்றனர் மைதிலியின்முறை வந்தது. அவள் சுவாமியாரிடம்வந்து தான்பெற்ற புள்ளிகளைக் கூறியதும் சுவாமியாருக்கு கோபமும் துக்கமும் ஏற்பட்டது. ஏனெனில் அவள் எல்லாப்பாடங்களிலும் நாற்பது புள்ளிகளுக்குக்குறைவாகவே பெற்றிருந்தாள்.

''மைதிலியைப் போலில்லாமல் எல்லோரும் கவனமாக படித்து முன்னேறவேண்டும், நீங்கள எல்லோரும் கெட்டிக்காரர்கள்'' என்று சுவாமியார் கூறியதும் மைதிலியைத் தவிர ஏனைய சிறுமிகள் கைதட்டி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். எல்லோரும் தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். மைதிலி மாத்திரம் யேசுவின் முன் நின்று, ''யேசுவே இன்றுபோலவே என்றும் நான் உண்மைபேசுபவளாக என்னை வளர்த்துக்கொள்ளும்'' எனப்பிரார்த்தித்ததைக்கேட்ட சுவாமியாருக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது ஏனைய சிறுமிகள் தனக்குப் பொய்யான புள்ளிகளைச் சொல்லி தன்னிடமிருந்து பாராட்டுதல்களை பெற்றுவிட்டனரா என்பதை அறிய அவர்களின் பாடசாலைக்குச் சென்று பரீட்சையில் அவர்கள் பெற்றபுள்ளிகளைப்பார்த்தார். மைதிலியைவிடக் குறைந்த புள்ளிகள் பெற்றவர்கள்கூட, பொய்கூறித் தமது புள்ளிகளைக் கூட்டிச சொல்லிவிட்டதை அறிந்ததும் சுவாமியாருக்கு மைதிலிமேல் பாசம் ஏற்பட்டது அடுத்த ஞாயிறு வரட்டும் என காத்திருந்தார் சுவாமியார்.

இன்றும் வழமைபோல அந்த சிலுவையில் அறையப்பட்ட யசுவின் முன் முழந்தாளிட்டு நிற்கும் சின்னஞ்சிறிசுகள் முன்தோன்றிய சுவாமியார் கையில் பல பாடப் புத்தகங்களும் இனிப்புப் பொட்டலங்களும் இருந்தன. ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த புள்ளியைப் பெற்று வருசகே இந்தப் புத்தகங்களைப் பரிசாக அளிக்கப்போகிறேன் என்றுகூறி மைதிலியின் கரங்களில் அவைகளைக் கொடுத்தார்.

உண்மையாகவே மைதிலியைவிடக் குறைந்த புள்ளிகள் பெற்றும் தாம் பொய் கூறிப் புள்ளிகளை கூட்டிச் சொல்லியதால் தமக்கு புத்தகப்பரிசுகள் கிடைக்கவில்லையே என ஏனைய சிறுமிகள் துன்பப்பட்டனர்

கையில பாரத்துடன் புத்தகங்களைச் சுமந்தவாறு மைதிலி அதே யேசுவின் முன்னின்று பிரார்த்திக்கிருள்; ''எல்லோருடைய பாபங்களையும் சுமக்கும் யேசுவே, உண்மை பேசியதற்காக இந்தப்புத்தகங்களை எல்லாம் சுமந்து நிற்கிறேன் உண்மைபேசியதால் கிடைத்த பரிசான இந்தப் புத்தகங்கள் என்னைமேலும் உயர்த்த ஆசீர்வதியும் யேசுவே!'' மைதிலியின் பிரார்த்தனையைப் பார்த்துக்கொண்டு நின்ற மற்றச் சிறுமிகள் பொய்சொல்லியதால் ஊமையாகிப் பேசாமல் நின்றனர்.

**ஜனனி புஷ்பநாதன்**

## தரையில் பிறந்த மீன் குஞ்சுகள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான கப்பல்காரர்கள் தான் என்பதை உறுதிப்படுத்தினுர்.

''அரசாங்கத்திற்கு வெங்காயம் ஏற்றிவந்தவர்களல்லவா நாம்!

''மூழ்கிய கப்பலிலிருந்து தப்பியது ஒருகதை! கரைக்கு வந்ததும் ஏற்பட்ட அனுபவம் வேறு ஒரு கதை!

''இந்தக் கப்பலில் கே தர்மலிங்கம் பிரதம உத்தியோகத்தராகவும், ஜி. சிறிசுந்தரர் இரண்டாவது உத்தியோகத்தராகவும்; ஜி விஜயசுந்தரம் என்ஜீனியராகவும், வி. நேரு ரேடியோ உத்தியோகத்தராகவும், ஆர். ஜே பிரான்ஸிஸ் பிரதம உத்தியோகத்தராகவும். ஈ. ஜெயரத்தினம் இரண்டாவது உத்தியோகத்தராகவும், எஸ். சிவாஜி மூன்ருவது உத்தியோகத்தராகவும், கடமையாற்றினுர்கள்.

## சகுனம்

காலையில் விழித்த
கறுப்புப் பூனை
இரையைத் தேட
வெளியே சென்றது

குறுக்கே மனிதன்
போவது கண்டு
கறுப்புப் பூனை
கவலை கொண்டது

போகின்ற காரியம்
வெற்றியோ தோல்வியோ
பாவி மனிதன்
குறுக்கே என்றது.

ந. சுதாகரன்
யாழ். மத்திய கல்லூரி

## பெண்ணுக்குள்ள பண்புகள்

நான்கு பண்புகள் ஒரு பெண்ணிடத்தில் இருக்க வேண்டும். அவளுடைய இதயத்தில் நல்லொழுக்கம் குடிகொண்டிருக்க வேண்டும். அடக்கம் அவளுடையநெற்றியை அழகு செய்யவேண்டும் இனிமை அவளது உதடுகளிலிருந்து வழிந்தோட வேண்டும். சுறுசுறுப்பு அவளது கைகளில் தவழவேண்டும்.

— மில்க்வைற்

★ இன்று தேசிய மறைக் கல்வி தினம்

# கிறிஸ்தவ உருவாக்கலில் பெற்றோரின் பங்கு

அனைத்திலங்கை கத்தோலிக்க திருச்சபை இவ்வருடம் ஜூலை மாதம் 8ம் திகதியை மறைக்கல்வித் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது இத்தினத்தின் மையப்பொருள் 'கிறிஸ்தவ உருவாக்கலில் பெற்றோரின் பங்கு' என்பதாகும். திருமறை வல்லுநர் புனித. அகுஸ்தீனுர் திருமணம் என்னும் திருவருட் சாதனம் பற்றிக் குறிப்பிடுகையில், திருமணத்தை ஒரு கொடையாக்கும் கொடைகள் மக்கட் பேறு, பிரமாணிக்கம், அருட்பிரசாதம் என்னும் மூன்றுமாகுமென்று அறுதியிட்டுக் கூறியுள்ளார். இவற்றுள் முதலிடத்தை வகிப்பது புத்திர சந்தானமே. புத்திர சந்தானம் எனும்போது அவர் குறிப்பிடுவது பிள்ளைகள் ஆவலுடன் வரவேற்கப்படுவதையும், பரிவன்புடன் வளர்க்கப்படுவதையும் இறை பற்றுடன் பயிற்றப்படுவதையுமே கருதுகிறேம் எனக் குறிப்பிடுகிறுர்.

## கிறிஸ்துதாசன்

குழந்தையொன்று கர்ப்பம் தரித்தமுதலே பெற்றேரின் பங்கு ஆரம்பிக்கிறது. கருவிலே உருவான சிசுவைக் கடவுளின் கொடையாகக் கருதி அதில் மரியாதையும் அன்பும் கொண்டிருக்க வேண்டும். கருவிலே சிசு உருவாகியிருக்கும் காலத்தில் தாயின் உள்ளத்திலே தூய சிந்தனைகள் உருவாகவேண்டும் என்பது உளவியலாளரின் துணிவாகும். மனைவி கர்ப்பமடைந்துள்ள வேளையில் கணவன் அவளிடம் அதிக அக்கறையுடன் நடந்து பொறுப்புடனும் அனுதாபத்துடனும் அன்புடனும் பழகி பண்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

தாயானவள் தன் குழந்தைக்குச் சொந்தப் பாலையே ஊட்டி வளர்க்க வேண்டும். குடும்ப வேலைகளில் குழந்தைகளும் சேர்ந்து தமது பங்களிப்பைச் செய்ய இளமை முதலே பயிற்சியளிக்கப்பட வேண்டும். இதனுல் குடும்ப ஒற்றுமை சிறப்படைவதுடன் பொருளாதாரமும் சீரடையும்.

தந்தையின் ஆளுமையின் தொடர்ச்சியே குழந்தை. ஆகவே குழந்தைக்குக்கல்வி புகட்டுவது தந்தையின்கடமையும் உரிமையுமாகும். திருமணத்தின் நோக்கங்களாகிய குழந்தைபெறுவதும் அதற்குக் கல்வியூட்டுவதும்ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்படமுடியாதவை. குழந்தைக்குக் கல்வி புகட்டுவது அதன் ஐந்து வயதின் பின்பே என்பது தவருன கருத்தாகும்.

குழந்தைகளுக்குச் சமயச் சூழ்நிலையில் கல்வி புகட்டப்படல் வேண்டும். அத்தகைய உகந்த சூழ்நிலையில் கல்வி புகட்டுவிப்பது பெற்றேரின் பாரியகடமையாகும். அறிவிலும்ஒழுக்கம் சார்ந்த அனைத்திலும் குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றேர் ஆசிரியர்களாகவும் விளங்கிடவேண்டும்.

கிறிஸ்தவப் பெற்றேர் தம் குழந்தைகளுக்கு தமது கிறிஸ்தவப் பண்பைக் கொடுத்து அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கவேண்டும். கிறிஸ்தவத் தன்மை திருமுழுக்கின் வழியாக வந்தடைகின்றதென்ருலும் திருமுழுக்குப் பெறும் உரிமை கிறிஸ்தவப் பெற்றேர் என்பதாலேயே வந்தடைகிறது. பெற்றேரின் சமய உணர்வும், கடவுள் பற்றும் வெளிப்படும் முறைகளை நேரில் காணும் குழந்தை தானும் அவ்வித நோக்குடையதாகவே வளரும் எத்தகைய வாழ்க்கை நிலையைத் தேடிக் கொள்ள வேண்டுமென்பதில் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறும் கடமையும் உரிமையும் பெற்றேக்கேயுண்டு. இருப்பினும் விரும்பிய வாழ்க்கை நிலையைத் தெரிந்து கொள்ளும் அடிப்படைச் சுதந்திரத்தைப் பிள்ளைகளிடமிருந்து பெற்றேர் பறித்தெடுத்துவிடக் கூடாது.

பெற்றேரின் நடைமுறைச் செயல்களுக்கும் குழந்தைகளின் செயல்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. குழந்தையின் நடைமுறைப் போக்கில் எண்பது விழுக்காடு பெற்றேரால் உருவாக்கப்படுகின்றவையே. பாடசாலையில் ஆசிரியர்களும் நண்பர்களும் ஒரு மாணவனின் குணத்தை உருவாக்கிமுன் பெற்றேர் தம் முன்மாதிரியால் அதன் பெரும் பகுதியை உருவாக்கிவிடுகின்றனர். குழந்தை என்பது ஒரு வெள்ளைத்தாள். அதில் பெற்றேரே முதல் வரிகளை எழுதுகிறுர்கள். குழந்தை ஒரு ஒலிப்பதிவு நாடா. பெற்றேரின் பேச்சும்போக்கும் அதிலே ஆழமாகப் பதிந்துவிடுகின்றன. இதனை உணர்ந்து பெற்றேர் நடந்துகொள்ளவேண்டும்.

வீடு சீரடைந்தால் நாடும் சீரடையும். இறையன்பும் பிறர் சிநேகமும் நிறைந்த சமுதாயம் மிளிர்ந்து போட்டி பொருமைகள் மடிந்து அன்புப் பிரமாணிக்கமும் அமைதியும் நிலவி கிறிஸ்தவர் அனைவரும் கிறிஸ்துவில் இன்புற்று வாழ்வோமாக.

## மிருகங்கள் மீது. . .

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திராவுக்கு வைத்துக்கொள்ளமுடியாதபடி ஆகிவிட்டதாம் அவற்றை அனுப்ப வேண்டிய இடத்திற்கு அதாவது மிருகக்காட்சிச் சாலைக்கு அனுப்பிவைத்தார். அவற்றில் ஒன்று டின்கர் மார்ஷல் டிட்டோவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

நாங்கள் புலிகள் மட்டும் தான் வளர்த்தோம் என எண்ணுதீர்கள். கரடி இனத்தைச் சேர்ந்த பண்டா (Panda) என்ற மிருகத்தையும் வளர்த்தோமே!'' என்று தமது கட்டுரையொன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார் பண்டா குட்டி அஸாமில் வைத்து நேருவுக்கு வழங்கப்பட்டதாம். இந்திராவுக்கும் குழந்தைகளுக்கும்பண்டாவைப் பிடித்துப் போயிற்று காலப்போக்கில அது வளரஇன்னுமொன்றிற்கு அதனை மணம் செய்து வைத்தாராம் இந்திரா!

அவற்றின் இனிய தாம்பத்தியத்தின விளைவாகப் பல குட்டிகள் பிறந்துவிடவே இந்திரா பெரிதும் திண்டாடிப் போனுராம்.

குட்டிப் பண்டாக்களுக்குத் தாயிடம் போதிய பால் கிடைக்காததால் ஒவ்வொரு குட்டியிடமும் மன்றுடிப் புட்டிப்பாலைக் கொடுப்பார் இந்திரா

தனக்குமேல் பொறுப்புக்களும் வேலைகளும் இருநதாலும் புலி ... யு ... டா ... யு

[illegible]

ந ... வி ... த் ... ல ... டுள் ... லை ... செய்யு ... யா ... ஓ ... னர்!

வரதன்

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா
**தாய்க்குத் தலைமகன்**
(புதிய பிரதி)

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30,
4-45, 7-00
Chery Chase
MODERN PROBLEMS
(Adults Only)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
கல்யாணகுமார் - தேவிகா
முத்துராமன்
**நெஞ்சில் ஓர் ஆலயம்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
HAPPY HOOKER GOES HOLLYWOOD
(Strictly for Adults)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
—இன்று மட்டும்—
**அன்புக்கு ஒரு அண்ணன்**
(புதிய பிரதி)

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)
9-7-84
புதிய ஆங்கிலப்படம்
DEATH TRAP

**றீகல்** (யாழ். நகர்)
7th to 13 th
10-30, 2-15, 4-30, 6-30
Roger Moore as
James Bond 007
in
''MOON RAKER''
Action-packed
Bond Adventure
நுட்பமானஅதிநவீனரக
ஆயுதங்களுடன்
ஜேம்ஸ் பொன்ட்

(3—8)
**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
7-00
FORCE FIVE
International Karate
(Color)

**வெலிங்டன்**
(யாழ் நகர்)
10-30, 2-15, 4-30, 7-00
Sean Connery,
as James Bond 007
YOU ONLY LIVE TWICE

மூலப்பொருட்கள் விநியோகிக்கும் அரசாங்க தொடர்புள்ள நிறுவனத்திற்கு பின்வருவோர் தேவை.

(1) ஆங்கில தட்டச்சு/கணக்கியல் (Typing/Book Keeping)

(2) பொது லிகிதர் (General Clerk)

ஓய்வு பெற்ற அரசாங்க, தனியார் துறையினரும் விரும்பப்படுவர்.

விண்ணப்பிப்போர் சொந்தக் கையெழுத்தில், முன் சேவை அனுபவத்தையும், எதிர்பார்க்கும் ஊதியத்தையும் குறித்து 14-7-84க்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி;

நிர்வாகி
(762) மே/பா ஈழநாடு விளம்பர இல: 762
யாழ்ப்பாணம்

## அறிவித்தல்

ஸ்ரீலங்கா புகையிலைக் கைத்தொழிற்கூட்டுஸ்தாபனம் 11-07-84ல் இருந்து முன்புபோல் பீடி உற்பத்தியாளர்களுக்கு பீடிஇலை, புகையிலை விநியோகிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றது.

முன்பு கூட்டுஸ்தாபனத்தால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டவர்களுக்கு 1984ம் ஆண்டுக்கும் வழங்கப்படும் புதிதாக அனுமதிப் பத்திரம் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

நிர்வாகி
**ஸ்ரீலங்கா புகையிலைக்கைத்தொழிற் கூட்டுஸ்தாபனம்**
**153, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
761

## தனியார் பாதுகாப்பு சேவை

**வட பிராந்திய போக்குவரத்துச்சபை**
**யாழ். சாலை, கோண்டாவில்.**

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை பாதுகாப்புச் சேவையினை தனியார் பாதுகாப்பு சேவை மூலம் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதால், பாதுகாப்புச் சேவையினை நடாத்தும் தனியார் பாதுகாப்பு சேவை ஸ்தாபனங்களிடமிருந்து

**விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன**

மேலதிக விபரங்களுக்கு:-

**பொது முகாமையாளர்,**
வட பிராந்திய போக்குவரத்துச் சபை,
பலாலி ரோட், கோண்டாவில்.

என்ற முகவரிக்கு 11-07-1984ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

**சி. கனகரத்தினம்**
**தலைவர்/தகவுடை அதிகாரி,**
**வட பிராந்திய போக்குவரத்துச் சபை.**
760

எண்ணற்ற ரசிகர்களை தன்னகத்தே வைத்திருக்கும் வீடியோ பிரசாத்தின் மாபெரும் வெளியீடுகள்.

★ ''கொம்பேறி மூக்கன்''
(தியாகராஜன், சரிதா)
★ ''தீராத விளையாட்டுப் பிள்ளை''
(மோகன், பூர்ணிமா ஜெயராம்)
(PYRAMID ORIGINAL)
★ ஸ்பரிசம் (S. V. சேகர்)
(PYRAMID ORIGINAL)

எமது அடுத்த வெளியீடுகள்
★ ''இளைய பிறவிகள்''
★ ''குழந்தை ஏசு''
★ ''அச்சமில்லை அச்சமில்லை''

பிரதிகளுக்கு விரையுங்கள்
இன்றே நீங்களும் ஓர் அங்கத்தவராகி
புதுப்புதுப் படங்களைப் பார்த்து மகிழுங்கள்
ஆங்கிலப்பட ரசிகர்களுக்கு
200க்கும் அதிகமான தெரிவுகள்

**வீடியோ பிரசாத்**
[முற்றிலும் ...ளிரூட்டப்பட்டது]
**49, முனீஸ்வரன் ரோட், யாழ்ப்பாணம்.**
763

## வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 6000 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனையாக உள்ளது. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெற்ற விண்ணப்பபடிவங்களில் முத்திரை இடப்பட்ட உறைகளில் வைத்து 11-7-84 புதன்கிழமை பி. ப. 3-00 மணிக்கு முன்பாக சங்க காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்கிற்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர பண வைப்பு ரூபா 500/-

**பொதுமுகாமையாளர்**
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்.
734

## புல்லாங்குழல் அரங்கேற்றம்



செல்வன் மதனுகரன் கரன் தயாபரனின் புல்லாங்குழல் அரங்கேற்றம் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி திறந்தவெளி அரங்கில் இம்மாதம் 11ந் திகதி மாலை நடைபெறவிருக்கிறது. புங்லாங்குழல் ஆசிரியர் திரு. எஸ். செல்வநாயகத்தின் மாணவனுகியக இவர் யாழ். பரி. யோவான் கல்லூரியில் 8ம் வகுப்பில் கல்விகற்று வருகிறார்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த அரங்கேற்றத்தில் யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா, யாழ். பரி.யோவான் கல்லூரி அதிபர் திரு. ஈ. சீ. ஆனந்தராஜன் திருமதி எஸ். இராசலிங்கம் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவார்கள்.

செல்வன் ம. தயாபரன் யாழ். பல்கலைக்கழக புவியியல் விரிவுரையாளர் திரு. ஆர். மதனுகரன் யாழ். நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை ஆசிரியை திருமதி பாலேஸ்வரி மதனுகரன் ஆகியோர்களின் சிரேஷ்ட புதல்வனுவார்.

(அரியாலை நிருபர்)

## யாழ். ரோட்டரிக் கழக புதிய தலைவர் இன்று பதவி ஏற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டறிக்கழகத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரோட்டேறியன் எஸ்.பாலேந்திரா தலைவர் பதவி ஏற்கும்வைபவம் இன்று காலை10மணியளவில் ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு தலைவராக இருந்த யாழ். சிறைச்சாலை அதிபர் ரோட்டேறியன் எஸ். சத்தியமூர்த்தி தமது பதவிக் காலத்தில் ஆற்றிய சமூக சேவைகள் பற்றிய அறிக்கையை மேற்படி வைபவத்தில் சமர்ப்பித்து உரைநிகழ்த்துவார்.

யாழ். ரோட்டறிக்கழகத்தினுல் யாழ். நகரில் பசும்புல் வெளியைக்கொண்ட கிரிக்கட் மைதானம்அமைக்க 10ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டது; பாடசாலைப்பிள்ளைகளுக்கு 15 ஆயிரம் ரூபாபெறுமதியான புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தது; சாவகச்சேரி மகளிர் கல்லூரியில்சிறுவர்பாடசாலை அமைக்க 7,500 ரூபா வழங்கியது; புத்தூர், அரியாலை போன்ற பல இடங்களில் இலவசமாக நடமாடும் வைத்தியசேவை உட்பட பல சேவைகளை ரோட்டேறியன் எஸ். சத்தியமூர்த்தி தலைவராக இருந்தகாலத்தில் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

நெருக்கடியான அக்காலகட்டத்தில் மேற்படி சேவைகளை கூட மிகவும் சிரமப்பட்டே செய்யவேண்டியிருந்தது என்றும் அவர் தெரிவிக்கிருர் (மா)

## யாழ்.இந்து ஆரம்பபாடசாலை விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்பபாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் பிரதம கல்வி அதிகாரி திரு. வே. சபாநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி புஸ்பவதி சபாநாயகம் பரிசுகளை வழங்குவார்.

## முன்னுள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இந்தவழக்குதொடர்பாக எதிர்காலத்திலும் நான் நீதிமன்றம் வரப்போவதில்லை. என்னை இதேமுறையில்தான் அழைத்துவரவேண்டும்' என்று கருணுநிதி அங்கு தெரிவித்தார்.

வழக்கை அடுத்தமாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி ''கருணுநிதி முன்னுள் முதலமைச்சர்என்பதால் அவர் இந்த மாநிலத்தை விட்டு எச்கும் ஓடமாட்டார்'' என்ற காரணத்தினுல் அவரைவிடுதலை செய்து அடுத்த தவணை ஆஜாராகும்படி குறிப்பிட்டார்.

கருணுநிதி அவர் இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டபோது தி. மு. க. தொண்டர்கள் கற்களை வீசியதினுல் 7 பொலிசார் காயமடைந்துள்ளனர். அவர்கள் மோட்டார் காரொன்றுக்கும் தீவைத்து ஆர்பாட்டம் செய்தனர். இது தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மு. கருணுநிதி வெளியிட்டுள்ள தகவலில் பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ததில் 6 பேர் காயமடைந்துள்ளதாக'' தெரிவித்தார். இச்செய்தியை பொலிசார் மறுத்துள்ளனர்.

கருணுநிதி கைது செய்யப்பட்டது தொடர்பாக மதுரையிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுள்ளன. (சூ)

## யாழ். பொதுசன நூலகத்திற்கு மிகுதி நூல்களையும் அனுப்ப தமிழக அரசு முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலகத்திற்கு தமிழ்நாடு அரசு ஒதுக்கிய 5 லட்சம் ரூபா நூல்களில் மிகுதி நூல்களை வாங்கி அனுப்ப முடிவு செய்துள்ளதாக தமிழ்நாடு அரசு இணைச் செயலாளர் யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ். பொதுசன நூலக திறப்பு விழாவின் போது, ஆணையாளர் திரு சிவஞானம் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி.இராமச்சந்திரனுக்கு கடிதமொன்றை எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில், பொதுசன நூலகத்தை திரு அ.அமிர்தலிங்கம் திறந்து வைக்க விருப்பதாகவும், அத்தருணத்தில் தமிழ்நாடு ஒதுக்கிய 5லட்சம் ரூபா நூல்களில் ஒருபகுதியை இந்திய ஸ்தானிகர் திரு சத்வால் மூலம் நேரில் கையளிக்க கோரியிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். மிகுதி நூல்களை அனுப்ப அதிகாரிகளை பணிக்குமாறும் கேட்டிருந்தார்.

யாழ். பொதுசன நூலகத்திற்கு, தமிழக அரசு 5லட்சம் ரூபா நூல்களில் ஒரு பகுதியை ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது என்றும் மிகுதி நூல்களை வாங்கிஅனுப்புமாறு தமிழ்நாடு பொதுநூலக இயக்குனருக்கு பணிக்கப்பகிடுள்ளதென்றும், கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## விம்பிள்டன் பெண்கள் சம்பியன்

(விம்பின்டன்)

லண்டனில் நடைபெறும் பெண்களுக்கான விம்பிள்டன் டெனிஸ் போட்டியில்அமெரிக்காவைச் சேர்ந்த மார்ரினு நவரககிலோவா இன்னெரு அமெரிக்க விராங்கனையான கிறிஸ்தவ லோயிட்டை தோற்கடித்து 5 வது தடவையாசவும் வெற்றிபெற்றுள்ளார். (சூ)

## இலங்கை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையும் இல்லை என புளோரிடாவில் மியாமி நகரிலுள்ள மேற்படி போட்டி அமைப்பினர்கள் மறுத்துள்ளனர்.

இலங்கை அழகிக்கு வீட்டு நினைவு அதிகரித்துவிட்டது; ஆரம்பத்திலிருந்தே அவர் மகிழ்ச்சியாக இருக்கவில்லை என்று அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம் அமெரிக்காவிலுள்ள ஈழம்தமிழர் கழகத்தின் தலைவர் இச்சம்பவம்பற்றி கருத்து சொல்கையில்; இது வெறும் கட்டுக்கதை, நாம் எவருக்கும் எப்போதும் இங்கு இடைஞ்சல் ஏற்படுத்தவில்லை. அப்படி செய்ய எண்ணவும் இல்லை. அதுஎங்கள் பாணியுமில்லை என்று தெரிவித்துள்ளர்.

## சங்கிலி கொள்ளை வழக்கு

(யாழ்ப்பாணம்)

சங்கிலி கொள்ளை வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் எடுக்கப்பட்டு இம் மாதம் 20-ம் திகதிக்கு ஒத்தி போடப்பட்டது.

இவ்வழக்கில் கோண்டாவிலைச் சேர்ந்த ரி. சி. பாலசுந்தரத்தின் தங்கச் சங்கிலியைக் கொள்ளையடித்ததாக மூன்று இளைஞர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ்.லோகசுந்தரமும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினமும் 3ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர்.விசுவநாதனும் ஆஜரானுர்கள்.

## டெலிக்கா

(1-ம் பக்கத் தொடர்ச்கி)

அச்செழுத்துக்கள் வார்க்கும் தொழிற்சாலை உரிமையாளரான ஏ. என். திருக்குமரன் என்பவருக்குச் சொந்தமானது இந்தவான்.

கடந்த 5ம் திகதி நண்பகல் நாவலர் வீதியிலிருந்து வான் சாரதியான அன்ரன் என்பவர் மதியஉணவுஎடுத்துக்கொண்டு மேற்படி தொழிற்சாலைக்குச் செல்லும்வழியில், இனம் தொரியாத இருநபர்கள் வானைத்தடுத்து நிறுத்தி, சாரதியைப்பயமுறுத்தி கீழே இறக்கிவிட்டு, மீண்டும் கொண்டுவந்துதருவதாக எடுத்துச் சென்றனராம். கடத்தப்பட்ட வான் இதுவரைவந்து சேரவில்லையாம்.

இந்தவான் கடத்தப்பட்டது சம்பந்தமாக யாழ். பொலிசில் புகார்செய்யப்பட்றுள்ளது. (மா)

## தமிழர்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''அண்மையில் பல்கலைக் சுழகங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்கு சில தொழில் சங்கங்களே காரணமாக உள்ளன. இந்த அசம்பாவிதங்கள் தொடர்பாக விசாரணை செல்வதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்குமாறு பலர் வலியுறுத்தியுள்ளனர். ஆனுல் அவ்வாருன தொரு ஆணைக்குழு நியமிக்சப்படாது'' என்றும் அவர் தெரிவித்தார்.

## ரூபவாஹினியில் இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

ஜுலை 8 ஞாயிறு (இன்று)

மாலை

9 50 வெளிநாட்டுச் செய்தி விமர்சனம்

9ந் திகதி திங்கள்

மாலை

7-15 கலையரங்கம் புதுமோடி நாடகப்பாகம் 2

10ந் திகதி செய்வாய்

மாலை

6-30 உள்ளூர்த் தமிழ்த் திரைப்படம் வாடைக்காற்று பாகம்- 3

11ந் திகதி புதன்

மாலை

5-30 இது உங்கள் நாடு

6-00 'மலரும் அரும்புகள்' (சிறுவர் நிகழ்ச்சி)

8-45 வாரமத்தித்திரைப்படம்: 'அனுதை ஆனந்தன்'

12ந் திகதி வியாழன்

மாலை

6-45 பௌத்தமதப் பேச்சு (தமிழ்)

13ந் திகதி வெள்ளி

மாலை

6-00 விளையாட்டுப்பயிற்சி தமிழ்

ஜுலை 11ந் திகதி முதல் மாதமிருமுறை (2ம் 4ம் புதன் கிழமைகளில்) மலரும் அரும்புகள் என்னும் தலைப்பில் சிறுவர் நிகழ்ச்சி இடம் பெறும்.

## இன்று

(வண்ணர்பண்ணை)

மண்டைதீவு பனம்பொருள் உற்பத்தியாளர் ஐக்கியநாணய சங்கத்தின் உற்பத்தி கொள்வனவு விற்பனவு நிலையத்திறப்பு விழா இன்று மண்டை தீவில் நடைபெறுகிறது.

இந்திய பனைத் தொழில் நிபுணர் திரு. கே. சம்பந்தம் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு, நடராசா, தொலதிபர்திரு.க. கனகராசா வேலணை உ. அரசாங்கஅதிபர் எஸ். சடாற்சர சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

## காவலூர் கவிஞருக்கு பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

காவலூர் கவிஞர் ஞா. ம. செல்வராசாவின் சேவைநலம் பாராட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் புனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் திரு ஆ.சபாரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

திரு ஆ. ஜெகராசசிங்கம், எஸ்.எம்.யோசவ், எஸ்.உதயகுமாரன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். காவலூர் இலக்கிய வட்டம் இந் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

## யாருடையது

யாழ் ஈவலர் வீதியில் திரு ரி.விஜயபாலன் என்பவர் ஒரு யமகா சயிக்கிள் திறப்புக் கோர்வையையும் யாழ். கல்லூரி வீதிதிரு.ஏ.சிவகுமாரன் என்பவர் வவுனியா மாவட்ட அபிவிருத்தி சபைக்குரிய புரூேக்கிரும் பையையும் கொக்குவிலை சேர்ந்த திரு.ச. மனேபாலசிங்கம் என்பவர் சாவகச்சேரி நாவலடி வீதியில் திரு.செல்லையா சபாரத்தினம் என்பவரின் அடையாள அட்டையையும், யாழ்ப்பாணம் திரு.எம்.தியாகராசா என்பவர் இணுவில் மேற்கைச்ன் சேர்ந்த திரு. சுவாமிநாத சிவகணநாதன் என்பவரின் அடையாள அட்டையையும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## பொதுக்கூட்டமும் கருத்தரங்கும்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பணியாளர் நலன்புரிச்சங்க வருடாந்த பொதுக்கூட்டமும், கருத்தரங்கும் இன்று காலை செ. பத்திநாதர் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக சங்கத்தலைவர் சி. சிவமகாராஜாவும் கூட்டுறவாக்க உதவி ஆணையாளர்கள் மு. கந்தையாவும், இ. ஜெகநாதாவும் கலந்துகொள்கின்றனர்.

## மரண அறிவித்தல்
### சுப்பிரமணியம் அபேதானந்தன் (சின்னத்தம்பி)

திருநெல்வேலி யாழ்ப்பாணம் ஐக்கியவியாபாரச் சங்க ஊழியன் சுப்பிரமணியம் அபேதானந்தன் (சின்னத்தம்பி) காலமானுர்.

இவர் சுப்பிரமணியம் பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும், சச்சிதானந்தன், சர்வானந்தன் (பிரான்ஸ்) செல்வராசா பெண்தவமலர் ஆகியோரின் அன்புத் தம்பியும், சிதம்பரப்பிள்ளை கைம்பெண் கண்மணியின் அன்புப்பேரனும் ஆவர். அன்னுரின் பூதவுடல் திருநெல்வேலிச்சந்திபலாலி வீதியிலிருந்து இன்று (8-7-1984) ஞாயிற்றுக்கிழமை மாலை தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றுர் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

778 சி. சுப்பிரமணியம்

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜுலை மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49. Telegram Eelanadu. Telephone: 22389 — 24126.